உ

# "அம்பல நாதம்"



ஓய்வுநிலை கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்

## திரு.க.அம்பலவாணர்

# அம்பலநாதம்

பாராட்டுவிழா மலர்

2016

| | | |
|---|---|---|
| மலர் | : | அம்பலநாதம் |
| வெளியீடு | : | 28 ஆவணி 2016 |
| தாள் | : | வெள்ளை - 70g |
| அளவு | : | B5 |
| பக்கம் | : | 96 |
| பதிப்பாசிரியர்கள் | : | திரு. வே. பாலசுப்பிரமணியம்<br>திரு. சி. கந்தசாமி<br>திரு. கா. வல்லிபுரநாதன் |
| வெளியீடு | : | மலர் வெளியீட்டுக் குழு |
| அச்சுப்பதிப்பு | : | தமிழ்ப்பூங்கா, நெல்லியடி<br>தொ.பே. - 021-2264014<br>மின்னஞ்சல் - tamilpoonka@gmail.com |
| பிரதிகள் | : | 200 |
| மலர் அனுசரனை | : | திரு. திருமதி. சின்னராஜா |

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சமயக்குருமார்களின் ஆசிகளோடு எங்கள் அம்பலவாணர் | 1 - 2 |
| 2. | கல்வித் துறையாளர் பக்கமிருந்து எங்கள் அம்பலவாணர் | 3 - 17 |
| 3. | உறவினர் பார்வையில் எங்கள் அம்பலவாணர் | 18 - 21 |
| 4. | மாணவர் பார்வையில் எங்கள் அம்பலவாணர் | 22 - 41 |
| 5. | கிராமத்தினர் பார்வையில் எங்கள் அம்பலவாணர் | 42 |
| 6. | அம்பலநாதத்தில் புலமையாளர்கள் | 43 - 92 |
| 7. | அம்பலவாணர் மனநிறைவு தந்த நிகழ்வுகள் | 94 - 95 |
| 8. | வாழ்த்துப்பா | 96 |

# வரணி இடைக்குறிச்சி சேவலப்பிட்டி கந்தசுவாமி ஆலய பிரதமகுரு வணக்கத்துக்குரிய இ. குகதாசசர்மா அவர்களின் ஆசிச்செய்தி



"தோன்றில் புகழொடு தோன்றுக"

பூவரசடிப் பிள்ளையார் - சேவலப்பிட்டி கந்தசுவாமி அருளாட்சி செய்யும் வரணி இடைக்குறிச்சிப் பதியில் தன்னலமற்ற ஆசிரியப் பணி புரிந்த திருவாளர் கந்தர் அம்பலவாணர் அவர்களுக்கு பாராட்டு விழா கொண்டாடுவதை அறிந்து பெரு மகிழ்வடைகிறேன்.

ஆலயத்தின் திருவிழா உபயகாரரான ஆசிரியர் திரு. க. அம்பலவாணர் அவர்கள் ஆலய வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடுடையவர். ஊர் மாணவர்களை கல்வியில் மேலோங்கச் செய்ய வேண்டுமென்ற விருப்பில், எடுத்த முன்முயற்சி பெரு வெற்றி கண்டுள்ளது. அவர்களால் வழிகாட்டப்பட்டவர்கள் இன்று எடுக்கும் பாராட்டு விழா சிறப்புற அமைய வேண்டும். விழா சிறப்புறவும், ஆசிரியரும் அவரின் உறவுகளும் எல்லா நலமும் பெற இறை ஆசி வேண்டி வாழ்த்துகிறேன்.

"லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து"

பிரதமகுரு

***இ. குகதாசசர்மா***


வரணி இடைக்குறிச்சி

சேவலப்பிட்டி கந்தசுவாமி கோவில்

வரணி,

இலங்கை.

## ஆசிச்செய்தி



"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி
ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து"

ஒருவனுக்கு அவன் ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது அப்பிறப்போடு போகாது ஏழு பிறவிகளிலும் தொடர்ந்து செல்வதாகும். அந்த வகையிலே, வரணிப் பதியிலே கந்தர் அம்பலவாணர் பிறந்து ஆரம்பக் கல்வியை இடைக்குறிச்சி சுப்ரம்மணிய வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை வடவரணி சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் உயர்நிலைக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நிறைவு செய்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் (B.A) இளங்கலைமானி பட்டத்தினை பெற்று ஆசிரியராக, அதிபராக, அதிலே உயர்ந்து கோட்டக்கல்வி அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் அவர்கள் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் சமூக சேவையை மேற்கொண்டவண்ணம் உள்ளார். அந்த வகையில் சமூக சேவையை தொடர்ந்து புரிவதற்கு அவர் நலமாகவும், தேக ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல சுட்டிபுரம் பதி உறை கண்ணகை அம்பாளை பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகிறேன்.

***சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக் குருக்கள்***
ஸ்ரீ சக்தி கிரியா குருமணி
பிரதம குரு
சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம்,
வரணி.

# வாழ்த்துச் செய்தி



முன்னாள் கரவெட்டிக் கோட்டக்கல்வி அதிகாரி திரு.க.அம்பலவாணர் அவர்கள் ஆற்றிய ஆசிரியரப் பணியினை நினைவு கூருமுகமாக நடைபெறும் பாராட்டு விழாவினையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

திரு.க.அம்பலவாணர் அவர்கள் ஆசிரியராக தனது கல்விப் பணியனை ஆரம்பித்து அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாக தனது பணியினைச் சிறப்புடன் ஆற்றியுள்ளார். நுவரெலியா மாவட்டத்தல் ஆசிரியப்பணியினை ஆரம்பித்து தனது பணியின் சிறப்புக்புகாரணமாக அதிபராக கோட்டக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வுளைப் பெற்றவராவார்.


கலைமாணிப் பட்டதாரியான இவர் தனது பட்டப்படிப்பின் பின்பு மாணவர்களுக்கு பிரத்தியோக வகுப்புக்களை நடாத்தி பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிவகுத்தார். இவரிடம் பயின்ற மாணவர்கள் இன்று ஆசிரியராக அதிபராக மற்றும் பல்வேறு உயர் தொழில்களை ஆற்றுபவர்களாக உள்ளனர்.

தனது சேவைக் காலத்தின் இறுதிப்பகுதியில் கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரியாக இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. அனைவருடனும் நல் உறவைப்பேணி இன்முகத்துடன் ஆற்றிய பணிகள் கரவெட்டிச் கோட்டப் பாடசாலைகளை சிறந்த நிலைக்கு இட்டுச் சென்றமையை நாம் மறந்து விடமுடியாது.

ஓய்வில் சென்று பல ஆண்டுகள் கடந்தும் இன்றும் இவர் ஆற்றிய பணிகள் அனைவராலும் நினைவுகூரப்படுவது பாராட்டப்பட வேண்டியதாகும். இவர் தனது வாழ்வில் நோய் நொடியின்றி மகிழ்வுடன் வாழ வாழ்த்தி இவர் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ. உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

# சிறந்த ஆளுமையுடைய கல்வியியலாளர்



வசதிகள் குறைந்த வரணிப் பிதேசத்திலிருந்து கற்றலில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்றுப் பட்டம் பெற்றுப் பொருளியயில் பாடத்தை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்து உயர் பெறுபேறுகளை ஈட்டிய ஆசிரியராகத் திகழ்ந்தவர் எமது ஓய்வுநிலைக் கரவெட்டிக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.க.அம்பலவாணர் ஆவார். அவரது அதிபர் சேவை சிறப்புற இருக்கக் காரணமானவை அவரது பாடப் பாண்டித்தியம், முரண்படாத தன்மை, நெகிழ்ச்சித் தன்மை என்பனவாகும். இத்தன்மைகளுக்குக் காரணமான அவரது ஆசிரியர்களையும் பெற்றோரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்ட வேண்டும். ஒரு தசாப்த காலத்திற்கு மேலாகக் கஷ்டப்பிரதேசத்தின் விருப்புடன் கற்பித்த மாணவர்களில் உயர் பெறுபேற்றைப் பெற்றமை அவரத சொந்தப் பிள்ளைகள் கல்வியில் உயர்வாக வந்தமைக்கு ஒரு காரணமாகும். “தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தார் காணப்படும்” என்னும் குறளுக்கு மிகவும் பொருத்தமானவர் திரு.க.அம்பலவாணர் ஆவர். ஒரு சிறந்த கல்வியியலாளனான திரு.க.அம்பலவாணர் சிறந்த அதிபராக இருந்தமையால் ஏனைய அதிபர்களுக்கு வழிகாட்டியாக இருக்கக் கூடிய கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றினார். ஒரு தசாப்தகாலம் தனது உயர் அதிகாரிகளினதும் அதிபர்கள் ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.க.அம்பலவாணர் கல்வியுலகிலிருந்து ஓய்வு பெற்றமை ஓர் இழப்பாகும். அவர் தமது ஓய்வு காலத்தில் சிறந்த ஆரோக்கியத்துடன் இருந்து தொடர்ந்தும் கல்விக்குத் தொண்டாற்ற வேண்டும் அவர் தம் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய எனது வாழ்த்துக்கள்.

**வே.தி.செல்வரத்தினம்**
ஓய்வு நிலைப் பிரதிச் செயலாளர்
மாகாணக் கல்வி அமைச்சு
வடமாகாணம்.

# அர்ப்பணிப்புமிக்க சமூகசேவையாளன்




நான் கரவெட்டிப் பிரதேசசெயலாளராக கடமையாற்றிய காலத்தில் திரு.க.அம்பலவாணர் அவர்கள் கரவெட்டி கோட்டப்பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார். எமது பிரதேசத்தில் நடைபெறும் அபிவிருத்திசார் கலந்துரையாடல்கள், கூட்டங்கள் மற்றும் கலை கலாசார வைபவங்கள் அனைத்திலும் அவரது பங்களிப்பு இருக்கும். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் ஆதரவாகவும் பழகி தனது இனிய பேச்சுக்களினால் எல்லோர் மனதிலும் ஆழமான இடத்தினை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட சமூகம்சார் வேலைத்திட்டங்களில் கல்வித்துறைக்கான திட்டங்களிற்கு தனது ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் பங்களிப்பினையும் வழங்கி அவற்றின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலிற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கியமை பாராட்டத்தக்கதாகும்.

"நிறைகுடம் தளம்பாது" என்ற வாசகத்திற்கு அமைவாக எளிமை, சமநிலை ஆளுமைப்பண்பு, நேர்மை, பக்கச்சார்பின்மை போன்ற உயர்ந்த பண்புகளை கொண்டவராகவும் "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கு அமைவாக தனது கடமையில் அதிக அக்கறையும் சமூகப்பற்றும் உடையவராகவும் தனது செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து கரவெட்டிப் பிரதேச பாடசாலைகளின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள், பௌதீகவளங்களைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய கல்விசார் அபிவிருத்தித் திட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி மாணவர்களின் அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்கு அயராது பாடுபட்ட திரு.க.அம்பலவாணர் அவர்களின் மகத்தான சேவையினை பாராட்டுவதுடன் அவர் இன்னும் நீண்ட காலம் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம்வல்ல தச்சன்தோப்பு ஸ்ரீசிந்தாமணி விநாயகப்பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப்பிரார்த்திக்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
செயலாளர்
மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப,
கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி
மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு
வடமாகாணம்.

# ஆளுமை மிக்க கோட்டக் கல்விப் பணிப்பாளர்



அன்பு, அறிவு, அமைதி, நேர்மை நிறைந்த கோட்டக் கல்விப் பணிப்பாளராக திகழ்ந்தவர் திரு.க.அம்பலவாணர் அவர் தம் ஆசிரியப் பணியை நுவரெலிய வெலிமட தமிழ் மகா வித்தியாலத்தில் ஆரம்பித்து யா/வரணி மகா வித்தியாலயம் மற்றும் யா/கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரியில் தொடர்ந்தவர். நான் அவரைப் பொருளியல் ஆசானாக சந்தித்தேன். பொருளியலை மிகவும் நுட்பமாகவும் தெளிவாகவும் மாணவர்களுக்கு கற்பிக்கும் திறன் பெற்றவர். பின்னர் கரவெட்டியில் புகழ் பூத்த விக்கினேஸ்வராக் கல்லூரியில் ஆறு ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றியவர். இவரது காலத்தில் விக்கினேஸ்வரக் கல்லூரியின் நூறாண்டு விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்களின் அன்பையும் பாராட்டைப் பெற்றவர். விக்கினேஸ்வரக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் திரு.க.அம்பலவாணரும் இடம் பெறுவார் என்பதில் ஐயப்பாடில்லை.


"எண்ணிய ஏண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்பது வள்ளுவர் வாக்கு. அம்பலவாணரும் தம் கடமையைச் சிறப்பாக ஆற்றியவர் ஒப்படைக்கப் பட்ட பணியை பொறுமையாகவும் சிறப்பாகவும் முடிக்கக் கூடிய அற்றல் கொண்டவர் கடமை கண்ணியம் கட்டுப்பாட மிக்கவரான திரு.க.அம்பலவாணரின் ஓய்வுக் காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டிக் கொள்கின்றேன்.

திரு.க.அம்பலவாணர் மீது அன்பும் விசுவாசமும் கொண்ட வரணியூர் பழைய மாணவர்கள் தமது ஆசானுக்கு எடுக்கும் பாராட்டு விழா சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன். பாராட்டு விழா எடுப்பவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே!

**சி.சிவராஜா**
ஓய்வுநிலை மேலதிக மாகாணக்
கல்விப் பணிப்பாளர்.

# வரணியின் அகரமே வாழிய பல்லாண்டு



வரணியிலே தோன்றி வளமான கல்விபெற்று
தரணி புகழும் நல்லாசானாய்ப் பணியாற்றி
ஏழை மாணவரின் ஏணியாய் இருந்திட்ட
வரணியின் அகரமே வாழி நீ பல்லாண்டு.

கிராமத்து அடையாளங்களை தன்னகத்தே தாங்கிய வரணியிலே சாதாரண விவசாயக் குடும்பத்திலே தோன்றிக் கல்வியால் உயர்ந்து கணக்கிலா மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் திரு.க. அம்பலவாணர். அறுபத்தாறு அகவை காணும் அம்மபவவாணரின் ஆசிரியப்பணியைப் பாராட்டும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமையடைகிறேன்.


வரணியின் ஞானவிளக்கான அம்பலவாணரால் வடிவமைக்கப்பட்ட மாணவர்கள் பலர். பட்டப்படிப்பை முடித்து வெளியேறியதும் தனது வீட்டையே திண்ணைப் பள்ளியாக அவர் மாற்றினார். இப்பள்ளியை நாடிய மாணவர்களுக்கு அறிவுப்பசிபோக்கும் ஆலயமாக இவரது இல்லம் மிளிர்ந்தது. க.பொ.த. (சா.த) வகுப்புக்குரிய அனைத்துப் பாடங்களையும் போதிக்கும் ஆற்றலுடையவராக அம்பலவாணர் விளங்கினார். க.பொ.த. (உ..த) வகுப்பில் அக்காலப் பகுதியில் நான்கு பாடங்களையும் கற்பித்துப் பல மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்ல வழிகாட்டிய பெருமைக்குரியவர் திரு. அம்பலவாணர். இத்தகு ஆற்றல் நிறைந்த ஆசிரியர் ஒருவர் கூட இப்போது எம்மண்ணில் இல்லையெனலாம்.

1976 ஆம் ஆண்டு திரு. அம்பலவாணர் நுவரெலிய மாவட்டத்தில் ஆசிரியராக நியமனம் பெற்றதும், அவரது இல்லத்தில் இயங்கிய பள்ளி தற்காலிகமாக மூடப்பட்டது. நுவரெலிய மாவட்டத்தில் ஆசிரியப்பணியை ஆரம்பித்த திரு. அம்பலவாணர் 16 ஆண்டுகள் பல பள்ளிகளில் ஆசிரியப்பணி புரிந்தார். தனது கிராமத்தில் வரணி மகா வித்தியாலயத்தில் நான்கு ஆண்டுகள் கல்விப் பணியாற்றி மீண்டும் தனது கிராமத்து மாணவர்கள் பலர் பல்கலைக் கழகம் செல்ல வழிகாட்டினார்.

1991 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் I இல் அவர் சித்திபெற்று கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி அதிபராக பதவியுயர்ந்தார். சுமார் 6 ஆண்டுகள் இக்கல்லூரி அதிபராகவிருந்து பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டினார். அவரது பயன்மிகு கல்விப் பணியினால் 2000 ஆம் ஆண்டு கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்று 10 வருடங்கள் பழுதிலாப் பணி செய்தார்.

சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் பாராட்டப்படுவதை நான் அரிதாகவே கண்டுள்ளேன். இத்தகு அரியவாய்ப்புப் பெற்ற அம்பலவாணர் இம்மண்ணில் என்றும் நிலைத்திருப்பார்.

**வ. செல்வராசா**
ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.



# அம்பலவாணர் என்ற நல்லாசான்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா நிகழ்ச்சியொன்றில் பேசும்போது, "க.பொ.த. (உயர்தர) கலைப்பிரிவில் ஒரே ஆசிரியரிடம் நான்கு பாடங்களையும் கற்று பல்கலைக் கழகம் பிரவேசித்த மாணவர்கள் வரணிப் பகுதியில் இருந்துதான் பிரவேசித்திருப்பார்கள்". எனக்குறிப்பிட்டார். அந்த நான்கு பாடங்களையும் கற்பித்த நல்லாசான் திரு. க. அம்பலவாணர் என்பதையும் அவர் குறிப்பிடத்தவறவில்லை. ஆசிரியர் ஒருவர் தனது துறைசார்ந்த பாடம் தவிர்ந்த இன்னொரு பாடத்தைக் கற்பிப்பதில் உள்ள இடர்பாடுகளை ஆசிரியத்தொழிலில் உள்ளோர் உணர்ந்திருப்பர். இதற்கு எவ்வளவு தூரம் முன்னாயத்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்பதையும் அனுபவவாயிலாக அறிந்திருப்போம். அண்மையில் இவரது மாணவன் ஒருவன் க.பொ.த. (சாதாரண) தரத்தில் தான் இவரிடம் எட்டுப்பாடங்களையும் பிரத்தியேக வகுப்பில் கற்றதாகக் குறிப்பிட்ட போது, நான் மிக்க ஆச்சரியம் அடைந்தேன். அது உண்மை என்பதனையும் உறுதிப்படுத்திக் கொண்டேன்.

வரணிப் பகுதி கிராமங்களுக்கே உரித்தான அடையாளங்களுடன் திகழும் ஒரு பிரதேசம். யுத்த அனர்த்தத்தின்போது, அப்பிரதேசத்தில் புகலிடம் பெற்றிருந்ததையும் எம்மால் மறக்க முடியாது. அக்காலப் பகுதியில் அப்பிரதேச மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்களும் எனக்குக் கிட்டியது. அப்பிரதேசமும், அங்கு வாழும் மக்களின் நற்பண்புகளும் என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தன. தவிர, அப்பிரதேசத்தைச் சேர்ந்த பல ஆடவர்கள் எமது வடமராட்சிப் பிரதேசத்தில் திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர். இவர்களில் எவரையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. புகுந்த இடத்திலும் நல்ல பெயருடன் இன்றும் திகழ்கின்றனர். அவ்வாறு வடமராட்சியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர் தான் திரு. க. அம்பலவாணர் அவர்கள்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பல பிரபலமான பாடசாலைகள் இருந்த போதும் தனது ஊரின் மீது கொண்ட அபிமானம் காரணமாக இடமாற்றம் பெற்றுவந்த போது வரணி மகா வித்தியாலயத்திலேயே தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். மாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்பில் கற்பித்து தனது ஊர் அபிமானத்தை வெளிப்படுத்தினார். தனது மூன்று தசாப்தத்திற்கு மேற்பட்ட கற்பித்தல் பணியில் இரு தசாப்த காலத்தை வரணிப் பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அர்ப்பணித்துள்ளார்.

இவர், கரவெட்டிப் பிரதேசத்தில் இருந்து பத்துக் கிலோமீற்றர் தொலைவில் உள்ள வரணிப் பகுதிக்கு துவிச்சக்கர வண்டியிலேயே பயணித்தார். காலக்கிரமத்தில் சிறிய ரக மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பயன்படுத்தினார். இவர் வயல்வெளியூடாகச்

சென்று வந்த பாதையோ மிக்க இடர்மிக்கது. வரணி மாணவரின் நலனை இவர் பெரிதாக மதித்தமையால், மற்ற இடர்கள் எவற்றையும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

ஆசிரியர், அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எனப் பன்முகங்களில் அவர் தமது ஆளுமையை வெளிப்படுத்தினார். ஆனால், எவ்விடத்திலும் அவர் ஆசிரியத்துவத்தையே மேன்மைப்படுத்தி உரையாடுவார்.

பிறந்த ஊரை உன்னதமாக நேசித்த இவர் புகுந்த ஊரைப் புறக்கணித்து விட்டார் எனக் கருதிவிடாதீர்கள். தனது புகுந்த ஊருக்கும் பல நல்ல பணிகளை ஆற்றியுள்ளார். கரவை ஒன்றியத்தின் அங்கத்தினராக இவர் இருந்து ஆற்றிய பணிகள் என்றும் நினைவிற்கொள்ளத்தக்கன.


திரு. க. அம்பலவாணர் அவர்கள் தனக்கென ஒரு கொள்கையை வகுத்து, அக்கொள்கை வழிநின்றவர். தனது இருபுதல்வியரையும் தான் அதிபராகக் கடமையாற்றிய பாடசாலையிலேயே கல்வி பயில வைத்து தான் பாடசாலை மீது கொண்டிருந்த அபிமானத்தை வெளிப்படுத்தியவர். தவிர, மற்ற அதிபர்களுக்கும் ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர்.

இவரின் முன்னேற்றத்தில் முன்நின்று உழைத்தவர் இவரது துணைவியார். எனது கிராமத்தைச் சேர்ந்த இவரும் எனக்கு நன்கு பரீட்சயமானவர். இவரது இழப்பு திரு. அம்பலவாணர் அவர்களின் வாழ்க்கையிலும், அவரது சேவையிலும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. இதனால், ஓய்வு பெறும் காலத்திற்கு முன்னரே தனது கல்விப் பணியை நிறைவு செய்து கொண்டார். எனினும், கல்விப் புலம் சார்ந்த தூரநோக்கை துண்டித்து விடவில்லை.

இவரது சேவையை நினைவுகூர்ந்த வரணி மக்கள் அவரைக் கௌரவிக்க வேண்டுமென எடுத்த தீர்மானம் சாலப்பொருத்தமானது. இவ்விழாவின் மூலம் இம்மக்கள் தமது நன்றியுணர்வை வெளிப்படுத்துகின்றனர். கல்விப் புலத்தில், குறிப்பாக வரணிக் கல்விப் புலத்தில் திரு. க. அம்பலவாணர் அவர்கள் என்றென்றும் நினைவு கூரப்படுவார் எனத் திடமாக நம்பலாம்.

**ஆ. ராஜேந்திரன்**
முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

# வாழ்த்துச் செய்தி



அன்புக்குரிய நண்பர் அம்பலவாணருக்குப் பாராட்டு விழா என்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அம்பலவாணர் வரணியைச் சேர்ந்தவர். வடமராட்சியை வாரி அணைக்கும் தென்மராட்சிக் கிராமங்களுள் வரணியும் ஒன்று. வரணிக்கும் கரவெட்டிக்கும் நீண்ட நெடுங்காலமாகவே சமய, சமூக, பண்பாட்டு, குடும்பத்தொடர்புகள் பரஸ்பரம் நிலவிவந்தன, நிலவிவருகின்றன.

நான் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்தவன். வயலும் சிறுபற்றைகளும் உப்பங்கழியும் தான் வரணியையும் கரவெட்டியையும் பிரித்து நிற்பன. கரவெட்டி கிழக்கில் நின்று உரத்துக் குரல் வைத்தால் அந்தக்குரல் வரணிக்குக் கேட்கும். கும்பிட்டான் குளம் பிள்ளையார் கோயில் பின்வீதியில் நின்று உரத்துக் குரல் வைத்தால் அது தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலடிக்குக் கேட்கும்.

கரவெட்டியிலே பிள்ளையார் கோயில்கள் அதிகம் பெருந்திருவிழாக்கள் நடைபெறும். வரணியில் இருந்து அடியார்கள் வயல் வெளியினூடாக நடந்துவரும் காட்சி மிகவும் இரம்மியமானது. இவ்வாறே வரணிக்குப் பல்வேறு மகத்துவத்தையும் வழங்கும் சுட்டிப்புரம் அம்மன் ஆலயத்திற்குக் கால்நடையாகக் கரவெட்டியில் உள்ளவர்கள் போய்வருவார்கள்.

இயற்கை அழகு கொஞ்சும் வரணிக் கிராமம், மா, பலா, வாழை, தென்னை என விருட்சங்கள் விருந்தளிக்கும் பூமி வரணி. வரணி வயலில் விளையும் நெல்லுக்குத் தனித்துவமானதோர் சிறப்பியல்பு உண்டு. மண்வளமும், மனவளமும் நிறைந்த வரணியிலே நீண்ட காலமாகக் கல்வி மரபு ஒன்று நிலவிவந்தமைக்கான சான்றுகள் உள. தமிழ்நாட்டுக்கும் வரணிக்கும் சமயம், கல்வி தொடர்பான சான்றுகள் நிலவியமைக்கு வரணி ஆதீனம் சான்றாக விளங்கியது. கல்வியும் கலைகளும் செழித்த பகுதியிலே பின்னர் கிறிஸ்தவத்தின் பார்வையும் படத்தவறவில்லை.

சைவத்தையும் தமிழையும் பேணி வளர்த்த வரணிக் கிராமம் பண்பிலும் பண்பாட்டிலும் உயர்ந்து விளங்கியது - விளங்குகின்றது.

இந்தப் பின்னணியிலேதான் திரு அம்பலவாணர் அவர்கள் உருவாகி வளர்ந்தவர். அவர் எனது ஊராகிய கரவெட்டியிலே திருமணம் செய்தவர். இவரது மனைவியின் தாய் தந்தையரும் எமது தாய் தந்தையரும் நெருக்கமாகப் பழகியவர்கள். பண்பும், பண்பாடும் பணிவும் நிறைந்த குடும்பத்திலே அம்பலவாணர் திருமணம் செய்தார். பண்பும் பண்பாடும் நிறைந்த இத்தம்பதியினரின் பிள்ளைகளும் பண்பும் பண்பாடும் நிரம்பியவர்கள். அம்பலவாணரின் மூத்தமகளும் எனது மகளும் நல்ல நண்பிகள். பல்கலைக்கழகத்திலே ஒன்றாகப் பயின்றவர்கள்.


ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராகப் பல்வேறு பதவிகளை வகித்தபோதிலும் "மானுடநேயம்" மிக்கவராக அவர் திகழ்ந்தமையின் விளைவாகவே இப்பாராட்டு விழா நடைபெறுகின்றது என்று எண்ணுகிறேன். நன்றி மறவாத ஒரு சமூகம் இன்றும் இருக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும்.

பலனை எதிர்பாராது அர்ப்பணிப்புடன் மாணவர்களுக்குக் கல்வியறிவூட்டியவர் என்று முன்னாள் இவரது மாணவர்களும் பின்னாள் எமது மாணவர்களாகவும் இருந்தவர்கள் பலமுறை கூறக்கேட்டிருக்கின்றேன்.

திரு அம்பலவாணர் எல்லா நலத்துடனும் என்றும் வாழ இறைவனை வணங்கி வாழ்த்திநிற்கின்றேன்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
முன்னாள் தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ் பல்கலைக் கழகம்.

# வரணி மண்ணிற்கு கல்விச் சேவையால் பெருமை சேர்த்த பெரியார்



வரணி மண்ணில் பிறந்து சென்ற இடமெல்லாம் தன் சேவைச் சிறப்பினால் மங்காப் புகழும் கௌரவமும் பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி திரு. க. அம்பலவாணர் அவர்களை எனது மேன்மைமிக்க மாணவன் என்றோ வரணி மத்திய கல்லூரியில் சிறப்புமிக்க எனது துணை அதிபரென்றோ கூறுவதில் பெருமையடைகின்றேன். அன்னாரின் பாராட்டு விழா மலருக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் அளவிலா ஆனந்தமடைகின்றேன்.

திரு. அம்பலவாணர் அவர்களின் மனம் என்றும் மாணவர் நலனையே மையமாகக் கொண்டிருந்தது. உணர்வுமிக்க உயிர் துடிப்பு நிறைந்த அனுதாபமும் ஆழ்ந்த பதிவும் கொண்ட அவர் தாம் இருந்த இடமெல்லாம் ஒளிமயமாக்கி அன்பு செய்தார். பொருளியல் கற்பிப்பதில் தலைசிறந்த ஆசிரியராக திகழ்ந்த இவர் மதிப்பு மிக்க முன்னோடியாக அதிபராகவும் கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றிய திறமையை ஏலவும் எளிதில் மறந்து விடமுடியாது. எப்பொழுதும் அவர் பதட்டம் அடைந்ததோ கடுமையாக இருந்ததோ கிடையாது. ஆணவம் மிக்க அதிகாரப் போக்கிற்கு அவர் என்றும் மாறுபட்டவராகவே இருந்தார். கொடுங்கோன்மை எந்த உரு எடுத்தாலும் அதைச் சகிக்காது எதிர்க்கின்ற குணமும் இவரிடம் இருந்து வந்தது. யாழ்ப்பாணத்து வரணியைச் சேர்ந்த இம் மகான் கல்விச் சேவைக்காக மலையகத்தில் வாழ்ந்த சூழலின் அம்மக்களின் வாழ்வியலுடன் தன்னை ஆழப்பிணைத்துக் கொண்டமை தனித்துவமானது. மலையகம் என்றாலென்ன வேறுஇடமென்றாலென்ன இவர் சென்றஇடமெல்லாம் இவர் மனைவியும் சென்று சகல விதத்திலும் ஒத்தாசை நல்கியமை இவரின் வாழ்வின் வெற்றிக்கும் கடமைச் சிறப்பிற்கும் அச்சாணியாக இருந்தது என்று கூறின் அது மிகையில்லை. மேலும் இவரின் குணநலச் சிறப்பையும் சேவைச் சிறப்பையும் எத்தனை தரம் எப்படிக் கூறினாலும் நிறைவுபெறாது. இச்சிறப்பின் பெருமையை எடுத்துக்காட்டுவதற்கு முத்தான இரு பிள்ளைகளை கடவுள் இவருக்குக் கிடைக்கச் செய்திருக்கின்றார். வைத்திய கலாநிதியாக அவர்கள் செய்யும் சேவைகள் நாடறிந்ததே. திரு. அம்பலவாணர் அவரகளின் போற்றக்கூடிய இப்பண்புகளில் மேலாக எண்ணக்கூடியது - கள்ளங்கபடமற்ற அவரது நேர்மையும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையுமாகும். அவரைப் பற்றி மேலும் சொல்வதானால் -

காண இனியன் - கதைப்பதற்கு மா இனியன் - வஞ்சமில்லா நெஞ்சன் - வரணிக்கு புகழ்சேர்த்த பெரியான். என்றும் இச்சிறப்போடு சுகத்தோடு நீண்டு வாழ அன்போடு வாழ்த்துகிறேன்.


**சிற்றம்பலம் துரைராசா**

முன்னாள் வரணி கொத்தணி அதிபர்,

முன்னாள் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர்.



திருமண நாளில் தந்தை தாயுடன்...



மனைவி மற்றும் பிள்ளைகளுடன்...



பிள்ளைகள்
மருமக்களுடன்...



மணிவிழாவின்
போது...



மணிவிழாவில்...

# விக்கினேஸ்வராவிற்கு புகழ் சேர்த்த வரணி மைந்தன்



நண்பனாய், மந்திரியாய், நல் ஆசானாய், நல் அதிபராய் நான் காணும் அதிபர் அம்பலவாணர் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

வரணி, இடைக்குறிச்சியில் பிறந்து கரவெட்டியில் புகுந்து பிறந்த மண்ணிற்கும் புகுந்த மண்ணிற்கும் பெருமை சேர்க்கும் உயர்ந்த உள்ளம் கொண்டவர் நல் ஆசான் ஒருவர் தான் நல் அதிபராக முடியுமென்பதை ஊர் போற்றும் படியாக செயலில் காட்டியவரெனின் மிகையாகாது.

மண் பற்று, குடும்ப பாசம், கல்லூரிப் பற்று, அறநெறி வாழ்வு வாழும் மனிதம் நிறைந்த மனிதனாக எம்முன் காட்சி தருபவர்.

படோபகாரமற்ற வாழ்வு, மென்போக்கு, மற்றோரை மதிக்கும் பண்பு, எதிரியையும் நண்பனாக மதிக்கும் மனப்பாங்கு என்பன அதிபரின் அணிகலன்கள் எமது ஊரில் பெரியோர்கள் கூறுவர். "மிதித்த புல் சாகாது" இது அதிபர் அம்பலவாணருக்கு முற்றிலும் பொருத்தமானதே.

அதிபர் சேவையில் அவர்களின் கூடிய காலம் விக்கினேஸ்வராக் கல்லூரியுடன் கழித்தவாறு தனது இரு பிள்ளைகளையும் அக்கல்லூரியில் சேர்த்து அவர்களுக்கு ஊடாக வேறு பிள்ளைகளையும் கல்லூரியை நாடச்செய்து பல்துறைகளிலும் எங்கள் கல்லூரியை பெருமையடையச் செய்தார் என்றால் மிகையாகாது.

கல்லூரியின் பெயரை தனது சேவைக்காலத்தில் இத்தரணியில் நிலை பெறச்செய்தது மாத்திரமன்றி தொடர்ந்தும் அவ்வாறு அமைய வேண்டுமென நன் மனம் கொண்டு செயற்பட்ட அதிபராவார். கல்லூரி ஆசிரியர்களுடன் அன்பாகப் பழகி ஒரு குடும்பமாக ஆசிரியர்களைச் செயற்பட வைத்தவர். சக ஆசிரியர்களின், மாணவர்களின் இன்ப துன்பங்கள் யாவற்றிலும் கலந்து அவர் தம் மனங்களில் தனது பெயரை நிலைநாட்டியவர் எங்கள் அதிபராவார்.

ஒருவர் தனக்கு கிடைத்த பதவியை எவ்வாறு மதித்து சிறப்புற செய்தாரென்பது அவர் தம் பிள்ளைகளின் இயல்பு கொண்டு மதிப்பிடலாம். ஆண்டவன் அவருக்களித்த பிள்ளை செல்வங்கள் இரண்டும் விக்கினேஸ்வராவின் சொத்துக்கள் இன்று ஆண்டவன் அவருக்கு கொடுத்த உயர்ந்த சீரிய வாழ்வு, அதிபருக்கும் அவர்களை வளர்த்தெடுத்த கல்லூரிக்கும் பெருமைப்படும் ஒன்றாக அமைகின்றது.


ஞானாசாரியார் கல்லூரியில் அதிபராக இருந்த என்னை விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு அழைத்துச் சென்று நான் கடமை ஏற்ற அன்றே மாணவர் ஆசிரியர் மத்தியில் என்னை அறிமுகம் செய்து எனக்கு அக்கல்லூரியில் சிறப்புற கடமையாற்ற தைரியம் தந்ததை இன்றும் மறக்கமாட்டேன். கோட்டக்கல்வி அலுவலராக சென்ற

போதும் கல்லூரியில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளிலும் பங்குகொண்டதோடு மட்டுமன்றி கல்லூரிக்கு தந்த அனைத்து உதவிகளும் இன்றும் எனது மனதில் நிழலாடுகிறது. கூறப்போனால் கரவெட்டி மண்செய்ய முன்பே அவர் பிறந்த மண் அவர் வளர்த்தெடுத்த செல்வங்கள் அவரைப் பாராட்டி விழா எடுப்பது எமக்கெல்லாம் மகிழ்ச்சி தடுகின்றது.

விக்னேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் என்ற வகையில் விழா எடுக்கும் அனைவரையும் பாராட்டி, அதிபர் அவர்களின் வாழ்வு, மேலும் வளம்பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**வே. சிவசிதம்பரம்**
ஓய்வு நிலை அதிபர்,
விக்னேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி.

## வரணி மைந்தனே பல்லாண்டு வாழ்க!




வரணி மண்ணிலே தனக்கென ஒரு மாணவர் பரம்பரையினரை உருவாக்கிய முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி உயர்திரு. கந்தர் அம்பலவாணர் அவர்களுக்கு அவரின் மாணவர்கள் பாராட்டு விழாவொன்றினை நடாத்துவது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. திரு. க. அம்பலவாணர் அவர்கள் யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் பழைய மாணவராவார். நானும் இப்பாடசாலையின் பழைய மாணவனும் தற்போது அதிபரும் என்ற வகையில் திரு. க. அம்பலவாணர் அவர்களின் கல்விச் சேவையைப் பாராட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்வடைகிறேன். திரு. க. அம்பலவாணர் அவர்களிடம் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. எனினும் வரணி மத்திய கல்லூரியில் சுமார் மூன்று மாதங்கள் வரை அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. கடமையுணர்வுடைய சுறுசுறுப்பான ஓர் ஆசானாக நான் அவரை அங்கு கண்டேன். எம்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணி அளப்பரியது. அவரிடம் கற்ற மாணவர்கள் பட்டங்களையும் உயர் பதவிகளையும் பெற்றுக் கொண்டதனைக் காணமுடிகிறது.

திரு. க. அம்பலவானர் அவர்கள் நண்பனாக நல்லதொரு ஆசானாக, உப அதிபராக, அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாகப் பல படிநிலைகளிலிருந்து மாணவர் சமூகத்திற்கு வழிகாட்டியுள்ளார், பணியாற்றியுள்ளார். அவரின் பணி தொடர்ந்து எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு நீண்ட ஆயுளையும் சிறந்த தேகாரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல பூவரசடி விநாயகனை வேண்டிக்கொள்வதோடு அவர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன். மேலும் அவர் புகழ் தாங்கிவரும் பாராட்டு விழா மலரும் சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்.

**திரு. சு. கோடீஸ்வரன்**<br>
அதிபர்,<br>
யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்<br>
வரணி

# வரணி மண் பெற்றெடுத்த தன்னலம் கருதாத கல்விக் கொடை வள்ளலான வரணியின் ஒளிவிளக்கே வாழி!



இலங்கையின் வடபுலத்தே யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சியில் வந்தாரை வாழ வைக்கும் புகழ் பூத்த வரணி மண்ணில் இடைக்குறிச்சி என்ற கிராமத்தில் 1950 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ஆம் நாள் திரு முருகர் கந்தர் திருமதி கந்தர் வள்ளியம்மைப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாகப் பிறந்த திரு அம்பலவாணர் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை யா/வரணி இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் கல்வி கற்று 1966 இல் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரக்கல்வியை யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மற்றும் யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்று 1969 இல் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்ற திரு அம்பலவாணர் அவர்கள் 1969- 1973 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பாடத்தில் சிறப்புக் கலைப் பட்டத்தினைப் பெற்று எமது பிரதேசத்திற்கான தனது கல்விப் பணியை 1974 இலிருந்து ஆரம்பித்துக் கொண்ட **கல்வியின் கொடை வள்ளலான வரணியின் ஒளிவிளக்கான** எமது ஆசான் திரு அம்பாலவாணர் அவர்களை வாழ்த்துவதற்குக் கிடைத்த அரிய வாய்பிற்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

திரு அம்பலவாணர் அவர்கள் 1974 தொடக்கம் 1976 வரையான காலப்பகுதியில் வரணிப் பிரதேசத்தில் கல்வி கற்ற மாணவர்களுக்கு க.பொ.த.சாராதண தர வகுப்புக்கு 8 பாடங்களையும் க.பொ.த. உயர்தர வகுப்பில் கலைப்பிரிவிற்கு 4 பாடங்களையும் தானே தனியொருவராக நின்று பிரத்தியேகமான முறையில் முழுமையான அர்ப்பணிப்புடன் எந்த விதமான பிரதியுபகாரங்களையும் எதிர்பாராது கற்பித்து பல மாணவர்களை வரணிப்பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிசமைத்த **கல்விக் கொடை வள்ளல்** ஆவார். இவரிடம் கல்வி கற்ற பலர் இன்று பட்டங்கள் பல பெற்று பல அரச பதவிகள் வகித்து வருவதுடன் அவர்களில் சிலர் இன்று ஓய்வு பெற்றுள்ளனர். சிலர் ஓய்வு பெறும் வயதில் உள்ளனர். பலர் இன்னும் நீண்டகாலம் சேவை செய்யக்கூடிய வயதில் அரச பணிகளில் உள்ளனர். இவ்வகையில் இவரது நீண்ட மாணவர் பரம்பரை இன்று உள்ளமை இவரது தன்னலம் கருதாத கல்விப்பணிக்கான சான்றாகும். இவரது மாணவர்களின் மாணவர்களும் இன்று பல மாணவர்களை உருவாக்கி வருகின்றார்கள். இந்த வகையில் திரு அம்பலவாணர் அவர்கள் நான்கு மாணவர் பரம்பரையை உருவாக்கி 5 அவது மாணவர் தலைமுறையை தற்போது தன் கண்முன்னே காண்கின்ற மிகச் சிறந்த பாக்கியம் பெற்ற **கல்விக் கொடை வள்ளல்** ஆவார்.

1987 மற்றும் 1988 காலப்பகுதியில் வரணி மகாவித்தியாலயத்தில் எமக்கு க.பொ.த உயர்தரத்தில் தமிழ் கற்பித்த இவரது அனுபவம் சார்ந்த கற்பித்தல் முறையின் அறுவடைதான் இன்று பலர் தமிழில் சிறந்து உயர் பட்டங்களைப் பெறவும்

பொருளியலில் சிறந்து விளங்கவும் நிர்வாகத்தில் மிளிரவும் சிறந்த ஏழுத்தாற்றலைப் பெறவும் வழி சமைத்த ஓர் சிற்பியான திரு அம்பலவாணர் அவர்களுக்கு அவர்களது மாணவர்களால் நாடாத்தப்படும் இந்த சேவை நயப்பு விழா தொடர்பாக வெளிவரும் நூலில் வாழ்த்து செய்தி தருவதற்கான தகுதியை எனக்கு தந்த ஆசான்களில் திரு அம்பலவாணரும் ஒருவராவார் என்ற வகையில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு அம்பலவாணர் அவர்கள் வடமராட்சியின் முத்தாக விளங்கும் கரவெட்டி கிராமத்தில் திருமணம் முடித்து இரு குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களை சிறந்த முறையில் வளர்த்து அவர்கள் இன்று வைத்தியத்துறையில் பணியாற்றுகின்ற வகையில் அவரது முன்னேற்றங்களிலும் அவரது கல்விப் பணி மற்றும் சமூகப்பணிகளிலும் பக்கதுணையாக உழைத்த அவரது துணைவியாரின் பிரிவு அவரை மிகவும் பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் தந்தை என்ற வகையில் தனது பிள்ளைகளுக்கு உரிய சகல சேவைகளையும் செய்து அவர்கள் இன்று தந்தையையும் இந்த சமூகத்தையும் பார்க்கக் கூடியளவுக்கு வாழ்கின்றமை இவரது தன்னலமற்ற சேவையின் சிறந்த அறுவடையாகும்.

1988 இல் இடமாற்றம் பெற்று யா/கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு சென்று அங்கு அதிபராகப் பிணயாற்றி பின்னர் 2000 ஆண்டு தொடக்கம் 2010 இல் ஓய்வு பெறும் வரை கரவெட்டி கோட்ட கல்வி அதிகாரியாகப் பணியாற்றி சிறந்த ஆசிரியராக மட்டுமன்றி சிறந்த அதிபராக சிறந்த நிர்வாகியாக எல்லோரது மனங்களிலும் நீங்காத இடத்தினைத் தக்க வைத்துக் கொண்ட திரு அம்பலவாணர் அவர்கள் ஓய்வு பெற்ற காலத்தில் இவ்வாறான ஒரு விழாவினை செய்வதை அவர் விரும்பவில்லை. அப்போது நாட்டு சூழ்நிலையும் ஆரோக்கியமானதாக இருக்கவில்லை. தற்போது அவரது 66 ஆவது அகவையில் இவ்வாறு ஒரு கௌரவிப்பு செய்து சேவைநயப்பு மலர் ஒன்றினை வெளியிடுவதன் மூலம் அவரது மாணவர் பரம்பரை மிகுந்த மகிழ்வடைவதுடன் பெருமையையும் பெற்றுக் கொள்கின்றது.

திரு அம்பலவாணர் அவர்கள் எமது நாட்டில் இருந்து வெளிநாடு சென்றாலும் அவர் கடந்த 5 தசாப்தங்களாக எமது மாணவர் சந்ததிக்கு ஆற்றிய சேவையால் எமது வரணி மண் மட்டுமன்றி அவர் புகுந்து வாழ்ந்த கரவெட்டி பிரதேசம் மட்டுமன்றி தமிழர் வாழ்கின்ற இடமெல்லாம் இவரது மாணவர்களும் மாணவர்களின் மாணவர்களும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு வித்திட்ட **கல்வி கொடை வள்ளல்** ஆவார். இத்தகைய எமது ஆசானின் **கல்விப்பணியும் சமூகப்பணியும்** 66 வயதுடன் ஓய்ந்து விடாது மேலும் நீண்ட காலம் தொடர அவருக்கு நீண்ட ஆயுளையும் தேக ஆரோக்கியத்தினையும் கொடுக்க வேண்டும் என எல்லாம் வல்ல சுட்டிபுரம் கண்ணகித்தாயின் பாதார விந்தங்களை வேண்டி எமது ஆசான் கல்விப் பெருவள்ளல் திருவாளர் அம்பலவாணர் அவர்களை மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு. சிதம்பரநாதன் உதயகுமார்**
தலைவர், பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

# வாழ்த்துச் செய்தி



எனது மைத்துனரும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமாகிய திரு. க. அம்பலவாணர் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படும் இம்மலரில் அவருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். திரு. க. அம்பலவாணர் அவர்களை நான் 1980 ஆம் ஆண்டிலிருந்து நன்கு அறிவேன். எனது தங்கையுடனான திருமண பந்தத்தின் மூலம் உறவுமுறையில் எனக்கு மைத்துனராக இருந்த போதிலும் அன்றிலிருந்து இன்றுவரை சகோதரர்கள் போலவே பழகி வந்திருக்கின்றோம். அவருடைய எளிமையான வாழ்க்கை முறையும் அனைவருடனும் அவர்களுக்கேற்ற வகையில் சிரித்துப் பேசிப்பழகும் பண்பினாலும் அனைவராலும் விரும்பப்படுபவராகவே இருக்கின்றார். ஆரம்பத்தில் பொருளியல் ஆசிரியராக பின்னர் கல்லூரி உப அதிபராக, அதிபராக தொடர்ச்சியாக கோட்டக்கல்வி அதிகாரியாக அவரது தொழில்முறை வளர்ச்சியின் ஒவ்வொரு படிகளையும் அருகிலிருந்து அவதானிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மாணவர்களால் மட்டுமன்றி சக ஆசிரியர்களாலும் சக அதிகாரிகளாலும் விரும்பப்படுபவராக இருக்கின்றார். அவர் கல்வித்துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டமை. அவர் கொண்ட ஈடுபாடு எமது குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஒரு முக்கியமான ஊக்குவிப்பாக அமைந்தது. கல்வியிலே உயர்நிலையை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தை எமது பிள்ளைகளின் மனதில் ஏற்படுத்துவதற்கு அவருடைய தொடர்ச்சியான ஊக்குவிப்பு உறுதுணையாக அமைந்தது. சிறந்த ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றிய அதேவேளையில் ஒரு பொறுப்புள்ள குடும்பத்தலைவராகவும் சிறந்த தந்தையாகவும் தனது கடமையை ஆற்றியிருக்கின்றார். தனது இரண்டு பிள்ளைகளையும் உரியமுறையில் கல்வி கற்க வைத்து அவர்கள் வாழ்வில் உயர்நிலையை அடைய வழிவகுத்துள்ளார். தனது துணைவியார் நோய்வாய்ப்பட்ட காலத்தில் அவருக்கு உறுதுணையாக இருந்தார். அவரின் நன்மை கருதி உரிய காலத்திற்கு முன்னரே அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றதுடன் அவருடைய இறுதிக் காலம் வரை அவருக்குப் பக்கபலமாக இருந்தார். அனைவருக்கும் தன்னால் இயன்ற உதவிகளை வழங்குவதில் அவர் ஒருபோதும் பின்நிற்பதில்லை. எமது குடும்பத்தின் வளர்ச்சியிலும் வெற்றியிலும் அவருடைய பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். எமது பிள்ளைகளுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக விளங்குகின்றார். அன்றிலிருந்து இனறுவரை எமது குடும்பத்தின் சந்தோஷமான தருணங்களிலும் துக்கமான தருணங்களிலும் தோளோடு தோள்நின்று உறுதுணையாக செயற்பட்டு வருகின்றார். இந்நிலையில் எமது குடும்பத்தின் சார்பாக அவருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அவர் நீண்டகாலம் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. வேலாயுதம்**

ஒய்வுபெற்ற வைத்திய அதிகாரி கரவெட்டி.

## உறவினர்களின் உள்ளத்தில் இருந்து ...



"தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴திலார் ஆதோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க வரணியிலே அவதரித்து மாணவப் பருவமதில் சீருடனும் சிறப்புடனும் கல்வி பயின்று பேராதனை பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி பட்டம் பெற்றார். ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்து அளப்பெரும் சேவையினை நல்கினார்.

எங்கள் எல்லோராலும் ஆசையப்பா என்று செல்லமாக அழைக்கப்படுபவர். எங்கள் எல்லோரையும் அன்புடன் அரவணைத்து நல்ல அறிவுரைகள் கூறுவார். கல்வியே சிறந்தது என அடிக்கடி கூறுவார். என்னைச் சந்திக்கும் நேரம் எல்லாம் உன்னுடைய கணிப்பீட்டு அறிக்கையைக் கொண்டுவா பாடப்புள்ளிகள் எத்தனை என்றும், எந்தப் பாடத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று அறிவுரை கூறுவார். கற்பதற்கு என்ன உதவி வேண்டும் என்றாலும் தயங்காமல் கேள் என்னால் முடிந்தளவு உதவி செய்வேன் என்று அடிக்கடி கூறுவார். நீ இன்னும் படிக்க வேண்டும் இன்னும் பல பட்டம் பெறவேண்டும் என்று அடிக்கடி என்னிடம் கூறுவார். நான் கல்வி கற்பதற்கு பல்வேறு வகையில் உதவி புரிந்தார். அதனை என் வாழ்நாளில் மறக்க முடியாது.

எங்கள் பரம்பரையின் கல்விக் கலங்கரை விளக்காய் திகழ்ந்தவர். ஒருவருடைய சொத்து கல்வி என்பது அவருடைய ஆணித்தரமான கொள்கையாகும். என்னுடைய குரு என்னிடம் அடிக்கடி கூறுவார் அம்பலவாணர் சேர் பரம்பரையில் பிறப்பதற்கே கொடுத்து வைக்க வேண்டும். அந்தப் பாக்கியத்தை நீ பெற்றுவிட்டாய் அவரைப் போலவே உன்னுடைய செயற்பாடுகளும் அமைகின்றது என்பார். நான் வரணியிலே ஒரு கற்ற பரம்பரையினை உருவாக்கியுள்ளேன் எனப் பெருமைப்படுவார் எங்களையும் ஒருகற்ற பரம்பரையினை உருவாக்க வேண்டுமென்று கூறுவார்.

ஆசையப்பாவிடம் காணப்படும் பண்புகள்ாக திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு, நேரிய பார்வை, நிமிர்ந்த நடை, இரக்க சுபாவம் என்பனவாகும். கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் போது நானும் ஆசிரியராக அவரது கோட்டத்தின் கீழ் வேலை செய்தேன். அப்போது ஏனைய ஆசிரியர்கள் கூறுவார்கள் நல்ல சேர், என்ன பிரச்சினை என்றாலும் அவருடன் நேரடியாகக் கூறலாம். அவர் தன்னால் இயன்றளவு உதவி செய்வார் என்பார்கள்.

ஆசையப்பா உடல் ஆரோக்கியத்துடனும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல மழலைப் பிள்ளையாரின் அருளினை வேண்டி நிற்கின்றோம்.

**திருமதி. கோசலா செந்தில்நாதன்**
(பெறாமகள்)
ஆசிரியர், யா/தம்பிராசபுரம் அ.த.க. பாடசாலை

# வாழ வழிகாட்டிய ஆசையப்பா...



என்றும் நான் மறவாப் பொக்கிஷமே ஆசையப்பா!
சீருடனும் சிறப்புடனும் உவகையுடன் வாழ்ந்தீர்!
பார் போற்ற உலகினிலே உத்தமராய் மிளிர்ந்தீர்!
பெரியப்பா எனினும் தாம் அப்பாவாய் இருந்திருந்தீர்!

வாழவழி காட்டி நின்று கல்வியதைப் புகட்டி நின்றீர்!
துன்பங்கள் விலகிடவும் நல்லனவே செய்திருந்தீர்!
நற்பாதை ஒன்றில் எனை நடைபயில வைத்திருந்து
பக்குவமாய் நல் வழியில் உயர்ந்திடவும் வழிவகுத்தீர்!

நேசமுடன் பாசமுடன் விவேகமுடன் நான் இன்று
பண்புடனே வாழவென்று வழிவகைகள் சொல்லிநின்றீர்!
வாழ்க்கைப் பாதையில் தடைகள் இருந்திடினும்
தடைதளர்த்தி பயணிக்க பாதையதை வழிவகுத்தீர்!

வாழ்க்கை வாழ்வதற்கே தத்துவத்தை நிலைநிறுத்தி
ஏற்றமிகு மகவாய் எனை உயர்த்த முயன்றிருந்தீர்!
என்றும் உம்வழியில் இன்புடனே பயணிப்பேன்!
பல்லாண்டு நீவாழப் பவ்வியமாய் வாழ்த்துகிறேன்.

பெறாமகள்
**சுமதி நவரத்தினம்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

# வாழ்த்துச் செய்தி



விக்னேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் முன்னாள் கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரியுமாகிய திரு. க. அம்பலவாணர் அவர்களைக் கௌரவிக்கும் இத்தருணத்தில் அவர் தொடர்பான எனது அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர விளைகின்றேன். 1989ஆம் ஆண்டிலே எனது திருமணத்தின் மூலமாக அவருடைய உறவினராகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கம்பீரமான தோற்றம், மிகச்சிறந்த ஆளுமை, சிக்கலான விடயங்களை மதிநுட்பத்துடன் கையாளும் திறன், கல்வித் தகைமை, எல்லா மட்டங்களிலுள்ள மக்களுடனும் உரியமுறையில் பழகும் திறன் என்பவை அவருக்குரிய தனித்துவமான குணங்கள். கல்வி மூலமாக மட்டுமே ஒருவன் சமூகத்தில் உயர்நிலையை அடையமுடியும் என்ற கொள்கையில் அவரது உறுதியான பிடிப்பு அவருடைய பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் சாதனைக்கும் உறுதியான அத்திவாரமாக அமைந்தது. தனது பிள்ளைகள் மட்டுமல்லாது எமது பிள்ளைகளும் கல்வியிலே உயர்நிலையை அடைய வேண்டும் என்பதற்காக மிகப்பெரும் ஊக்குவிப்பை வழங்கியதோடு தான் மட்டுமல்லாது தனது பிள்ளைகள் மூலமாகவும் சிறந்த வழிகாட்டுதலை வழங்கினார். இறைபக்தி, பெற்றோரைப் பேணும் பண்பு, நடுநிலைமை, நேர்மை போன்வற்றுக்கு உதாரணமாக இவர் விளங்குகின்றார். இக்கட்டான சூழ்நிலைகளிலும் பொறுமையுடன் செயற்படும் பண்பு, எந்த விடயத்தையும் நேரான மனப்பான்மையுடன் சிந்திக்கும் ஆற்றல் போன்ற பண்புகள் அவரை அனைவராலும் விரும்பப்படும் ஒருவராக மாற்றியுள்ளன. எமது குடும்பத்தின் எல்லா நிகழ்வுகளிலும் உறுதுணையாக இருப்பதுடன் மிகச்சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கும் அவருக்கு இத்தருணத்தில் நன்றி தெரிவிப்பதுடன் அவர் மென்மேலும் சிறப்புக்களைப் பெற வாழ்த்துக்கின்றேன்.

**திரு. செ. தனபாலசிங்கம்**
கரவெட்டி.

# திரு.க. அம்பலவாணர் ஓர் கல்விப் பரோபகாரி



எமது முன்னேற்றத்தின் ஏணிப்படியாக நின்று எம்மை உயர்த்திவிட்ட மதிப்பிற்குரிய ஆசான் திருவாளர் க. அம்பலவாணர் அவர்களின் சேவையைப் பாராட்டி அவரது மாணவர்களாகிய எம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட பாராட்டுவிழாவில் வெளியிடப்படும் 'அம்பலநாதம்' சஞ்சிகையில் அவரின் பணியை நயந்து சிலவரிகள் எழுதுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. தானத்துள் சிறந்தது கல்வித் தானம் என்பார்கள். அத்தகையதோர் அறப்பணியைத்தான் எமது மதிப்பிற்குரிய ஆசான் ஆற்றிவந்தார். கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் மகாகவி பாரதி புண்ணியங்கள் அனைத்திலும் மேலானது "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே" என்று கூறிச்சென்றார். அவரது கூற்றுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் எமது ஆசான் என்றால் மிகையாகாது. ஏழை பணக்காரன் என்று பாராது தன்னை நாடிவந்த அனைவருக்கும் கல்வி புகட்டிய பெருந்தகை. ஆயிரம் முட்டைகள் இடும் ஆமை ஆர்ப்பரிப்பின்றி நீரில் போகும் என்பார்கள். அது போலவே பெரியதோர் பணியை - அறத்தை - ஆற்றி விட்டு அமைதியாக இருக்கும் உத்தம குணத்தான் எமது ஆசான் அம்பலவாணர் என்றால் மிகையாகாது.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலினும் பெரிது" என்ற வள்ளுவன் வாக்கு இவருக்கு மிகப்பொருந்தும். தான் வழங்கும் கல்விக்கு பிரதியுபகாரம் எதுவும் அவர் எதிர்பார்த்ததில்லை.

பல பாடங்களைக் கற்பிக்கக்கூடிய அறிவும் திறனும் அவரிடம் காணப்பட்டமை எமக்கு பேருதியவியாய் இருந்தது. ஒரே இடத்திலேயே நாம் கல்வி பெறுவதற்கு அது வாய்ப்பாக அமைந்தது. மேலும் அவர் கற்பிக்கும் போது அறிவு சார்விடயங்களை மட்டும் போதிப்பதில்லை. எம்மிடையே தன்னம்பிக்கையையும் ஊட்டுவார். இதனால் எமக்குத் தற்துணிவு வளர்ந்திருந்தது. இவரிடம் கற்ற மாணவர்கள் மிகுந்த நம்பிக்கையோடுதான் பரீட்சைக்கு முகங்கொடுப்பர். சுருங்கக் கூறின் அவர் எமக்கு ஓர் நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழ்ந்தார். பல மாணவர்கள் பல்கலைக் கழகம் புகுவதற்கும் தமக்கென தொழிலை அமைப்பதற்கும் ஒரு வழிகாட்டியாய் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வரணி மகா வித்தியாலயத்தில் (வரணி மத்திய கல்லூரி) நாம் உயர்தரம் கற்றுக்கொண்டிருந்த போது பரீட்சையை எதிர்கொள்வது தொடர்பாக எந்த அறிவும் எமக்கு இல்லாதிருந்தவேளை அப்போது அதிபராக இருந்த மதிப்பார்ந்த அமரர் எஸ்.என். இராசநாயகம் அவர்கள் திரு.க. அம்பலவாணர் என்ற இளைஞனை எமக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அப்போதுதான் திரு. க. அம்பலவாணர் அவர்கள்

பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறியிருந்தார். மீகாமன் இல்லாத மரக்கலம் போலப் பயணித்துகொண்டிருந்த எமக்கு நல்ல மீகாமனாய் அமைந்து எமக்கு வழிகாட்டியதை என்றும் மறக்க முடியாது. இவரை எமக்கு அறிமுகப் படுத்திய அமரர் இராசநாயகம் அவர்களுக்கும் எமது நன்றியையும் வணக்கத்தையும் இவ்விடத்தில் பதிவு செய்ய ஆசைப்படுகின்றேன்.

ஒரு மனிதனின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்று கூறுவர். எங்கள் ஆசானின் வெற்றிக்குப் பின்னால் அவரது தாயும், தந்தையும் இருந்தனர் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். தன்னுடைய பிள்ளை படித்துப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்திலர். தங்களுடைய பிள்ளை தான் கற்ற கல்வியை பிறருக்கு அள்ளிக்கொடுக்கும் அறப்பணியைப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தனர். தமது மகனைச் சுற்றி மாணவர் குழாம் இருப்பதைப் பார்த்துப் பூரிப்படைந்தனர். எமக்கும் அவர்கள் ஒரு தாயாகத் தந்தையாக விளங்கினர். அன்னை அவர்கள் தந்த தேநீர், சிற்றுண்டிகளும் இன்றும் இனிக்கின்றது. தாய்க்குப் பின் தாரம் என்று மிகமிகச் சரியாகத்தான் சொல்லி வைத்துள்ளனர். தாரமாக வந்தமைந்த திருமதி அம்பலவாணர் புவனேஸ்வரி அவர்களும் எமக்கு ஒரு தாய்போலவே இருந்தது ஆசானின் சேவைக்கு உறுதுணையாய் விளங்கினார். ஆசானின் மழலைகள் அனு, தீபா ஆகியோரின் மழலை மொழிகேட்டு மகிழ்ச்சியில் திழைத்த பசுமையான அந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்" என்பது வள்ளுவன் வாக்கு. அவரின் எச்சங்களாகக் காணப்படுவது மாணவர்களாகிய நாமும் சந்தானங்களாகிய அவரது பிள்ளைகளும் எனலாம். அவர் ஆற்றிய தன்னலங் கருதாப் பணிக்குச் சான்றாக விளங்குபவர்கள். ஊரார் பிள்ளைகளை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்ற பழமொழிக்கு இவரது குடும்பம் நல்ல உதாரணமென்று கொள்ளலாம். எவ்வாறாயினும் அவர் சமூகத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியது. அவரது பணியை விதந்துபேச மாணவர்கள் இருந்துகொண்டே இருப்பர். அத்தகைய மாணவர்களில் நானும் ஒருவன். அவ்வாறானதோர் உணர்வுதான் அவருக்கு விழா எடுக்க எம்மை உந்தியது. இவ்விழா முகமன் கூறும் விழாவாக இல்லை. எமது உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடாக அமைந்தது. மதிப்பார்ந்த ஆசான் பல்லாண்டு வாழ்ந்து சமூகப்பணி செய்ய இறையருள் கூடப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

**திரு. வே. பாலசுப்பிரமணியம்**
(மாணவன்)
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

# வாழ்த்துச் செய்தி




வரணியம்பதியில் இடைக்குறிச்சிப் பகுதியில் முத்தாய் துலங்கிய உற்ற நண்பனும், குருவுமாகத் திகழ்ந்த திருவாளர் கந்தர் அம்பலவாணர் அவர்கள். தான் இப்பகுதியில் இருந்த காலத்தில் இப்பகுதிப் பிள்ளைகள் படித்து முன்னுக்கு வரவேணும் என்னும் வேணவாவுடன் ஊதியத்தை எதிர்பார்க்காமல் அனேகமான பிள்ளைகளுக்கு கலைப் பிரிவில் (சாதாரணதரம், உயர்தரம்) எல்லாப் பாடங்களையும் தான் ஒருவனாக நின்று கற்பித்து சித்தியடைய வைத்து பல்கலைக் கழகம் செல்ல வைத்த மாபெரும் ஆற்றல் படைத்த அறிவுப் பொக்கிசம். எத்தனையோ மாணவர்கள் சாதாரண தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி சித்தியடையாத விடத்து அவர்களைக்கூப்பிட்டு கலைப்பிரிவில் எல்லாப் பாடங்களையும் தான் ஒருவராக நின்று கற்பித்து பரீட்சையில் சித்தியெய்த வைத்து பல்கலைக் கழகம் செல்ல வழிவகுத்த உத்தமர்.

அவரிடம் கல்வி கற்ற அனேகமானோர் அரச உத்தியோகம் பார்த்து உயர்பதவிகள் வகிக்க வைத்த அறிவுச் சுடர். அவர் வரணியில் இருந்து கல்வி கற்பித்த காலத்தில் வரணிப் பகுதியில் இருந்து பெருமையாகப் பேசக்கூடிய அளவிற்கு பல்கலைக் கழகத்துக்கு அதிக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அவரது பொறுமையும் ஆழ்ந்த சிந்தனையும், மனித நேயமும் அறிவு முதிர்ச்சியும் இப்பகுதி மக்கள் மத்தியில் உயர்ந்த இடத்தில் அவரை வைத்துள்ளது. அவரும் அவரது பிள்ளைகள் எல்லோரும் எல்லாச் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறோம்.

**வீ. சிவராசசிங்கம்**
ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர்,
இடைக்குறிச்சி,
வரணி.

# தன்னலமற்ற சேவையாளன்



செந்தமிழும் சைவமும் சேர்ந்திலங்கும் வரணியம்பதியில் உதித்து, அவ்வூர் மாணவர்கள் உயர்கல்வி பெற்று, சமூகத்தில் உயர்ந்தவராக உயர்வுபெறவழி வகுத்தவர். திருவாளர் கந்தர் அம்பலவாணர் ஆவார். இவர் பல்கலைக் கழக கல்வியை நிறைவு செய்து வந்தவுடன் தமது ஊர் மாணவர்கள் கல்வியில் வளம் பெறவேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையோடு தம்மை நாடி வந்த மாணவர்களுக்கு எவ்விதவேதனமும் எதிர்பாராது கல்வி புகட்டிய பெருமகனார் ஆவார்.

இவர் பட்டம் பெற்றுவந்த காலத்தில் வரணிக் கிராமத்தின் நிலையை ஒரு கணம் திரும்பிப் பார்ப்போமானால் அக்காலத்தில் எமது ஊரில் கல்வியில் அதிகம் ஆர்வம் காட்டாது விவசாயத்தினை நம்பி வாழ்ந்து வருகின்ற மக்களாகவே இருந்தனர். வரணியில் பலபாடசாலைகள் இருந்தபோதும் அவையாவும் ஆரம்பக்கல்வியை வழங்குகின்ற நிறுவனங்களாகவே இருந்தன. ஒரு சில மாணவர்கள் மட்டும் வெளியூர் சென்று உயர்கல்வியைப் பெற்றுவந்த தன்மையே காணப்பட்டது. மற்றையவர்கள் பாடசாலையில் இருக்கின்ற வகுப்புடன் தமது கல்வியை முடித்துக் கொண்ட தன்மையே அக்காலத்தில் நிலவியது. இந்நிலைமைமாற வேண்டும் என்ற சிந்தனை இவரிடம் இருந்தது. இதனால் இவர் தன்னலம் பாராது மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதில் முழுநேரமாக ஈடுபட்டார். குறிப்பாக 1974 தொடக்கம் 1976 வரையான காலப்பகுதியில் இரவு பகல் பாராது தனது கல்விப் பணி செய்தது யாராலும் மறக்க முடியாது.

இக்காலத்திலே இவரிடம் கல்வி கற்கும் சந்தர்ப்பத்தினை யானும் பெற்றேன். அப்போது நாம் கல்வி கற்ற யா/ வரணி ம.வி.யில் (தற்போது வரணி மத்திய கல்லூரி) உயர்தரம் ஆரம்பிக்கப்பட்ட காலம். அக்காலப்பகுதியில் உயர்தரத்தில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்த காரணத்தினால் இவரிடமே எல்லாப் பாடங்களையும் கற்றேன். இவரிடம் முதல் முதலாக என்னோடு சேர்த்து மூன்று மாணவர்கள் கல்வி கற்று மூவரையும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமை அவருக்கே உரியது. கலைப்பட்டதாரியாக இருந்த காரணத்தினால் தமிழ், புவியியல், பொருளியல், அரசியல், இந்துநாகரிகம், வரலாறு போன்ற பாடங்களைக் கற்பிப்பதில் வல்லவராக விளங்கினார். உயர்தரத்தில் மட்டுமன்றி சாதாரண வகுப்பு மாணவர்களுக்கும் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது. அக்காலத்தில் இவரது வீடு ஒரு திண்ணைப்பள்ளியாகவே இயங்கியது. இவரது பெற்றோர்கள் கூட இக்கல்விச் செயற்பாடுகளுக்கு ஆதரவாகவே இருந்தனர்.

இவரது கற்பித்தலை நோக்கும் போது மாணவர்கள் விரும்பத்தக்க முறையில் அன்பாகவும், கோபப்படாமலும், தண்டனை கொடுக்காமலும் கற்பிப்பார். கற்பிக்கும்

போது தகுந்த உதாரணங்களுடன் கல்வி புகட்டுவார். பாரதியாரின் பாடல்கள் அடிக்கடி அவரது கற்பித்தலின் போது இடையில் வந்து கொண்டே இருக்கும்.


அரச சேவையில் ஆசிரியராகச் சேர்ந்து மலையகத்தில் கல்வி கற்பித்த காலத்தில் பாடசாலை விடுமுறைக் காலங்களில் வீடுவரும் போது தனது மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கத் தவறுவதில்லை. மலைநாட்டிலிருந்து இடமாற்றம் பெற்றுவந்தவுடன் யா/வரணி ம.வி. யில் ஆசிரியராகப் பலஆண்டுகள் சேவை செய்தார்.

அதன் பின்னர் வடமராட்சியில் புகழ்பூத்த யா/ விக்கினேஸ்வராக் கல்லூரியில் அதிபராக சில காலம் கடமையாற்றிய பின்னர் பதவி உயர்வு பெற்றுக் கரவெட்டிக் கோட்டத்தின் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் அவரின் நிர்வாகத்திறமையினால் மேலதிகாரிகளின் நன்மதிப்புக்கும், பொதுமக்களது அன்பிற்கும் பாத்திரமாக விளங்கினார்.

இவ்வாறான பெருமைகளைக் கொண்ட இவர் குடும்பவாழ்க்கையில் நன்மக்களைப் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார். மேலும் இவர் நீண்ட காலம் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு. சிதம்பரன் கந்தசாமி**
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்.

# வாழ்த்துச் செய்தி



"வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும்" என வள்ளுவன் வகுத்துரைத்தான். அந்தவகையில் வாழ்வாங்கு வாழ்வதற்காக வழிகாட்டிகளாய் அமைந்திட்ட ஆசான்களை என்றும் எம்மால் மறக்க முடிவதில்லை. எனது கல்வி வாழ்க்கையிலே பல இன்னல்களைச் சந்தித்திருக்கின்றேன். அவற்றையெல்லாம் எதிர்கொள்ளும் வலிமை தந்து, என்னை வழிப்படுத்திய ஓர் உத்தம ஆசான் திருவாளர் கந்தர் அம்பலவாணர் அவர்கள் ஆவார்.

காலமெனும் ஏட்டில் பதியப்பட்ட அச்சுக்களாய் எமது கிராமத்தில் படிக்கின்ற காலத்தில் பல தடங்கல்களால் பள்ளிப்படிப்பைத் தொடர இடர்ப்பட்டபோது என்னுடன் பல நண்பர்களையும் ஒன்று சேர்த்து மாலை நேரங்களிலும் இரவுவேளைகளிலும் குப்பி விளக்கில் கற்பித்து க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைவதற்காக கரம்கொடுத்து உதவிய ஓர் உன்னதமான ஆசான். உயர்தரக் கல்வி கற்று, பல்கலைத் தேர்வுபெற இவரது ஆக்கமும் ஊக்கமும் எங்கள் மீது காட்டிய அக்கறையும் இன்னும் என் நினைவில் நிற்கின்றது.

எனது வாழ்வில் கற்றுக்கொண்ட அனுபவங்களிலும் பழகிக்கொண்ட மனிதர்களிலும் உயர்ந்த ஆசான்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்களில் உதாரணங் காட்டக்கூடிய ஓர் ஆசான் இவர். பொறுமை நிரம்பியவர். கோபத்தை அறியாதவர், அன்போடும் பண்போடும் பழகுபவர். கல்வியிலும் சமய நெறிமுறைகளிலும் ஒழுக்கம்மிக்க சமுதாயத்தைக் கட்டிவளர்க்க அரும்பாடுபட்டவர் பாடசாலையின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த சேவையாளன்.

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவர்களையும் பரீட்சைகளில் தேர்ச்சிபெறத் தவறியவர்களையும் (ஏறக்குறைய 25, 30 மாணவர்களை) ஒன்று சேர்த்து வீட்டிலேயே கல்வி கற்பித்தார். படுக்க இடம் தந்து தண்ணீர் சாப்பாடு யாவும் வழங்கி இரவு பகலாகப் பாடுபட்டார். பிள்ளைகள் அடிபடாது கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்தார். இவரது பெற்றோர், சகோதரர்களும் இவருக்கு உறுதுணையாக இருந்து அன்போடு எம்மை ஆதரித்தமையும் மனங்கொள்ளத்தக்க விடயமாகும். தற்போதும் இவரது வீட்டிற்குச் செல்லும் போதெல்லாம். இவரது மனைவி, மக்கள், மருமக்கள் யாவரும் அன்போடு வரவேற்று உபசரிப்பார்கள். இவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவருக்கு பாராட்டு விழா கொண்டாடப்படுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. தனது குடும்பத்தினருடன் என்றும் நலமோடும் வளமோடும் வாழ இறையருளை வேண்டி, இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. வீ. இராசகுலசிங்கம்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கிளி/கண்டாவளைக் கல்விக்கோட்டம்.

# வாழ்த்துச் செய்தி



நாம் படித்து சித்தியடைந்து நாட்டுநிலமை காரணமாக வெளிநாடு சென்று பின்பு வந்து வேலைக்கான போட்டிப் பரீட்சை எழுதி நியமனம் பெற்று 25 வருடங்கள் சேவை செய்து ஓய்வுபெற்றபின் எம்மைப்படிப்பித்த ஆசிரியருக்கு பாராட்டுவிழா வைக்கின்றோம் என்றால் முதலில் அவரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். இதற்கு அவர்சம்மதம் தெரிவித்தது அவரின் பண்பையே எடுத்துக் காட்டுகின்றது. அவர் எமக்கெல்லாம் ஓர் தெய்வமே.

படிக்கும் காலத்தில் அன்பாக அம்பலண்ணாவென்றே அவரை நாம் அழைத்தோம். படிப்பித்த காலத்தில் அவருடைய வீடு எமது சொந்தவீடு போல அம்மா, அப்பா, சகோதரர்கள் எல்லோரும் எங்களை தமது குடும்ப உறுப்பினர்கள் போலவே பார்த்தனர். அவருடைய அம்மா, எமக்கு உணவு, பானம் பலதின்பண்டங்கள் எல்லாம் தந்து எமது தாய் போல எம்மை அரவணைத்தார்.

அவர் பட்டப் படிப்பை முடித்து வீட்டிலிருந்த வேளை எங்களுக்கு எந்தக் கட்டணமும் இன்றிக் கற்பித்தார். மின்சாரம் இல்லாது லாம்பு விளக்கிலேயே எம்மைப் படிப்பித்தார். கிடைக்கும் நேரம் எல்லாம் எம்மை அழைத்துப் படிப்பித்தார்.

வரணிச் சமூகத்திலே அவர் கற்பிக்க முன்பு ஒரு சில மாணவர்களே A/L படித்தவர்கள் அவருடைய கற்பித்தலால் பெருமளவு மாணவர்கள் A/L படித்து பட்டம் பெற்று பல்கலைக் கழக விரிவுரையாளர்களாகவும் கூட உள்ளார்கள். அது மட்டுமன்றி அவர் O/L, A/L சகல பாடங்களையும் தானே கற்பித்த சகலகலாவல்லவர். அதிலும் 2 வருடம் பாடத்திட்டத்தை சில மாதங்களிலேயே கற்பித்து பல மாணவர்களை பரீட்சையில் சித்தியடைய வைத்ததாக பல ஆசிரியர்கள் எம்மிடம் கூறினார்கள். இவற்றுக்கெல்லாம் வரணிச் சமூகமே அவருக்கு நன்றிக்கடன் உள்ளவர்களாகத் திகழவேண்டும்.

காலம் தாழ்த்தியாவது அவரின் பாராட்டு விழாவை நாம் முன்னெடுத்தது மிகவும் வரவேற்கத்தக்கது. நாம் எப்பெருவிழா எடுத்தாலும் அவரின் சேவைக்கு ஈடாகாது.

அதுமட்டுமன்றி அவர் எம்மைக் கற்பித்தலோடு மட்டும் நிற்கவில்லை எமது நன்மை, தீமைகளிலும் கலந்துகொண்டு எம்மையும் ஒரு சமூகமயமானவர்களாகவும் ஆக்கினார்.

கற்றலின் நோக்கத்தை நிறைவேற்றினார் என்றால் அது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

எனவே அவரும் அவரது உறவுகளும் என்றென்றும் சகல சுகத்துடனும் வாழ வேண்டுமென்று வாழ்த்துவதோடு இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.


நன்றி

வணக்கம்

அவரின் மாணவன்

**K. முதலிக்குட்டி** (ஓய்வுநிலை ஆசிரியர்)

# எனது அருமை குரு துரோணரே! தங்கள் சிஷ்யன் அருச்சுனனின் சமர்ப்பணம்.



நான்கு தசாப்த காலத்துக்கு முன் பாடசாலையில் க.பொ.த சாதாரண வகுப்பில் நான் படித்த காலத்தில் படிப்பின் அருமை எனக்கு புரியவில்லை. அதைவிட எங்கள் ஊரில் க.பொ.த சாதாரணம் படித்தவர்கள் என கைவிட்டு எண்ணக்கூடிய ஒரு சிலபேர்தான் இருந்திருப்பார்கள். அதற்குமேல் படித்தவர்கள் இல்லையென்றே சொல்லலாம். அதைவிட எங்களுக்கு முன்னோடியாக பார்த்து தொடர்வதுக்கு ஒரு நல்லாக படித்த மனிதர்கள் கூட இருக்கவில்லை. அதனால் அன்று படிப்பின் அருமையும் எங்களுக்கு புரியவில்லை. பாடசாலையை விட்டுவிட்டு விவசாயத்தில் ஈடுபடும் போதுதான் படிப்பின் அருமை தெரிந்தது. அத்துடன் அப்போது படிப்பதென்றால் நெல்லியடிக்குத்தான் போகவேண்டும். வரணியில் ஒரு தனியார் கல்விக்கூடங்கள் கூட இல்லை. அப்போது நானும் நண்பன் முதலிக்குட்டியும் இன்னும் சில நண்பர்களும் சேர்ந்து நெல்லியடி லங்கா கல்வி நிலையத்தில் சேர்ந்தோம். அங்கேதான் உங்களைச் சந்தித்தோம். நீங்கள்தான் எங்களுக்கு நாங்கள் எடுத்த அனைத்து பாடங்களுக்கும் ஆசிரியராக வந்தீர்கள், அப்போது நான் ஒருநாள் கேட்டேன் அண்ணை நாங்கள் எடுக்கிற பாடம் அனைத்தும் நீங்கள் தான் எடுக்கிறீர்கள் அதைவிட நீங்களும் எங்களுக்கு பாடம் எடுப்பதற்காகத்தான் அங்கிருந்து இங்கே வருகிறீர்கள். ஏன் நாங்களும் வீணாக சைக்கிள் ஓடி இங்கே வரவேண்டியிருக்கிறது நேரத்தையும் வீணாக விரயம் செய்யவேண்டும். நாங்கள் உங்கள் வீட்டுக்கே வரலாமா என்று கேட்ட பொழுது நீங்கள் சொன்னீர்கள் என்னிடம் வேறு சில மாணவர்களும் படிக்கிறார்கள் ஆனால் அவர்கள் மாலைநேரத்தில் தான் வருவார்கள் விரும்பினால் நீங்களும் வரலாம் என்று. அப்படித்தான் எங்கள் அறிமுகம் ஆரம்பமானது. படித்தவர்கள் எல்லோரும் கற்பிக்கக்கூடியவர்கள் அல்ல கற்பித்தல் ஒரு கலை அது ஒரு சிலபேருக்குத்தான் வரும் எல்லோரும் புரியும்படி கற்பிப்பதென்பது இலகுவான காரியமல்ல. நீங்கள் அடிக்கடி கூறுவதுபோல மாணவர்கள் மூன்றுவகைப்படும் கற்பூரம், கரி, வாழைத்தண்டு இவர்களை எல்லாம் கரைசேர்த்ததை எண்ணி வியக்கிறேன். எப்படி இந்த நடுக்கடலிலிருந்து வெளியேறப்போகிறோம் என்று தத்தளித்து கொண்டிருந்த எங்களுக்கு கலங்கரை விளக்கம் போல் வந்து கரைசேர்த்த ஆசானே! உங்களிடம் படித்தவர்கள் எல்லோரும் சித்தியடைந்தார்கள் அத்துடன் நான் க.பொ.உயர்தர படிக்கும் போது உங்களுக்கு வெலிமடையில் ஆசிரியர் வேலை கிடைத்தது அப்போது நானும் நண்பர் கதிர்காமத்தம்பியும் வெலிமடை மகா வித்தியாலயத்தில் கல்வியை தொடர உதவி செய்தீர்கள்.ஆனால் துரதிஷ்ட்ட வசமாக 1977ம் ஆண்டு இனக்கலவரத்தால் எங்களால் அங்கே கல்வியை தொடர முடியவில்லை. பின்பும் வரணியிலே கல்வியைத்தொடர்ந்தோம். ஒரு புள்ளியால் பல்கலைகழகம் புகும் வாய்ப்பை இழந்தபொழுதும் நோர்வேயில் கல்வியை தொடர வாய்ப்பு கிடைத்தது, எனக்கு நோர்வேயில் ஒரு கல்லூரியில் மாணவ அனுமதி கிடைத்திருக்கு என்று சொன்னபோது என்னுடைய மாணவனும் வெளிநாட்டில் படிப்பது எனக்கும் பெருமைதானே என்று கூறினீர்கள். அதுமாத்திரமன்றி எனது கடவுசீட்டுக்கும் உத்தரவாத கையொப்பம் வைத்து கடவுசீடடையும் எடுத்து கொடுத்தீர்கள். இன்றைக்கு

நான் எல்லா வழங்களோடும் இருக்கிறேன் என்றால் அடிப்படைக்கல்விதானே காரணம் அதை நீங்கள் தானே கொடுத்தது. அதை என் உயிர் இப்புவியில் இருக்கும்வரை மறக்கமாட்டேன், ஆனால் ஒரு சின்னவருத்தம் இந்த விழாவை காலம்கடந்து செய்கிறோமே என்று. இப்போதும் கூட நானும் என்மனைவியும் நண்பர் வல்லிபுரநாதனுடன் கதைத்து வருத்தப்பட்டோம் அதற்கு அவர் கூறினார் காலம் கடந்தாலும் பரவாயில்லை செய்யாமல் விட்டு அந்த வரலாற்று தவறை இழைக்கவேண்டாம் என்று. அதற்காக நாங்கள் எல்லோரும் தங்களிடம் மன்னிப்பு கோருகிறோம்.

நாங்கள் சிறுவதில் படிக்கும்பொழுது பொருளாதாரப்பிரச்சனை ஒரு பெரிய பிரச்சனையாக இருந்தது ஒரு நாளாவது பணம் கேட்டு வாங்கமாட்டார் நாங்களாகவே கொடுத்தால் சரி அப்படி ஒவ்வொருத்தரினுடைய நிலைமையை புரிந்த நல்ல உள்ளம்கொண்ட மனிதர் அவர்.

எத்தனையோ விஞ்ஞானம் படித்த மாணவர்கள் அதை படிக்க முடியாமல் கலைப் பாடங்கள் எடுத்து முன்னுக்கு வந்தவர்களுமுண்டு. கலை பாடங்கள் படித்து பின்பு விஞ்ஞான தொழில்நுட்ப பாடங்கள் படித்து முன்னுக்கு வந்தவர்களுமுண்டு அதில் நானும் ஒருவன்.

அவரை நாங்கள் ஒருநாளும் சார் என்று அழைத்தது இல்லை பாடசாலையில் கூட அண்ணை என்றுதான் அழைப்போம் உண்மையில் அவரை எனது உடன்பிறவா சகோதரனைப்போலத்தான் இன்றும் எண்ணுகிறேன். அக்காவின் பிரிவு அண்ணையை நல்லாக பாதித்திருக்கும் அதோடு குறுகியகால இடைவெளிக்குள் அப்பா, அம்மாவின் பிரிவு அண்ணையை ஒன்றன்மேலொன்றாக துயர்படுத்தியிருக்கும் உங்கள் துயரில் நாங்களும் பங்குகொள்கிறோம் அண்ணா.

முக்கியமாக அம்பலண்ணையின் தாயாரைப்பற்றியும் குறிப்பிட வேண்டும் அவ(ர்) அம்பலண்ணைக்கு மாத்திரம் அம்மா அல்ல எங்களுக்கும் அம்மா போலத்தான் எங்கள் பாடசாலை காலம் முடிந்த காலத்தில் வீட்டுக்கு போனால் கூட தன் பிள்ளைகளை போல இன்முகத்துடன் கவனிப்பார் ஒரு நாளைக்கு எங்கள் நண்பர்களில் ஒருவர் போகாவிட்டாலும் கூட ஏன் பாலா வரவில்லை ஏன் கணேஷ் வரவில்லை என ஆதங்கத்துடன் கேட்பார் அம்பலண்ணையின் அம்மாவின் வீட்டுக்கோழிகள் பல எங்களுக்காக உயிரை விட்டிருக்கின்றன. அப்படி ஒரு உபசரிப்பு. ஆனால் இன்னும் கொஞ்சகாலம் இருந்திருக்கலாம் என மனம் ஏங்குகிறது அதற்கு காலனுக்கு பொறுமையில்லையே இந்த இடத்தில் நாம் அன்னாருக்கு நினைவு கூர கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆண்டுகள் பல கடந்தாலும் தங்களுடன் நாங்கள் பழகியகாலங்கள் பசுமரத்தாணிபோல் என்றும் நிலைத்திருக்கும், ஒரு மாணவன் ஒரு ஆசிரியரை வாழ்த்துவது வழமை இல்லையென்றாலும் உண்மையான அன்புள்ளம் ஒருவருக்கு இருக்கும்போது யாரும் யாரையும் வாழ்த்தலாம். அந்தவகையில் நீங்கள் நீண்ட ஆயுளும் நிறைந்த ஆரோக்கியமும் பெற்று உங்கள் பிள்ளைகளுடன் மகிழ்சியுடன் வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்

நோர்வேயிலிருந்து தங்கள் மாணவன்

**க. சின்னராஜா**

## அன்பும் பண்பும் நிறைந்த ஆசானுக்கு !



நேற்றுத்தான் நாங்கள் துள்ளித்திரிந்து பள்ளிக்கு வந்தது போல் இருக்கிறது. ஆனால் காலங்கள் உருண்டோடிவிட்டன. எங்கே? எப்படி? யாரிடம் எமது தமிழ்ப்பசியை தீர்த்துகொள்ளப்போகிறோம் என்று ஏங்கிக்கொண்டு இருந்த காலமது வரணி மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஒரு சில விரல் விட்டு எண்ணெக்கூடிய ஆசிரியர்கள்தான் அந்த நேரம் நாங்கள் க.பொ.த. உயர்தரம் படிக்கும் காலத்தில் (1977ம்) இருந்தார்கள். நாங்கள் இலக்கணம் படிப்பதற்கு என்ன செய்வது யாரிடம் கற்பது என்று ஏங்கிக்கொண்டு இருந்தகாலமது.

"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு"

என்ற பாடல் போல எங்கள் கைகளில் கிடைத்த "உறு மீன்" தான் நீங்கள் ஆசானே! என்னடா நான் சொல்லிக்கொடுத்த பாடலையே எனக்கு திருப்பி அடிக்கிறாளே என்று நினைக்கிறீர்களா? ஆம் இந்த பாடலும் நீங்கள்தான் சொல்லிக்கொடுத்தது. இப்படி இன்று ஏறக்குறைய 35 வருடததுக்கு மேலாகியும் நான் அடிக்கடி நினைத்துக்கொள்ளும் ஒரு பாடல்வரிகள். அதேபோன்றுதான் என்னும் ஒரு உதாரணம் கூறும்போது சொல்லுவீர்கள் "ஆனைக்கும் அடிசறுக்கும்" என்று அதனையும் நான் அடிக்கடி நினைப்பேன்.

உங்களிடம் நான் கற்ற காலங்களில் தான் நிறைய உங்களிடம் தமிழ் இலக்கணத்தையும் தமிழையும் கற்றுக்கொண்டேன் தமிழ் இலக்கணம் என்றால் என்ன என்பதை உங்களிடம் படிக்கத்தொடங்கிய பின்புதான் தெரியவந்தது. அதன் பின்புதான் நான் தமிழை கசடற கற்றேன். அதன் காரணமாகத்தான் எனக்கு அப்போது தமிழில் (ஏ)அதிதிறமை சித்தியும் க.பொ.த. உயர்தரத்தில் கிடைத்தது. "காலத்தால் செய்த உதவி சிறிது எனினும் அது ஞாலத்தால் போற்றப்படும்" ஆனால் இதை நான் இந்த உலகில் உள்ளவரை போற்றுவேன் நினைப்பேன் அண்ணா!

அண்ணா நான் க.பொ.த உயர்தரத்தில் ஒரு பாடம் பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்கு வந்தபின்பு 1977ம் ஆண்டு எனது தகப்பனார் காலமானார் .அதனால் எனக்கு திரும்பவும் மிகுதிப்பாடங்கள் எழுத்துவதற்குரிய மனநிலை இருக்கவில்லை அப்போது நீங்கள் என் வீட்டுக்கு வந்து ஆறுதல்கூறி எனக்கு திரும்பவும் மிகுதிப்பாடங்களையும் போய் எழுதும்படி கூறி எனக்கு உற்சாகம் அளித்தீர்கள்.அதன்படி நானும் திரும்பவும் நான் மிகுதிப்பாடங்களும் எழுதி அதில் நான் சித்திகளும் அடைந்தேன்.அதையும் நான் எப்போதும் நன்றியுடன் நினைவுகூருவேன்.

நான் நோர்வே நாட்டுக்கு வரும்போது உங்கள் அம்மாவிடம் போய் நான் பயணம் சொல்லிவிட்டு வந்தேன் அப்போது இன்றைக்கு நீங்கள் பிள்ளை

சாப்பிட்டுவிட்டுதான் போகவேண்டும் என்றுசொல்லிக்கேட்டா அப்போது நான் வேண்டாம் நான் போகவேண்டும் என்றுசொல்ல அவ எனது பாதணிகளில் ஒன்றை தூக்கி மறைத்து வைத்து விட்டார். பின்பு நான் நின்று சாப்பிட்டுவிட்டுதான் வந்தேன். அந்தக்காலத்தில் நீங்கள் வீட்டில் பாடம்சொல்லிக்கொடுத்தபோது ஆண்பிள்ளைகள் மட்டும்தான் வருவார்கள் ஒரு பெண்பிள்ளைகளும் வருவதில்லை. ஆனால் உங்கள் அம்மா என்னையும் என் நண்பி வள்ளியமைப்பிள்ளையையும் மட்டும் தான் வீட்டுக்கு வந்து படிக்க அனுமதித்தார். இவ்விடத்தில் நான் உங்களை இவ்வுலகத்துக்கு தந்த உங்கள் அன்புத்தெய்வங்கள் அம்மா, அப்பா இருவரையும் நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

அத்துடன் நீங்கள் திருமணம் முடித்தபின்பு எனக்கு உங்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. நானும் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டபடிப்பினை முடித்ததும் அதே ஆண்டில் நான் நோர்வே நாட்டுக்கு வந்துவிட்டேன். அதனால் உங்கள் பாரியாருடன் பழகும் வாய்ப்போ கிட்டவில்லை. ஒருமுறை நாங்கள் நோர்வே நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்து நின்ற போது உங்கள் வீட்டுக்கு வந்தோம். அப்போது தான் நான் அக்காவுடன் கதைத்தேன். தேநீர் அருந்திவிட்டு வந்தோம். அப்போது அக்கா நோர்வே நாட்டைபற்றி மிகவும் ஆவலுடன் விசாரித்து கேட்டது எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. இந்த இடத்தில் நான் உங்கள் பாரியாரையும் அன்புடன் நினைவுகூர்ந்து கொள்கிறேன்.

இன்று நாங்கள் நோர்வேக்கு வந்து 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டது ஆண்டுகள் உருண்டோடிவிட்டாலும் ஞாபகங்கள் எப்போதும் இதயத்தில் இருந்து மறைந்தோ அல்லது மறந்தோ போகாது. காலம் உள்ளவரைக்கும் அது நிலைத்து இருக்கும். எத்தனையோ மைல்களுக்கு அப்பால் கடல்கடந்து வந்து இங்கு இருந்தாலும் எவ்வளவு வசதிவாய்ப்புகளுடன் இருந்தாலும் நமது ஆசிரியர்கள் நண்பர்கள் படித்த பாடசாலை, கோவில்கள் என்று நமது அடிவேர்களை நாங்கள் எம்மனதில் நினைத்துப்பார்த்து அசைபோட்டுக்கொள்வோம். வடதுருவத்தில் ஊசியிலைக் காடுகளும், அழகிய உயர்ந்த மலைகளும், ஆறுகளும், நள்ளிரவு சூரியனும், நீர்வீழ்ச்சிகளும், பனிமலைகளும் உள்ள இந்த இந்த நோர்வே நாட்டில் எலும்பும் உறைந்துவிடும் குளிரும் இந்த நோர்வே நாட்டுக்குரிய தனிச்சிறப்பு. அதைவிட அன்பும் பண்பும் கொண்ட நோர்வே நாட்டவர்கள் இங்கு வந்ததன்பின்பு தமிழ் அதிகமாக நான் எழுதுவது குறைந்து விட்டது, இதில் ஏதும் பிழைகள் இருப்பின் மன்னித்துவிடும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அன்புள்ள ஆசானே உங்களை வாழ்த்துவதற்கு எனக்கு வயதில்லை இருந்தாலும் என்றும் நீங்கள் நீண்ட ஆயுளும் குறையாத ஆரோக்கியமும் பெற்று உங்கள் அன்புசெல்வங்களுடன் வாழ இறைவனை வேண்டி வணங்கி விடைபெறுகிறோம்.

அன்புடன்

நோர்வேயிலிருந்து **யோகம்**

# வாழ்த்துச் செய்தி



ஈழமணித் திருநாட்டின் வரணி என்னும் கிராமத்தில் பிறந்த தன்னலம் கருதா பெரும் ஆசான் அம்பலவாணர் ஆசிரியர் அவர்கள்.

நாங்கள் உயர்தரவகுப்பு கல்வி பயின்ற நேரத்தில் ஆசிரியர்கள் பெரும் பற்றாக்குறையாக இருந்தது. அதிகமான மாணவர்கள் கல்வி கற்க வசதியின்றியும், சரியான வழிகாட்டல் இன்றியும் மாணவர்கள் நம்பிக்கையற்று, செய்வதறியாது இருந்த பொழுதுதான் இப்படிப்பட்டதொரு ஆசான் எங்களுக்கு கிடைத்தார். அவர் அன்றிலிருந்து எங்களுக்கு கல்வியை முறைப்படி கற்றுத்தந்தார். அதுமட்டுமல்ல கல்வியில் ஆர்வம் இல்லாத மாணவர்கள் கூட கல்வியை விரும்பத்தக்க முறையில் எளிய நடையில் இலகுவான முறையில் கல்வி கற்பித்ததன் பயனாக பல மாணவர்கள் பல்கலைக் கழகம் வரை சென்று பட்டம் பெற்றுள்ளார்கள்.

அம்பலவாணர் ஆசிரியர் அவர்கள் மாணவர்களின் கல்வி மேல் கொண்ட அக்கறை காரணமாக மாணவர்களிடமிருந்து எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது கண்துஞ்சாது கல்வி கற்பித்ததன் பயன் இன்று பல மாணவர்கள் அரசாங்கத்தில் உயர்பதவிகள் வகித்து, நல்ல பிரஜைகளாகவும் நல்ல சமூக சேவையாளர்களாகவும் விளங்குகின்றார்கள். நானும் அவரிடம் கல்வி கற்ற மாணவர்களில் ஒருவர். எனக்கும் அவரிடம் கல்வி கற்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெருமையடைகின்றேன். அத்தோடு நான் அவருக்கு என்றென்றும் நன்றியோடு இருப்பதுடன் அவர் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் சந்தோசமாகவும் வாழ நான் என் உளமார வாழ்த்துகின்றேன்.

அம்பலவாணர் ஆசிரியர் அவர்களின் சேவையைப் பாராட்டி இப்படி ஒரு விழா எடுப்பதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு இப்படி ஒரு விழாவை எடுக்கும் அத்தனை உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் எனக்கும் பங்களிப்புச் செய்ய வாய்ப்பு தந்த எல்லோருக்கும் என்மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்

**கலாநிதி சோதிலிங்கம்** (மாணவி)

கரம்பைக்குறிச்சி, வரணி

(கனடா)

## நம் ஆசான் பல்லாண்டு வாழ்க!



ஈழமுடி யாழ்நகரில் எழில்பொங்கும்
வரணி இடைக்குறிச்சி பகுதியில் வாழ்
சுட்டிபுரம் கண்ணகியாம் சுந்தரி அருளைப் பெற்று
அவள் தேரோடும் இப்பதியில்
தமிழ் நாதமது சேர்ந்து வர
சைவம் கூட இசை பாடும்
சைவத் தமிழ் தன்னை
தெள்ளத் தெளிந்துணர்ந்து
பள்ளித் தலமூட்டும்
மேன்மை தலை ஆசான்
அம்பல வாணர் சேர்

கந்தர் தன் மனையாள் களிப்புடனே பெற்று
தாய்ப்பால் அருந்தும் முன்பே
தமிழ்ப்பால் குடித்தாரே
கேட்பார் அதிசயிக்கும்
பேரறிவு தான் படைத்து
பார்பவர் பரவசிக்கும்
பண்பனைத்தும் கொண்டவராம்

கந்தர் தந்த வண்ணத்தமிழ் கவியே
நம்மை விட்டு மெல்ல தமிழ் சைவம்
மேல் நாட்டிலும் மறையாமல்
அள்ளி அமுதளித்தாய் சேர் நீங்கள் எனக்கு!
உன் பெயரால் பாரெல்லாம் பரந்துறையும்
பல தமிழ் கவிகளை உருவாக்கினாய் ஐயா!
அறிஞராய், கவிஞராய் ஆசானாய் பல
உங்கள் கல்வித்தன்மையில் உருவாக்கினீர்கள் ஐயா!
உங்கள் சிறப்பு விழாவிலே
நான் கலக்காவிட்டாலும்
என் கவி கலப்பதை எண்ணி
பெருமையடைகின்றேன்
கடல் கொண்டும் அழியாத
தமிழ் என்று நீர் வாழ்க!
தமிழ் வாழும் நாளெல்லாம்
தரித்துங்கள் புகழ் வாழ்க
வாழிய பல்லாண்டு என
பூரித்து வாழ்த்துகின்றேன்.

உங்கள் அன்பு மாணவன்
**வேலுப்பிள்ளை ஆறுமுகம் - சுவிஸ்**
வரணி இயற்றாலை, வரணி

# வரணிப் பதிதந்த வளமார்ந்த அறிவுநிதி



தென்மராட்சி - வடமராட்சிக் கல்விப் புலத்தில் தடம் பதித்த நல்லாசிரியராகவும் ஒரு கல்வி நிர்வாகியுமாகவும் தன் அடையாளத்தை வெளிப்படுத்தியவர் திருவாளர் க. அம்பலவாணர் அவர்கள் ஆசிரியர், அதிபர், கல்வி நிர்வாகி, சமுதாய வழிகாட்டி எனப்பல ஆளுமைப் பண்புகளுடன் சிறப்புற்று திகழ்பவர்.

தனது கற்பித்தல் பணியை சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்து தொடங்கி சமூகத்தின் பல்வேறு தளங்களிலும் தடம்பதித்தவர். வடமாகாணத்திலேயே தன் மாணவர்கள் கல்வி நிர்வாகிகளாக திகழ முன்னோடியாக விளங்கியவர். தன்பண்பான நடத்தையாலும், பரிவான பேச்சாலும் எல்லோரதும் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக விளங்கி வரணிப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வித்திட்டவர்.

ஒரு தனிமனிதனின் ஆளுமையும் சிந்தனைகளும் கூட ஒரு சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியின் உந்து சக்தியாக அமையும் என்பதற்கு சான்றாக திகழ்ந்து. எமது பிரதேச மாணவர்கள் உயர்கல்வி கற்று பட்டக்கல்வியைப் பெற வித்திட்டவர். பல பாடங்களையும் காய்தல் உவத்தல் இன்றி கற்பிப்பதில் மிக வல்லவர்.

வரணிப் பதியின் பட்டக்கல்விப் பாரம்பரியம் என்னும் பேரால மரத்திற்கு வித்திட்டு, நீருற்றி வானுற ஓங்கி வளம்பெற வளர வழிகாட்டி கல்வியின் செழிப்பையும், சிறப்பையும் வேர்கள் மட்டுமன்றி விழுதுகளும், கிளைகளும் கூட உணர வைத்தவர் எனது ஆசான் திருவாளர் க. அம்பலவாணர் அவர்கள். தான் மட்டும் கல்விகற்று உயரிய வாழ்வு வாழ எண்ணாமல், தான் கற்றகல்வியை தான் வாழ்ந்த சமுதாயத்திற்கும் போதித்து கல்வியில் ஈடுபாடு நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கிவிட்டவர்.

இவ்வாறான சிறப்பியல்புகளை தன்னகத்தே கொண்ட இவரை, ஆசானாகவும், மைத்துனராகவும், வாழ்க்கை வழிகாட்டியாகவும் பெற்றதைப் பெரும் பேறெனக் கருதுகின்றேன்.

என் இனிய இல்லாளின் அன்பு அண்ணனாகவும், ஆசானாகவும், பந்த பாசம் மிக்க உறவினராகவும் நான்கு தசாப்த காலத்திற்கு மேலாக வாழ்ந்து வருவதையிட்டு பெருமகிழ்வடைவதோடு ஒருவரின் சேவைகள், ஆற்றல்கள் அவர் வாழும் காலத்திலேயே போற்றிப் புகழ்ப்பட வேண்டும் என்ற கூற்றிற்கு இணங்க இன்று நடைபெறும் “சேவை நயப்பு ஒன்றுகூடல் விழா” சிறப்பாக நடைபெற நாமும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கொழும்பு - 06
2016.08.12

**திரு. திருமதி ஆறுமுகம்**
மாணவர்கள்.

# வாழ்த்துச் செய்தி



சைவநெறியும் செந்தமிழும் செழித்தோங்கும் வரணியம்பதி பெற்றெடுத்த மாண்புமிகு அம்பலவாணர் ஆசிரியர் அவர்களின் சேவையை பாராட்ட முன்வந்த "அம்பலநாதம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி தொடுப்பதில் பெரும் பேறடைகின்றேன்.

நல்ல கல்வியுடன் நல்லொழுக்கத்தையும் பண்பாட்டு விழுமியங்களையும் மாணவர்களிடம் கட்டியெழுப்பவும், ஆற்றலும் நம்பிக்கையுமுள்ள சமூகத்தை வளர்த்தெடுப்பதிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றிய ஒருவர் திருவாளர் அம்பலவாணர் ஆசிரியர் அவர்கள் ஆவார். 1985ஆம் ஆண்டு யா/ வரணி மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கையைத் தொடர ஆசிரியர் இல்லாத காரணத்தால் வகுப்புக்களை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது ஊர்ப்பற்றும் தமிழுணர்வும் கொண்ட ஒரு கல்விக்கொடை வள்ளலாக சுயவிருப்பத்தின்பேரில் தாமாகவே முன்வந்து தன்னிகரில்லா சேவையாற்றி ஒரு சரித்திர புருஷராக தன்னை இனம் காட்டியவர் திருவாளர் அம்பலவாணர் ஆகும்.

கல்விக்கு விலைபேசும் இன்றைய சமூகத்தில் தன்னை முழுநேரத்தொண்டனாக பாடசாலைக்கு அர்ப்பணித்ததோடு தன்நண்பர்கள் குழாத்தின் சேவையையும் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்த ஒருவர். அத்தோடு தனக்கென எவ்வித புகழையும் பதவிகளையும் சிறிதேனும் எதிர்பாராது சமூகநலனுக்காகவே சேவையாற்றிய ஒரு தொண்டனாக அவர் செயற்பட்டார். 1986 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மூன்று பிரதான பாடங்களை தனித்துநின்று துணிச்சலுடன் புகட்டி நூறுவீத சித்தியைப் பெற்றுக் கொடுத்ததோடு ஒரே தடவையில் நான்கு மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறச் செய்ததன் மூலம் பாடசாலை வரலாற்றில் முதன்முதலாக தனக்கென ஒரு தடம் பதித்த பெருமை அவரையேசாரும்.


அவரின் தன்நம்பிக்கை, விடாமுயற்சி, தேசப்பற்று, சாதிக்கத்துடிக்கும் ஆர்வம் என்பன வரணிப்பதிக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். அந்த ஆற்றலுள்ள அறிவுப்பொக்கிசத்தினை எம்மவர்கள் கையாளத் தவறிவிட்டார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன். இருந்தபோதும் அவரது கற்பித்தல் திறமையும், அறிவும் தன்னலம் கருதாத சேவையுணர்வும் அவரைச் சான்றோனாக்கி பதவிரீதியான கௌரவங்கள் அவரைத்தேடிவந்து அலங்கரித்தமையை பாராட்டாதிருக்க முடியவில்லை.

பள்ளிச் செயற்பாடுகளில் சாதனை படைத்த மாணவர்களை தட்டிக்கொடுத்துப் பாராட்டுவதுபோல அந்தச் சாதனைகளுக்கான வழிகாட்டிகளாகவிருந்த ஆசிரியப்

பெருந்தகைகளை பாராட்டி கௌரவிப்பதும் மிகமுக்கியமாகும். அந்தவகையில் விழாக்குழுவினர் மேற்கொள்ளும் கௌரவிப்பு விழாவும் அதனையொட்டி வெளியிடப்படவுள்ள மலரும் சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். விழாவின் கதாநாயகனான எனது பெருமைக்கும், அபிமானத்திற்குமுரிய கௌரவ ஆசிரியரின் சேவை எம்மவர்க்கு தொடர்ந்தும் கிடைக்கவேண்டுமென்றும் அவரும் அவரது குடும்பத்தினரும் எல்லா வளங்களும் பெற்று பல்லாண்டுவாழ இறையருள் கிட்டவேண்டுமெனவும் நான் மனதார பிரார்த்திக்கின்றேன்.

**நாகலிங்கம் கோவிந்தராசன்**
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி,
திருகோணமலை.
10.08.2016

# வாழ்த்துச் செய்தி



**"வீணாகானபுரி"** என்னும் பெயர் பெற்ற யாழ்பாணத்தின் வரணி மண் பெற்றெடுத்த எங்கள் ஆசான் அம்பலவாணர் ஐயாவின் மணிவிழாவில் வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அம்பலவாணர் ஐயா அவர்களை நான் முதன்முதலில் 1986 ஆம் ஆண்டு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் கல்விபயிலும் போது அவரின் பெறாமகனான சத்தியன் (எனது சக மாணவன்) மூலமாகவே அவரது கற்பித்தல் பணியினை அறியமுடிந்தது.

எமக்கு, பொருளியல் பாடத்தை கற்பித்த ஆசான், அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை அவர் எமக்கு விளங்கப்படுத்தியவிதம் இப்போதும் எனது மனதில் பதிந்துள்ளதை ஒருகணம் மீட்டுப்பார்க்கின்றேன்.

ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக ஐயாவின் கல்விப்பணி தொடர்ந்து வியாபித்தே இருந்து வந்துள்ளது.

**"கல்வியே எங்களின் அழியாத பெருஞ்செல்வம், அதனைக் காத்தும், வளர்த்தும், பேணும் கல்வியாளர் போற்றுதற்குரியவர்."**

அந்தவகையில் தெளிந்த இலக்குடனும் நிமிர்ந்த அவரின் பணிகளை ஐயாவின் மாணவன் என்ற வகையில் மனதார வாழ்த்துகின்றேன். மணிவிழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அகமகிழ்வு கொள்கின்றேன்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்."**

நன்றி

**த. சிவசெந்திநாதன்**
கணக்காளர்,
இலங்கை கணக்காளர் சேவை - தரம் -I,
மாகாண விவசாயத்திணைக்களம்,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

# ஆசிரியத்துவத்தின் உதாரண புருசர்



ஆசான் திரு.க. அம்பலவாணரைச் சந்தித்த மாணவர்கள் அதிஷ்டசாலிகள், பூர்வ புண்ணியவான்கள். கல்விக்கு முற்றுப்புள்ளி இடப்படுமா? என்று ஏங்கியிருந்த வேளை, ஆபத்பாந்தனவாக பேராதனைப் பல்கலைக் கழக பட்டதாரியாக, ஊர் திரும்பியிருந்தார், ஆசான் திரு. கந்தர் அம்பலவாணர்.

பல்துறை ஆற்றல், கற்றல் ஆளுமை, இளமைத்துடிப்பு, சமூக நோக்கு, மனந்தளராமை, முற்போக்குச் சிந்தனை என்பன எம்மைப்போன்ற பலமாணவரை ஈர்த்ததில் வியப்பில்லை. ஒருவர் இருவராக பலர் எம்முடன் இணைந்தனர். வரணிக் கிராமத்தின் பல இடங்களிலிருந்தும் குருவை நாடிய சீடர்களாக ஆசிரியரை சரணடைந்தோம், அன்புடன் அரவணைத்து கல்வியுடன் முற்போக்குக் கருத்துக்களையும் விதைத்து கல்வியில் வழிப்படையச் செய்தார்.

வரணிக் கிராமத்தில் ஆசிரியரது அடித்தளம், இன்று பாரிய கற்றோர் குழாமாக மிளிர்கிறது. நாம் ஆசிரியரிடம் கற்ற காலத்தை மூன்று தசாப்தம் கடந்து எண்ணிப் பார்க்கிறேன். இன்றும் பசுமையாக இருக்கிறது.

ஆசிரியர் மட்டுமல்லாது ஆசிரியரின் தாய், தந்தை உறவுகளின் அன்றைய ஆதரவு எமக்கு கல்வியில் ஊக்கத்தைத் தந்தது. "திண்ணைப் பள்ளியாக அமைந்த இல்லத்தில் ஆனந்தமாகக் கற்றோம். விசேட நாட்களில் தாயாரின் விருந்தோம்பலில் களித்தோம்.

ஊரில் திருவிழா மற்றும் நிகழ்வுகளில் மாணவர் பட்டாளம் ஆசிரியருடன் துவிச்சக்கர வண்டி ஊர்வலம் வரும். ஆசிரியரைச் சூழ்ந்து செல்வதில் எமக்குப் பெருமிதம்.

ஆசிரியர் பதவி கிடைத்தது, இடைவெளி ஏற்பட்டாலும் அவரின் ஊரில் அயலில் நானும் திருமணம் புரிந்தேன். அதனால் ஆசிரியரின் உறவு நெருக்கமானது. ஆசிரியரது மனைவியும் பிள்ளைகளும் ஆசிரியரது குடும்பத்தினர் போலவே அன்பாக ஆதரித்தும் மகிழ்வித்தார்கள்; உபசரித்தனர் தொடர்பு நிலைத்தது.

கல்வி தொடர்பாகவும், ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆசிரியரது ஆலோசனைகள் காத்திரமானவை ஹாட்லிக் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. விருப்பமில்லாமல் ஆசிரியரிடம் ஆலோசனை கேட்டேன். கட்டாயம் போக வற்புறுத்தினர். கல்லூரியில் பல அனுபவங்கள் என்னைப்புடம் போட்டன.

ஆசிரியரது மாணவர்கள் அனைவரும் இன்றளவும் நெருங்கிப் பழகுவதற்கு ஆசிரியர் பாலமாக இருந்தார். ஒவ்வொருவர் பற்றியும் சுகம் விசாரிப்பார். எங்களுக்குள் உறவு நீடித்தது. உயர்கல்வி, உத்தியோகம் எனப் பல வழிகளில் முன்னேற வழிகாட்டியது. கல்வியின் அருமையுணர்ந்த மாணவர்களான சின்னராசா யோம்மா தம்பதிகளின் தூண்டுதல் விழாவுக்கான உந்துதலாகும். இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

திரு. க. அம்பலவாணர் அவர்களும், உறவுகளும் பல்லாண்டு சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன்.

**கா. வல்லிபுரநாதன்** (மாணவன்)
ஓய்வுநிலை ஆசிரியர்.

# "புகழ்பூத்த ஆசான்"



எனது பேரன்புக்கும் மதிப்புக்குமுரிய **திருவாளர் க.அம்பலவாணர்** ஆசான் அவர்களுக்காக வரணி மக்களால் மேற்கொள்ள இருக்கும் சேவை நயப்பு பாராட்டு மலரில் எனது மனப்பதிவையும் பதிர்ந்து கொள்ள கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மட்டிலா உவகை அடைகின்றேன்.

பாடசாலை மாணவர்கள் வரிசையில் மூன்று பிரதான போட்டிப் பரீட்சைகள் அவை புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை க.பொ.த. உயர்தரப் பரீட்சை என மூன்று பரீட்சையிலும் தோற்றுகின்ற மாணவர்களுக்கு அவர்கள் தலைவிதி வசப்படியே ஆசிரியர்கள் கிடைத்துக் கொள்வார்கள். எனவே தான் "தாரமும் குருவும் தன்தன் தலை விதி" என்பார்கள்.

இந்தத் தலைவிதி என்னோடும் தாண்டவம் ஆடத்தவறவில்லை. இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்பாக நான் வரணி மகாவித்தியாலயத்தில் உயர்தரம் பயின்ற போது உயர்தரம் கற்பிக்கின்ற ஆசிரியர் பற்றாக்குறையும் பாடரீதியான ஆசிரியர் மந்த நிலையும் காணப்பட்டது. அப்போது கல்வியின் பெருமையை உணர்ந்து கொள்ளாத நாங்கள் கல்வியை எமது பொழுதுபோக்காக போக்கிக் கொண்டிருந்தோம் அப்போது எமது விதிவசமோ என்னவோ பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஆறு மாதங்கள் இருக்க எமது பாடசாலையில் ஒரு முழுநிலா பிரகாசித்தது. யார் அந்த முழுநிலா அவர்தான் இன்று சேவை நயப்பு பெறும் நாயகன்.

இவர் பொருளியல் பாடத்தை பொறுப்பேற்று கற்பிக்க முயன்றார். இவரது அறிவும் ஆளுமையும் அன்பும் எங்கோ திசை திரும்பி நின்ற எங்களை எல்லாம் கல்வியின் பால் உள்ளீர்த்தது. அந்த ஆறு மாதங்களும் எனது வாழ்வில் அற்புதமான நாட்கள். இந்த நாட்கள் ஒவ்வொன்றையும் எண்ணி நான் கவலை அடைவேன் ஏனென்றால் எனது உயர்தரக் காலப்பகுதியில் நாளில் ஒரு பாங்குக் காலமே இவர் சேவை எமக்கு கிட்டியது. நான்கு பங்கும் (4X6 மாதங்கள்) கிடைத்திருந்தால் எம்நிலை என்னவாகுமோ என்று இன்றும் நினைப்பதுண்டு. நான் மட்டுமல்ல எனது சகோதார மாணவர்களும் அவ்வாறே தான்.

இவர் கற்பித்த பொருளியல் பாடம் திறமைச்சித்தி பெற்றது மட்டுமல்ல இவரது உற்சாகமும் வழிநடத்துகையும் ஏனைய பாடங்களையம் சித்தி பெறச் செய்து இன்று இந்நிலைக்கு எம்மை ஆளாக்கியுள்ளது. தொடர்ந்து இவர் சேவையால் வரணியில் பல மாணவர்கள் உயர்கல்வி பெற்று அரசசேவையில் இன்று அலங்கரித்துக் கொண்டிருப்பது இவர் பெருமையை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

நேர் கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடையும் புன்சிரிப்பும் எம் மனதில் இன்றும் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் கேட்கின்ற கூறுகின்றவினா விடைகளுக்கு அவர் பல தடவை அசைக்கின்ற தலை அசைப்பு மாணவர்களுக்கு தட்டிக்

கொடுப்பதாகவே அமைந்தது. உண்மையான நெறியான தன்னார்வம் மிகுந்த ஆசானாகத் தான் நாம் ஒவ்வொருவரும் நோக்கினோம்.

அன்று இவரை சான்றோர் சிந்தனையோடு ஒப்பிடும் கல்வி எம்மிடம் இல்லாது விடினும் இன்று சிந்திக்கக் கூடியதாக உள்ளது. அதாவது புதுமைக் கவி பாரதி, சங்கத் தமிழ் புறநானூற்றுப் புலவர்கள் கூறிய வாக்கிற்கு அமைய நடந்துள்ளார் என்பது இன்று புலனாகிறது. பாரதியார் கண்ணன் என் சேவகன் என்ற பாடலில்

**"நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனாய்,**
**பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்"**

என்று பாடியுள்ளார் இப்பாடலை எண்ணும்போது எமது கண் முன்னே நிற்பவர்களில் முன்நிற்பவர் அம்பலம் ஐயா! அவர்கள் தான். இது மட்டுமல்ல சங்கத் தமிழ் புறநானூற்றுள் சில வரிகளை நோக்குகின்ற போதும் இவர் நினைவே வருகிறது.

**"தமக்கென முயலா நோன்றாட்**
**பிறர்க்கெனமுயலுந ருண்மையானே"**

இதனால் தான் இவ் உலகம் இன்றும் இருப்பதாக இளம்பெருவழுதி பாடியுள்ளார். இவ்வாறு மற்றவரின் உயர்வுக்காக உழைக்கும் திருவாளர் அம்பலம் ஐயா அவர்கள் சென்ற இடமெல்லாம் புதுமை கொண்டிருக்கும், கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. ஆசிரிய ஆளுமையோடு நிற்கவிடாது அரசானது அதிபராக கேட்டக்கல்வி அதிகாரியாக பல உயர் பதவிகளை வழங்கி அவரது சேவையை பல சமூக மாணவர்களுக்கும் பரக்கச் செய்து பயன்பெறச் செய்தது.

இத்தகைய பெருந்தகையாளனின் ஒய்வுக் காலம் சீரும். சிறப்புமாக பேரும் புகழுமாக கழிய எல்லாம் வல்ல இறை அருள் வேண்டி நிறைவு செய்கிறேன்.

**திரு. சி. சுந்தரமூர்த்தி**
ஆசிரியர்,
யா/உசன் இராமநாதன் ம.வி.

# வாழ்த்துச் செய்தி



வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த ஆசிரியர் க. அம்பலவாணர் அவர்கள் வரணிப் பிரதேச மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமடைவதற்கு பெரும் உறுதுணையாக செயற்பட்டவர். எதுவித பிரதிபலனையும் எதிர்பாராது பல மாணவர்களை கல்வியில் வெற்றியடையச் செய்து அவர்களை ஆசிரியர், அதிபர், அதிகாரி போன்ற பதவிகளில் அமரச் செய்தவர். அவரின் பணி வரணிக் கிராமம் கல்வியில் தொடர்ந்து முன்னேற்றம் அடைவதற்கு காரணமாக இருந்தது.

அவர் செய்த பணி அவரை அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் போன்ற பதவிகளில் உயர்வடையச் செய்தது.

அதேபோல் அவரின் பிள்ளைகளும் உயர் பதவிகளைப் பெற்று மிளிர்வதை காண்கின்றோம். திரு. க. அம்பலவாணர் அவர்களின் பாராட்டு விழா சிறப்புறவும், அவரும் பிள்ளைகளும் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறேன்.

***சி. அருணாசலம்***
ஓய்வுநிலை அஞ்சல் அதிபர்,
வரணி.

# ஆரோக்கியமான கர்ப்பகாலத்திற்கு பின்பற்றக்கூடிய வழிமுறைகள்



கர்ப்பகாலத்தின் போது ஆரோக்கியமான வாழ்க்கைமுறைகளைப் பின்பற்றுவது உங்களது உடல், உள ஆரோக்கியத்திற்கு மட்டுமன்றி உங்களது குழந்தையினது உடல், உள ஆரோக்கியத்திற்கும் மிக முக்கியமானதாகும். வாழ்க்கைமுறைகளில் ஏற்படுத்தும் மாற்றங்கள்; உரிய போசாக்கினைப் பெறுதல், ஒழுங்கான உடற்பயிற்சி, ஆபத்தான வேலைகளைத் தவிர்த்தல் என்பவற்றின் கூட்டு விளைவே உங்கள் ஆரோக்கியமாகும். உங்களால் முடிந்தளவு உங்கள் ஆரோக்கியத்தைப் பேணுவதன் மூலம் உங்கள் எதிர்காலக் குழந்தையின் ஆரோக்கியத்தை மிகச் சிறப்பாக முன்னேற்ற முடியும்.

சீரான பிரசவத்திற்கு முன்னான பராமரிப்பையும் கவனத்தையும் பெற்றுக் கொள்ளவும் (Prenatal care) உங்கள் கர்ப்பகாலத்தின் போதான மிக முக்கியமான நடவடிக்கையாக அமையவேண்டியது உரிய வைத்தியர் ஒருவரைத் தெரிந்தெடுத்து சீரான இடைவெளிகளில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணரை குடும்ப மருத்துவரை அல்லது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மாது ஒருவரை சீரான இடைவெளிகளில் தொடர்ச்சியாக சந்திப்பதன் மூலம் கர்ப்பகாலத்தின் போது உங்களதும் உங்களது குழந்தையினதும் பாதுகாப்பையும் ஆரோக்கியத்தையும் உறுதிசெய்து கொள்ளமுடியும். நீங்கள் கர்ப்பமாகவுள்ளதாக சந்தேகிக்கும் போதிலோ அல்லது கர்ப்பமாகவுள்ளதாக அறியும் பட்சத்திலோ விரைவாக பிரசவத்திற்கு முன்னரான சுகாதாரப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வது சிறந்தது. கர்ப்பகாலத்தின்போது இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒரு வைத்தியரை அணுகி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது சிறந்தது.

கர்ப்பகாலத்தின்போது உங்களது அன்றாட வேலைகளை உயிர்ப்பாக மேற்கொள்வதன் மூலம் உங்களதும் உங்களது குழந்தையினதும் ஆரோக்கியத்தை மேம்படுத்தமுடியும். கர்ப்பகாலத்தின் போது போதியளவு பொருத்தமான உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன்மூலம் பிரசவத்தின்போது ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ளமுடியும். நாளொன்றுக்கு முப்பது நிமிடங்கள் நடைப்பயிற்சியில் ஈடுபடல், துவிச்சக்கரவண்டி ஓட்டுதல், யோகாசனப் பயிற்சிகள் போன்றவற்றில் ஈடுபடல் போன்றவற்றை பொருத்தமான உடற்பயிற்சிகளாகக் குறிப்பிடமுடியும். கர்ப்பகாலத்தின்போது போதியளவு நித்திரை கொள்வது மிகவும் அத்தியாவசியமானதொன்றாகும். ஒரு இரவு குறைந்தது எட்டு மணித்தியாலங்கள் இரவு நேர நித்திரை கொள்வதுடன் இயலுமாயின் மதிய நேரங்களில் ஒரு சிறு நேரத்திற்கு நித்திரை மேற்கொள்வதும் சிறந்தது. இரவில் ஒரு குறித்த நேரத்தில்

தினமும் நித்திரைக்குச் செல்வதன் மூலம் நீங்கள் அமைதியான ஆழந்த தூக்கத்தை அனுபவிக்கமுடியும். கர்ப்பகாலத்தின்போது கர்ப்பிணிப் பெண்கள் தமது இடது பக்கமாக நித்திரை மேற்கொள்வது சிபாரிசு செய்யப்படுகின்றது. இதன்மூலம் கர்ப்பப்பையுடன் தொடர்புடைய ஒரு நாளத்தினூடாக நடைபெறும் குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவது தடுக்கப்படும். கர்ப்ப காலத்தின்போது போசணை மிக்க உணவுடன் போலிக் அமிலம், கனியுப்புக்கள், விற்றமின் மாத்திரைகளையும் ஏனைய குறை நிரப்பு உணவுகளையும் எடுத்துக்கொள்வதன் மூலம் குழந்தையில் ஏற்படக்கூடிய பிறப்புக் குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

கர்ப்பகாலத்தின்போது நீங்கள் போதியளவு நிறை அதிகரிப்பை அடைவது உங்களதும் உங்களது குழந்தையினதும் ஆரோக்கியத்தில் செல்வாக்குச் செலுத்தும். கர்ப்பத்தின்போது ஒரு பெண் அடைய வேண்டிய நிறை அதிகரிப்பானது அப் பெண்ணினது கர்ப்பத்திற்கு முன்னரான நிறையையும் உடற் திணிவுச்சுட்டியையும் வைத்து தீர்மானிக்கப்படுகின்றது. கர்ப்பகாலத்தின் போது போதியளவு ஆரோக்கியமான உணவுகளை உள்ளெடுப்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். உடனடி உணவுகளையும் அதிகளவு சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட உணவுகளையும் தவிர்ப்பது மிகவும் அவசியமாகும். கர்ப்பகாலத்தின் போது நிறையைக் குறைக்க விரும்பி உணவைச் சுருக்குவதோ அல்லது அளவுக்கதிகமாக உணவுகளை உள்ளெடுப்பதோ தவிர்க்கப்பட வேண்டும். நீங்கள் கர்ப்பகாலத்தின் போது போதியளவு ஊட்டச்சத்துள்ள உணவுகளை உள்ளெடுக்காது விடும் பட்சத்தில் உங்களது குழந்தை போசனைக்குறைபாட்டால் பாதிக்கப்படுவதுடன் பிறப்புக் குறைபாடுகள் ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. போதியளவு பழங்கள், மரக்கறிகள், தானியங்கள், பாற் பொருட்கள், புரத உணவுகளை அன்றாட உணவில் உள்ளெடுக்க வேண்டும். குறை நிரப்பு உணவுகள், மருந்துகள் மூலமாக போசனைப் பொருட்களைப் பெறுவதை விட இயற்கை உணவுகளிலிருந்து அவற்றைப் பெறுவதே ஊக்குவிக்கப்படுகின்றது. புரதமானது குருதியின் உற்பத்திக்கும் கலங்களின் வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமானது. முட்டை, இறைச்சி, யோகட், அவரை, பருப்பு வகைகள் போன்றவை புரதம் நிறைந்த சில உணவுகளாகும். யோகட், சீஸ், பால், கீரை போன்றவை கல்சியம் நிறைந்த உணவுகளாகும். கர்ப்ப காலத்தின்போது இவற்றை உள்ளெடுப்பதன் மூலம் குழந்தையினது என்பு, நரம்பு வளர்ச்சியை மேம்படுத்த முடியும். அன்றாட உணவில் சிவப்பு இறைச்சி, கீரை போன்ற உணவுகளை உள்ளெடுப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். இரும்பானது அனைத்து கர்ப்பிணிகளுக்கும் மருந்துக்குளிகையாக வழங்கப்படுகின்ற போதிலும் அதனுடன் இயற்கையான இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை உணவில் சேர்த்துக்கொள்வது சிறந்ததாகும்.

கர்ப்பகாலத்தின்போது மது அருந்துதல் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். மதுப் பாவனையானது பல வகையான பிறப்புக் குறைபாடுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதுடன் கருக்கலைவு, குழந்தை இறந்து பிறத்தல் போன்றவற்றிற்கான

வாய்ப்புக்களையும் அதிகரிக்கின்றது. கர்ப்ப காலத்தின் போதான மதுப் பாவனை குழந்தையின் பிறப்பின் பின்னான விருத்திப் படிமுறைகளில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. கர்ப்பகாலத்தின்போது கர்ப்பிணிப் பெண்கள், குடும்பத்திலுள்ள ஏனையவர்கள் புகைப்பிடிப்பதை தவிர்க்கவேண்டும். கர்ப்பகாலத்தின் போதான புகைத்தலானது கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல், நிறை குறைந்த பிள்ளைகள் பிறத்தல் போன்றவற்றுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றது. கர்ப்பகாலத்தின் போது இரசாயனப் பொருட்கள், பார உலோகங்களை தமது கூறாக கொண்ட பொருட்களை பெண்கள் கையாள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். பச்சையான அல்லது போதியளவு சமைக்கப்படாத இறைச்சி, மீன் போன்ற உணவுகளை உணவில் சேர்ப்பது உகந்ததல்ல. இதன்மூலம் உணவு மூலம் பரவும் நோய்களிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

கர்ப்பகாலத்தின்போது குறித்த நேர இடைவெளிகளில் கடுமையான வலி ஏற்படுதல், பிறப்புறுப்பினூடான இரத்தப்போக்கு, திரவ வெளியேற்றம், மயக்கம், சுவாசித்தலில் சிரமம், இதயப் படபடப்பு, குழந்தையின் துடிப்புவீதம் குறைவடைதல் என்பவற்றின் போது உடனடியாக வைத்திய உதவியை நாடுதல் இன்றியமையாததாகும்.

**வைத்திய கலாநிதி யோகராசா கஜேந்திரன்**
MBBS -MD
மகப்பேற்று பெண்நோயியல் மருத்துவர்.

# சிங்கப்பூரில் இன ஒற்றுமையும் இலங்கைக்கான பாடங்களும்
## (Ethnic Solidity in Singapore and Lessons to Sri Lanka)

### 1. அறிமுகம்

உலகிலே முரண்பட்டு கலவரங்களில் ஈடுபட்ட பல இன மக்களை ஒன்றாக்கி ஒற்றுமைப்படுத்தி எல்லா மக்களின் வாழ்கைதரத்தையும் முன்னேற்றிய நாடுகளில் சிங்கப்பூர் பிரதான இடைத்தை வகிக்கின்றது. இக் கட்டுரை இனங்களை ஒற்றுமைப்படுத்துவதில் சிங்கப்பூர் கையாண்ட அனுபவத்தை இலங்கையுடன் ஒப்பிட்டு விளக்குகின்றது. இலங்கையின் அபிவிருத்தியில் அரசாங்கங்களின் இனப்பேதப்படுத்தல்கள் இடம் பெற்றுள்ளது என்பதை புள்ளிவிபர ரீதியாக நீருபிக்க முடியும். இனப் பேதப்படுத்தல்கள் இடம் பெற்றதை அரசியல் தலைவர்கள் ஏறறுக் கொள்கின்றனர் தற்போது இன ஒற்றுமைக்கு அல்லது இனரீதியான ஒற்றுமையான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் பல மில்லியன்களை செலவு செய்கின்றது. அரசாங்கத்தின் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் Ethnic Cohesion, Social Harmony, Social Collaboration என பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. இந்நிகழ்சசித் திட்டங்கள் யாவும் இன ஒருமையாக்களை நோக்கமாகக் கொண்டன. Cohesion என்ற பதமானது சேர்ந்தமையும் தன்மையும் ஆற்றலும் அல்லது ஒத்திசைவுத் திறன், கூடி வாழும் கலைத்திறன் எனப் பொருள்படுகின்றது. இனத்தை குறிப்பாக சிறுபான்மை மக்களிடையே ஒத்திசைவு திறன்களை வளர்ப்பதற்காக உயர்கல்வி மட்டத்தில் பல்கலைக்கழகங்களில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இலங்கையில் உள்ள பிரச்சினை யாதெனில இனங்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்திசைகின்ற ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என்பதல்ல. மாறாக அரசியல் தலைமைத்துவமும் மற்றும் கொள்கை வகுப்பாளர்களும் பல்லின மக்களின் ஒத்திசைவு நிலைகளை அரச கொள்கையின் ஊடாக தடுப்பதாகும். கீழ் மட்டத்தில் இன ஒத்திசைவுக்கான பல உறவுகள் காணப்படுகின்றன.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் சேர் பொன் அருணாச்சலத்தை டீ. எஸ் சேனநாயக்கா உட்பட்ட பல அரசியல் தலைவர்கள் குதிரை வண்டியில் அமர வைத்து துறைமுகத்தில் இருந்து அவரின் வாசஸ்தலத்துக்கு இழுத்து வரும் அளவுக்கு இன ஒத்திசைவாற்றல் இருந்துள்ளது. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் தலைவர்களின் பின்புலம் இல்லாமல் இனக்கலவரத்தில் ஈடுபடவில்லை. எனவே இலங்கையின் அரசியல் தலைமைகளே இந்நாட்டை அழிவுக்கு இட்டுச் சென்றுள்ளனர். இன ஒத்திசைவுத்திறன் கீழ்மட்டத்தில் இல்லாமல் மேல்மட்டத்தில் புகுத்தப்பட வேண்டும். அரசியல் தலைவர்களுக்கும், கொள்கைவகுப்பாளர்கள், உயர் பதவி வகிப்பவர்களுக்கு இன ஒத்திசைவுத்திறன் இல்லை என்பது அல்ல. மாறாக இவர்கள் தமது சுயநலத்துக்காக முரண்பாட்டுக்

கொள்கைகளை மக்களிடையே விதைத்துள்ளனர். இன ஒற்றுமைக்காக இலங்கை சிங்கப்பூரில் இருந்து பின்வரும் விடயங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

**2. மொழிப் பிரச்சினை**

இலங்கையில் இனங்களுக்கிடையில் இன ஒத்திசைவுத்திறன் வளர்ப்பதற்கு ஆங்கிலக் கல்வியையும் ஆங்கிலத்தை அரச கரும மொழியாகவும் கொண்டு வருவதன் மூலம் இனங்களுக்கு இடையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். மூன்று மொழிகளில் கல்வி கற்ற பொறியியலாளர்கள் ஓர் பாலத்தை கட்டுவதைக் காட்டிலும் ஒரே மொழியில் படித்த மூன்று இளைஞர்கள் மிக இலகுவாக நேர்த்தியாக உறுதியாக ஒரு பாலத்தைக் கட்ட முடியும். இலங்கையில் இருந்தது போன்று சிங்கப்பூரில் சீன பின்னணியைக் கொண்ட அரசியல் வாதிகள் சீன மொழியை அரச கருமமொழயாக வழியுறுத்தி இருந்தனர். இலங்கையில் 1956 இல் இம்மொழிப் பிரச்சினையை அனுபவித்திலிருந்து லீ சிங்கப்பூரில் ஆங்கிலக் கல்வியையும் ஆங்கிலத்தை அரச கரும மொழியாகவும் தேர்ந்து எடுத்துள்ளார். இக்கொள்கை பின்வரும் நன்மைகளை கொண்டு வரும்.

1. இனங்களுக்கு இடையில் உறவுப் பாலத்தை கட்டி இன கூட்டுறவுத்திறனை வளர்க்கும் பிரதான ஆயுதமாக தொழிற்படும். இந்தியாவில் பல மொழி பேசுகின்ற மக்களை ஆங்கில மொழி இணைக்கின்றது.
2. இலங்கையின் ஊழியப்படையை சர்வதேச தரத்துக்கு தரம் உயர்த்துவதோடு சர்வதேச ரீதியாக இலங்கையின் பட்டதாரிகளும் தொழில்களும் சுலபமான வேலைவாய்ப்பையும் பெற்றுக் கொள்ளவும் முடியும். இது இவர்கள் குடும்பங்களில் வருமானத்தை மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும்.
3. மூன்று மொழிகளில் ஆவணங்களையும் பாடப்புத்தகங்களையும் அச்சடிப்பதற்கான செலவுகளையும் மீதப்படுத்துகின்றது.
4. பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான சர்வதேச அறிவு சார் வல்லுநர்களை இலகுவாக உள்வாங்க முடியும். இருப்பினும் புதிய தாய்மொழிக் கல்விக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் இடையில் ஓர் நேர்க்ணியமான தொடர்பு இருப்பதாக ஜப்பான், ஜேர்மன், சீனா போன்ற நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கை புதிய அறிவை உருவாக்குவதை விட அறிவை பரவலாக்கம் செய்வதன் மூலம் அதிக நன்மைகள் பெறமுடியும் என சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். அறிவுப் பரவலாக்கத்துக்கு ஆங்கிலக்கல்வி அதிக பங்களிப்புச் செய்யும்
5. இன்றைய உலகமயமாக்கத்தில் வெளி உலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆங்கில மொழிக்கல்வியும் அதன் விரிவாக்கமும் அதிக பங்களிப்பைச் செய்ய முடியும்.
6. இனமுரண்பாட்டுக்கு ஓர் முற்றுப்புள்ளியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இருப்பினும் இதில் ஒரு குறைபாடு உள்ளது. குறிப்பாக ஓர் இனத்தை மற்றும் மொழியை வைத்து அரசியல் பிழைப்பு நடாத்தும் அரசியல் வாதிகளின் பிழைப்பில் மண் போட வேண்டி இருக்கும் எனவே அரசியல்வாதிகள் இக்கொள்கையை ஜனநாயக அரசியலில் விரும்பமாட்டார்கள்.

இக்கொள்கையால் அரசியல்வாதிக்கு அதிக நன்மை கிடையாவிட்டால் ஜனநாயகத்தில் இக்கொள்கைக்கு எதிராக பல எதிர்ப்புக்களை அடிமட்டத்தில் இருந்து திரட்டி புரட்சியை ஏற்படுத்த இவர்கள் முனைவார்கள். அவ்வாறான எதிர்ப்புக்களை முளையிலேயே கிள்ளி எறிவதோடு நாட்டை தாராள ஜனநாயகத்தில் இருந்து விலக்கி ஒரு கட்சி அரசியலுக்கு மாற்றுதல் வேண்டும். ஒரு கட்சி ஆட்சி குடும்ப அரசியலாக அன்றி நாட்டின் எல்லா இன, மத மொழி பிரதேச மக்களையும் ஒன்றிணைக்கின்ற தேசிய அரசியல் கட்சி ஆட்சி முறையாக மாற்றமடைய வேண்டும். சிங்கப்பூரில் "யீ அவ்வாறான ஓர் கட்சியாகும். இம்மாற்றங்கள் அடிமட்டத்தில் இருந்து மேல் மட்டம் நோக்கி அன்றி, மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டத்துக்குச் செல்ல வேண்டும்.

சிங்கப்பூரில் இன ஒற்றுமையை ஏற்படுத்திய மிகவும் பிரதான காரணி ஆங்கிலக் கல்வியை உயர்கல்வியின் மொழி மூலம் ஆக மாற்றி அரசகரும மொழியாக மாற்றியமை ஆகும். ஏனைய மொழிகளை தேசிய மொழியாக பிரகடனப்படுத்தி அவற்றை செம்மையாக அமுல்படுத்தியமை ஆகும். இலங்கையில் 13ம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தமிழும் அரச கரும மொழியாக மாற்றப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள பிரச்சினை மொழிக் கொள்கை சிறிய வீதம் கூட அமுல்படுத்தபப்டவில்லை என்பதாகும். மொழி அமுலாக்கல் ஆணைக்குழு மட்டுமன்றி இதற்கான ஓர் தேசிய மொழி அமுலாக்கல் அமைச்சு கூட இருக்கிறது. ஆனால் நீதிமன்றத்திலே நீதிபதி கூட தமிழ் கைதியை பார்த்து சிங்களத்தில் கேள்வி கேட்கின்ற நிலையில் இருக்கின்றது. சட்டம் ஒழுங்கு நீதி போன்றவற்றுக்கு பொறுப்பாக இருக்கின்ற நீதித் துறையிலேயே இந்நிலைமை ஆயின் ஏனைய அரச நிறுவனங்கள், திணைக்களங்களில் தமிழ் மொழி அமுலாக்கல் நிலைமை எவ்வாறு இருக்கும் என அறிந்து கொள்ள முடியும்.

நல்லாட்சி என்பது சிங்கப்பூரில் மிகவும் திறமையாக பேணப்பட்டது. சிறுபான்மை மக்களின் உரிமைகள் 100 வீதம் சமமாக பேணப்படாவிட்டாலும் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களுடன் மனஸ்தாபங்கள் இல்லாது இணைந்து வாழும் அளவுக்கு பேணப்பட்டது. இது நாட்டுக்குள் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை கொடுத்தது மட்டும் அல்ல சர்வதேச நாடுகளில் இருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையைத் தூண்டி வெளிநாட்டு முதலீட்டை கவர்ந்து இழுந்தது.

இலங்கையில் 2009 யுத்தம் முடிவடைந்த பின்னரும் பாதுகாப்புச் செலவு தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது. குமார் ரூபசிங்க (2007) குறிப்பிடுவது போன்று இப் பாதுகாப்பு செலவில் ஒரு வீதத்தை மொழி அமுலாக்கத்துக்கு செலவு செய்தால் நாட்டின் தேசிய நல்லிணக்கம் மிக விரைவாக இடம்பெறும் என்கிறார். அரசியல் தீர்வு

இல்லாது மட்டும் அல்ல, அரசியல் தீர்வு இல்லாமல் பாராளுமன்றத்தின் அதிகாரம் இல்லாமல் ஏற்கனவே பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ள மொழி அமுலாக்கத்தில் ஒரு வீத சட்டம் கூட அமுல்படுத்தப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நிலைமை உள்நாட்டில் முதலீட்டாளர்களின் நன்மதிப்பை ஏற்படுத்தாது மறுபுறத்தில் ஒரு டொலரை ஒரு வெளிநாட்டவன் இலங்கையில் முதலிடுவது என்றால் இக்கொள்கை, சட்டம் அரசாங்கத்தின் கொள்கை போன்றவற்றில் ஒன்றுக்கு பல தடவை யோசித்து முதலிடுவான். சிங்கப்பூரில் இருந்து இலங்கை இந்த இன ஒற்றுமைக்கான மொழி அமுலாக்கத்தில் பல பாடங்களை கற்க வேண்டி இருக்கின்றது.

தமிழ்மொழி அமுலாக்கம் நடைமுறையில் உள்ள தாராள ஜனநாயக முறையில் சாத்தியமற்றது. இலங்கை அரசாங்கம் உள ரீதியாக தமிழ்மொழி அமுலாக்கத்தை நூற்றுக்கு 10 சதவீதம் கூட அமுல்படுத்த முடியாது. காரணம் அவ்வாறு ஒரு சிங்களத் தலைவர் முன்வரும் போது அவருடைய கட்சிக்குள்ளேயே பல எதிர்ப்புக்கள் தோன்றும். இவ் எதிர்ப்புக்கள் கட்சிக்கு வெளியிலும் இருக்கும். எதிர்கட்சிகளிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பும். இதன் காரணமாக தனது ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்து பேணிப்பாதுகாக்க முயற்சிக்கின்ற எந்த ஓர் அரசியல்வாதியும் இந்த விசப் பரீட்சைக்கு இறங்க முற்படமாட்டார். உலகத்துக்கு காட்டுவதற்கு சட்டத்தில் இருக்கும். எனவே இலங்கையில் பல கட்சி ஜனநாயக முறை இருக்கும் வரை இந்த மொழி முரண்பாடு இருக்கும்.

இந்த மொழி அமுலாக்கம் அதன் அடிப்படையிலான தேசிய நல்லிணக்கம் என்பது ஓர் கட்சி ஆட்சியானால் அல்லது சிங்கப்பூரைப் போன்று ஒரு கட்சி என்றும் தலைமை தாங்கும் ஓர் அரசியல் பொறிமுறை ஊடாக அடையப்படலாம். ஆனால் அவ்வாறான ஓர் அரசியல் மாற்றம் இலங்கையில் தற்போது (2004-2016) இருந்து வருகின்றது. ஆட்சியில் இருக்கின்ற இரண்டு பிரதான கட்சிகளும் இதை நடைமுறைப்படுத்த முடியும். இருப்பினும் சிங்கப்பூர், மலேசியாவின் முகமட் மஹ்தீர் ஆட்சி அல்லது சீனாவைப் போன்று ஒரு கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் அரசியல் பொறிமுறை இலங்கையில் பின்வரும் விடயங்களில் முரண்படுகின்றது.

1. இலங்கையில் ஒருகட்சி ஆட்சிமுறை எல்லா அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து உருவாக்கவில்லை. பதவிக்காக கட்சி தழுவிய அரசியல்வாதிகளை விட உள ரீதியாக தேசிய இலங்கையை கட்டி எழுப்புவதற்காக ஏனைய சிறிய கட்சிகள் ஆளும் கட்சியுடன் இணையவில்லை.
2. இலங்கையில் தற்போது இருக்கும் இரு கட்சியை பெரும்பான்மை ஆட்சிப் பலமாகக் கொண்ட பொறிமுறை பெரும்பான்மை மக்களுக்குள் எல்லா பிரதேச, கட்சி மற்றும் திறமைசாலிகளை உள்வாங்கவில்லை. இது உடனடியாக இடம்பெறாது விட்டாலும், நீண்ட காலத்திலும் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள்

குறைவாக இருக்கின்றன. குறிப்பாக ஜனதா விமர்த்தி பிறமுன (JVP) மற்றும் கூட்டு எதிரணியினர் என்பவற்றை இந்த ஆளும் கட்சி உள்வாங்கவில்லை எனலாம்.

3. இலங்கையில் இரு கட்சி தலைமை தாங்கும் ஆட்சி முறையில் இருக்கின்ற இன்னொரு குறைபாடு தலைமைத்துவத்தின் தரக்குறைபாடு ஆகும். நாட்டின் தலைவர்கள் பரம்பரை அரசியலுக்கு அப்பால் சிறந்த தரமான கல்வி பின்பலத்தை கொண்டு உருவாக்கவில்லை. பொருளாதார மற்றும் அரசியல் ஆலோசனைகளை உள்வாங்கி நாட்டை இனம், மதம். மொழிக்கு அப்பால் இலங்கைத் தேசியம் என்ற அடிப்படையில் கட்டியெழுப்புகின்ற பக்குவப்பட்ட அரசியல் தலைமையிடம் இல்லாமையும் ஓர் குறைபாடாகும். மக்களின் வாக்குகளை பெற்ற பிரபல்யமான தலைமைகள் சிறந்த தலைமைகள் அல்ல என்றும் மாறாக தூர நோக்கு உள்ள அபிவிருத்தியை நோக்காக கொண்ட அரசியல் தலைமைகள் பிரபல்யமாக இருக்க மாட்டார்கள் என்றும் ஒரு அறிஞர் குறிப்பிடுகின்றார். இந்தவகையில் லீ ஒக்ஸ்பேர்ட் மற்றும் லண்டன் அரசியல் பொருளாதார கல்லூரியில் (LSE) கல்வி பயின்ற சிறந்த கல்விப் பின்புலத்தை கொண்டவர். மலேசியாவில் முகமட் மு'தீர் ஓர் வைத்திய கலாநிதி ஆவார். இவர்கள் பல்லின சமூகம் உள்ள நாட்டில் நாட்டை ஓர் கட்சி தலைமைதாங்கும் ஆட்சி மூலம் கட்டியெழுப்பியது போன்று இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும் உருவாக்கக் கூடிய தர்மான கல்விப் பின்பலத்தைக் கொண்ட தலைவர்கள் இருக்கின்றார்களா? ஏன்ற கேள்வி எழுகின்றது. எனவே இவ்வாறான தூய குடும்ப அரசியல் பின்பலத்தை அடிப்படையாக கொண்ட தலைவர்களிடம் உயர்தரத்திலான ஓர் கட்சி தலைமைதாங்கும் ஆட்சி முறையை ஒப்படைத்தால் நாடு இன்னும் முரண்பாடுகளுக்கும் புரட்சிகளுக்கும் இட்டும் செல்லும் என கருத முடியும் என்பதை இலங்கையின் கடந்த கால அனுபவங்கள் காட்டி நிற்கின்றன.

4. இலங்கையில் ஒரு கட்சி ஆட்சி முறையிலான அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பொருளாதாரம் அல்லாத காரணிகளும் சாதகமாக காணப்படவில்லை எனலாம். உலகத்தில் எல்லாப்பகுதிகளிலும் யுத்தங்களும், இன, சமய முரண்பாடுகளும் காணப்பட்டன ஆனால் கால ஓடடத்தில் அவை சமூக மாற்றங்கள் ஊடாக பொருளாதார மாற்றங்களுக்கு வித்திட்டன. இலங்கை மக்களின் மனப்பாங்கு, வரலாறு, சமய நம்பிக்கைகள், தத்துவங்களின் மாற்றம் என்பது மிக கீழ்மட்டத்திலேயே இருக்கின்றன. இன, மத, மொழி ரீதியாக சிந்திக்கின்ற ஓர் மக்கள் கூட்டத்தை கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலான இனவாத அரசியல் உருவாக்கி விட்டது. எனவே இவற்றுக்கு அப்பால் மக்களை ஒன்றிணைப்பது கடினமாக இருக்கிறது. அரசாங்கம் சிங்கள பௌத்த நாடாக இலங்கையை மாற்றினால் அவற்றுக்கு ஆதரவு அதிகமாக இருக்கும். எனவே மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தை கொண்டுவராது இலங்கையில் ஒரு கட்சி ஆட்சி முறை சாத்தியமற்றதாக இருக்கிறது. 1960 களில் சிறுபான்மை மக்களின் வணக்கத் தலங்கள் மீது பெரும்பான்மை மக்கள் தாக்குதல் செய்தார்கள், சிறைச்சாலைகளில்

சிறுபான்மை மக்களை கொடூரமாக கொலை செய்தார்கள் இது பக்குவப்படாத காலம் எனக் கருதினால், இப்பிரச்சினைகளின் விளைவில் உருவான யத்தத்துக்கு பின்னரும் 2012 இலும் இத்தாக்குதல்கள் தொடர்கின்றன. உலக மாற்றமும் இலங்கை மக்களின் மாற்றமும் அரசியல் வாதிகளின் உளப்பாங்கை மாற்றவில்லை. அதேவேளை இலங்கையின் கடந்த கால கொடூரயுத்தமும் மாற்றவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இந்நிலையில் ஓர் கட்சி ஆட்சி முறை மென்மேலும் பௌத்த சிங்கள் இன வாதத்தை தூண்டுமேயொழிய மாறாக தேசிய நல்லிணக்கம் ஏறப்படாது என சிலர் வலியுறுத்துகின்றனர்.

இலங்கையில் தற்போது அரசியல் வாதிகளால் முன்னெடுத்து செல்லப் படுகின்ற தேசிய நல்லினக்கம் என்பது சிறு பாண்மை மக்களின் அடிப்படை உரிமைகளின் பாதுகாத்தல் என்று இல்லாமல் அவர்களை பெரும் பாண்மை இணத்துடன் ஒன்றினைத்து அவர்களின் ஒரு மொழி ஓர் சமயம் என்பவற்றை ஆயுத படைகள் மூலம் சிறுபான்மை மக்களிடையே பரவச்செய்தலாகும். இது ஒரு பதிய வகையில் அமைந்த தேசிய நல்லிணக்கம் ஆகும். இலங்கையில் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் பூர்வீகத்தில் இருந்து இல்லாமல் இடையிட்டு வளர்ந்து வந்தாயின் இந்த நல்லினக்கம் சாத்தியமாகலாம். ஆனால் இலங்கையின் முழு சனத்தொகையை விட 3 மடங்கு மேலான தமிழ் மக்களையும் அவர்களின் கலாச்சாரத்தை கொண்ட இந்தியாவின் தமிழ் நாட்டின் 14 கிலோ மீற்றர் கடல் வழி தூரத்தில், இலங்கையின் வடக்கு கிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழர்களையும் அவர்களின் அடையாளங்களையும் தேசிய நல்லிணக்கம் என்ற பெயரில் பெரும்பான்மை மக்களுடன் ஒருமைப்படுத்தல் இலங்கையில் இன முரண்பாட்டை களைவதற்கு பதிலாக, தமிழர்களை இலங்கையில் இருந்து பிரித்து இலங்கைக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து கடந்த காலத்தை போன்று மென்மேலும் இலங்கைக்கு நெருக்கடிகளை கொடுக்கும். இலங்கையில் தனி நாட்டுக் கோரிக்கை தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதால் உடனடியாக உள்நாட்டு சக்திகளால் மட்டும் உருவாக்கப்படவில்லை. இதில் வெளிநாட்டு சக்திகளுக்கு அதிக பங்கு உண்டு. பூகோள அரசியல் மாற்றங்களின் பின்னணியிலும் இலங்கையின் பெரும்பான்மை மக்களின் அரசியல் தலைமைகளின் நடவடிக்கைகளின் பின்னணியிலும் இலங்கையில் நீடித்து நிற்க கூடிய நிரந்தரமான அமைதி உருவாகுமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இலங்கை பூர்வீகமாக வாழ்கின்ற சொந்த நாட்டு சிறுபான்மை மக்களின் உரிமைகளை அடக்கி ஒடுக்கி இலங்கை மக்கள் எல்லோரையும் அன்னிய மற்றும் பிராந்திய ஆதிக்கத்தில் விழச் செய்கின்ற நிகழ்வுகளே கடந்த காலத்தில் நிகழ்ந்தன. எதிர்காலத்திலும் இவ்வாறான ஓர் நிலை தோன்றுவதற்கான அரசியல் பரிமானங்கள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிங்கப்பூரில் மலே நாட்டு மக்கள் சிறுபான்மையினராக உள்ளனர். சீனர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். லீ ஓர் சீனர் ஆவார். சிங்கப்பூரை லீ ஓர் சீன

நாடாக உருவாக்க முயற்சிக்கவில்லை. அரசாங்கத்தின் சிறுபான்மை அரவணைக்கும் கொள்கைகள், சிறுபான்மை மக்களை தேசிய சிங்கப்பூரினை கட்டியெழுப்புவதற்கு துணைபுரியச் செய்தன. மாறாக மலே நாட்டவர்கள் மலேசியாவுடன் சேர்ந்து சிங்கப்பூருக்கு எதிராக போர்க் கொடி தூக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது சிங்கப்பூரின் எல்லா இன மக்களையும் உள்ளீர்க்கும் ஆட்சியினால் ஏற்பட்டதாகும். பல கட்சியுள்ள தாராள ஜனநாயகத்தில் சிங்கப்பூரின் அரசியல் பயணித்து இருந்தால் சிங்கப்பூரில் இன நல்லிணக்கம் கேள்விக்குறியாக மாறி பொருளாதார அபிவிருத்தியும் மிகவும் கீழ் நிலைக்குச் சென்று இருக்கும்.

லீயின் ஆரம்பகாலத்தில் PAP க்குள்ளேயே சீனமொழிக் கல்வி மற்றும் சீனக் கலாச்சாரத்தின் சார்பாக வாதிடுகின்ற பல சக்தி வாய்ந்த தலைரவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் லீயின் கொள்கைக்கு எதிராக பிரச்சாரம் செய்தனர்[1].; லீயின் கல்விப் பின்புலம் மற்றும் உயர்தரத்திலான தலைமைத்துவப் பண்பு என்பன லீயை அவர்கள் பக்கம் சாராமல் தூரநோக்கு அடிப்படையில் சிந்தித்து பொதுவான ஓர் மொழிக் கொள்கைக்கு சென்றுள்ளார்[2].; ஏட்டிக்குப் போட்டியாக லீயும் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு மூன்றாம் வகுப்பு அரசியல் செய்யவில்லை மாறாகத் தான் ஓர் உயர்நிலைத் தரத்திலான தலைவர் என்பதை நீருபித்துக் காட்டியுள்ளார்.

### 3. பொதுச் சேவையும் இன ஒற்றுமையும்

ஓர் நாட்டில் இராணுவப் பொலிஸ், கடற்படை, பொதுநிர்வாகம் என பல பொதுச்சேவைகள் நாட்டின் மக்களைக் பணிக்கமர்த்தி வழங்கப்படுகினறன. பல இன மொழி பேசும் நாடுகளில் பொதுச் சேவைகள் அணைத்தும் எல்லா இன மக்களையும் பூரணமான விகிதாசார அடிப்படையில் இல்லையாயினும் அதிகளவு வீதாசார அடிப்படையில் வழங்கப்படும் போது தேசிய நல்லிணக்கம் ஏற்படும் என்பதற்கு சிங்கப்பூரில் இருந்து இலங்கை பல அனுபவங்களை பெற்றுக் கொள்ள முடியும். முதலாவதாக சிங்கப்பூரில் அனைத்து இளைஞர்களும் யுவதிகளுக்கும் 18 வயதை அடைந்தவுடன் கட்டாயமாக இராணுவப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. தேசிய சேவை என்பது சிங்கப்பூரில் கட்டாய ஓர் சேவை ஆகும். சிங்கப்பூரின் இராணுவப் படையில் எல்லா இன மக்களும் இணைக்கப்பட்டனர். இதன் முக்கியத்துவத்தை லீ பல தடவைகள் எடுத்துக் காட்டியுள்ளார்.[3];.

சிங்கப்பூரின் தேசிய சேவையானது சிங்கப்பூரின் பல்லினக்கங்களை ஒன்றிணைக்க உதவியது. தேசிய சேவையில் இனரீதியான பதவிகள், சலுகைகள் மற்றும் பதவி உயர்வுகள், வழங்கப்படாது திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சிங்கப்பூரின் முப்படைகளிலும் பதவிகளும் பதவிஉயர்வுகளும் அவர்களின் இன மொழி அடிப்டையில் இல்லாது அவரவர் திறமைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டன. இது பின்னர் ஏனைய அரச சேவைகளிலும் உள்வாங்கப்பட்டது. சிங்கப்பூரில் எந்த ஒரு அரச நிறுவனங்களிலும் மூன்று இன மக்களுக்கும் அவர்களின் தேசிய இன விகிதத்துக்கு

ஏற்ப வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தன. இது இனஒற்றுமையின் அத்திவாரமாக இருந்தது. இலங்கையில் சுதந்திரத்தின் போது பொதுச் சேவைகளில் தமிழர்களின் பங்கு அதிகமாக காணப்பட்டது. பின்னர் இது படிப்படியாக குறைக்கப்பட்டு. இன்று முப்படைகளில் சிங்களவர்களின் பங்கு 97 வீதமாகவும் அரச சேவையில் 63.2 வீதமாகவும் காணப்படுகின்றது. தமிழர்கள் முற்றாக புறக்கணிக்கப்படுகின்றனர் [4];.

ஓர் நாட்டின் பொதுச்சேவையை அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களை நிரப்பும் குப்பை கூடையாக மாற்றக்கூடாது, குறிப்பாக இராணுவம் மற்றும் பொலிஸ்படை ஆகிய இரண்டும் சிறந்த புத்திக்கூர்மையான உயர்தர மாணவர்களை தேர்ந்து எடுத்து அவர்களுக்கு சிறந்த பல்கலைக்கழக கல்வி மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியை கொடுப்பதன் மூலம் உயர்தர பொதுப்பணியாளர்களாக உருவாக்க முடியும். நாட்டின் இராணுவமும் பொலிஸ்படையும் கூலிக்கு மாரடிக்கும் அரசியல்வாதிகளுக்கு ஏவல் புரியும் தொழிற்படையோ அல்லது காடையர் கூட்டமோ அல்ல. குறிப்பாக பல இனமக்கள் வாழ்கின்ற நாட்டில் சமூகத்தில் குற்றச் செயல்களை புரிந்து தனது வாழ்க்கையை ஓட்ட முடியாத ஏழ்மையான முரட்டுக் கூட்டத்தை இப்படைகளுக்கு இணைக்கக் கூடாது என்பதில் லீ மிகவும் கவனமாக இருந்துள்ளார். ஓர் நாட்டின் முப்படைக்கட்டுமானத்தில் ஆரம்ப நிலையில் இந்த தரம் மிக முக்கியமானதாகும். சிங்கப்பூரில் நல்லாட்சி மற்றும் ஊழல் மோசடி கட்டுப்பாடு, வேகமான நிதிச்சேவை, பொலிஸ் படையின் சட்டம் ஒழுங்கை பராமரித்தல் போன்ற விடயங்களில் உயர்நிலையில் இருந்தமைக்கு இந்த பொதுச் சேவைகளின் ஆள்சேர்ப்பின் தகைமைகளுக்கும் பொதுச் சேவையின் தரத்துக்கும் இடையில் ஓர் நேர்த் தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன[5]. சிங்கப்பூரில் இப்படைகளுக்கு சேர்க்கப்பட்டவர்கள் சிறந்த ஒழுக்கத்தை உடைய திறமையான பல்கலைக்கழக மாணவர்கள் ஆகும். இவர்கள் இச்சேவைகளுக்கு உள்வாங்கப்பட்டதன் பின்னர் உலகில் பல தலைசிறந்த நாடுகளில் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு புலமை பரிசில்களைக் கொடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இவர்கள் மூன்று நிலைகளில் உலகின் முன்னணி பல்பலைக்கழகங்களில் பயிற்சியளிக்கப்பட்டனர். இறுதி நிலையில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பயிற்சி பொது அல்லது வியாபார முகாமைத்துவம் ஆகும்[6];.

நாட்டின் அரசியல் தலைவர்கள் ஓர் சிறப்பு கல்விக் கூடத்தில் நீண்ட கல்வி ஊடாக உருவாக்கப்பட வேண்டும் என எடுத்துக் கூறிய பிளேற்றோ போன்று லீயும் சிங்கப்பூரின் படைகளையும் அரசியல் தலைவர்களையும், மந்திரிகளையும் சிறந்த தரமான கல்வி மற்றும் பயிற்சிகளை கொடுத்து தரமான் சேவையாளர்களாக உருவாக்கியுள்ளார். இது பின்னர் நாட்டில் இனமுரண்பாடு இல்லாத இனப்பக்கச்சார்பு இல்லாத தேசிய பொதுச்சேவை படையை உருவாக்கி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு நேர்கணியமான செல்வாக்கை செலுத்தியுள்ளது.

இலங்கையில் பொதுச் சேவையில் சிங்கப்பூரின் அனுபவத்தை ஒப்பு நோக்குவதன் ஊடாக இலங்கையில் குறைந்த அபிவிருத்திக்கான காரணத்தை அடையாளம் காணமுடியும். இலங்கையில் ஆரம்பகாலத்தில் இராணுவம் மற்றும் பொலிஸ் படைக்கு இலங்கையின் முன்னணி கல்லூரிகளான றோயல், ஆனந்தா, சென்தோமஸ் போன்றவற்றில் கல்வி கற்ற மாணவர்கள் உள்வாங்கப்பட்டார்கள். உயர் பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள் உயர்வான திறமையான மாணவர்கள் என்ற முடிவுக்கு வரமுடியாது. இவர்கள் முதல் தர மாணவர்கள் அல்ல. மேலும் இவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு பல்துறைகள் உள்ளடக்கிய பயிற்சியையும் பெறவில்லை. இலங்கையில் இவ்வுயர் கல்லூரிகளில் கல்வி கற்றவர்கள் திறமையான மாணவர்கள் அல்ல என்ற பண்புக்கு அப்பால் இலங்கையின் உயர்வர்க்கம் மற்றும் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் ஆவார். இலங்கையில் உள்ள இப்படைகள் இலங்கையில் அரசியல்வாதிகளும் உயர் வர்க்க மக்களும் என்ன உளப்பாங்கில் இருந்தார்களோ அதே உளபாங்கிலேயே வளர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறு முதல் நிலையில் இராணுவ பொலிஸ் படைக்கு சேர்க்கப்பட்டவர்கள் சிங்கப்பூரைப் போன்று முதல்தர மாணவர்கள் அல்ல என்பதோடு இவர்களின் உளப்பாங்கு மகாவம்ச உளப்பாங்காகவே இருந்தது. இலங்கையில் உள்ள எல்லா இன மக்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் மதித்து தேசிய இன நல்லிணக்கத்தை உருவாக்கக்கூடிய பாதுகாப்புப் படையை இலங்கை உருவாக்கத் தவறிவிட்டது மட்டுமல்ல, இப்படைகள் இன வீதாசாரத்துக்கு மேலாக சிங்களவர்களை அதிகம் உள்வாங்கியிருந்தமை நாட்டின் சமூக அரசியல் ஸ்த்திரத்தன்மையை பாதித்து நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை கடுமையாகப் பாதித்து இருந்தது.

இரண்டாம் நிலையில் இலங்கையின் முப்படைக்கும் சேர்க்கப்பட்டவர்கள் கிராமிய வறிய குடும்பத்தை சேர்ந்த மக்கள் ஆவார். இவர்கள் முழுமையாக சிங்கள மக்களை உள்ளடக்கி இருந்து. இனக்கலவரங்களின் போது இலங்கை இராணுவமும் பொலிஸ் படையும் சிங்கள காடையர்களுடன் இணைந்து சிறுபான்மை மக்கள் மீது கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டு இருந்தனர்[7];. இலங்கையில் போர் உக்கிரமடைந்த போது இராணுவ மற்றும் பொலிஸ் படைக்கு மிகக் குறைந்த தகுதியில் சிங்கள மக்கள் மட்டும் உள்வாங்கப்பட்டனர். இப்படைகளில் தமிழர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு ஓர் நாட்டை கட்டியெழுப்புவதற்கு இருக்கின்ற முப்படைக்கட்டுமானங்கள் இலங்கையில் சிங்கப்பூரைப் போன்று இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு பதிலாக அரசியல்வாதிகளின் ஏவலுக்கு துணைபுரியும் பொலிஸ் படைகளாக மாறி இனமுரண்பாட்டை தூண்டுவதற்கு காரணமாக மாறினார்கள். இன, மத, மொழி வேறுபாடு இல்லாத தேசத்தை கட்டியெழுப்பும் படைகள் சிங்கள பௌத்த தேசத்தை கட்டியெழுப்பும் படைகளாக மாற்றமடைந்தன.
இலங்கையில் முப்படைகளும் மூவின மக்களுக்கும் மூவின மக்களும் பொதுவான ஓர் படையாக இன்றி சிங்களமக்களுக்குரிய ஓர் படையாக தொழிற்படுவதை அவதானிக்க முடியும்.

| அட்டவனை3.1: இலங்கையில் 18-30 வயதிலான ஆண்களின் தொழில் வகைகளின் சதவீதம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Total | |
| | அரசாங்கம் | இராணுவம் | தனியார் | தற்காலியம் | வியாபாரம் | கமத்தொழில் | வேலை செய்வோர் | மாதிரி எண்ணிக்கை |
| சிங்களவர்கள் | 63.2% | 97.1% | 61.2% | 60.5% | 63.9% | 75.5% | 65.5% | 1,796 |
| இலங்கைத் தமிழர்கள் | 20.3% | 1.4% | 23.0% | 25.6% | 13.0% | 21.3% | 21.6% | 593 |
| இந்திய தமிழர்கள் | 0.5% | 0.0% | 2.8% | 3.0% | 1.4% | 1.6% | 2.2% | 59 |
| முஸ்லீங்கள் | 15.6% | 1.4% | 12.4% | 10.1% | 18.5% | 2.1% | 9.9% | 270 |
| ஏனையவர்கள் | 0.5% | 0.0% | 0.7% | 0.8% | 3.2% | 0.0% | 0.9% | 26 |
| மொத்தம் | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 2,744 |
| | | | | | | | | |
| மாதிரி எண்ணிக்கை | 212 | 210 | 575 | 1,020 | 216 | 440 | 2,744 | |
| Source: SLIS 1999/2000 | | | | | | | | |

இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்து வரும் தென்பகுதி உல்லாசப்பயணிகளுக்கு பாடசாலைகள், கோயில்கள் என பொது இடங்களில் பொது இடங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் அனுமதியின்றி இராணுவம் தனது மேலாண்மையை பயன்படுத்தி வலுக்கட்டாயமாக அவ்விடங்களில் தங்கவைக்கின்ற நடவடிக்கைகளை நான் அவதானித்து இருக்கின்றேன். தென்பகுதிக்கு நான் பல்கலைக்கழக மாணவர்களை சுற்றுலாவுக்கு அழைத்து சென்றபோது தங்குமிட வசதியில் இருந்த குறைபாடு காரணமாக பல மணித்தியாலங்கள் வீதியில் மாணவர்களுடன் இரவுப் பொழுதை ஒரு பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் கழிக்க வேண்டி ஏற்பட்டது. நாம் பல்கலைக்கழக மாணவர்கள் என அறிந்தும் அருகில் உள்ள பாடசாலையில் மலசல கூடத்தை கூட பொலிஸார் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. எங்களை புலிகளாகவே நோக்கினர். எனவே இலங்கையில் படையில் சிறுபான்மை மக்களை இணைக்காமை ஒருபுறம் இருக்க, முப்படைகளும் தமது சேவையில் இனப்பேதப்படுத்தலை மேற்கொள்வதை அவதானிக்க முடியும். இது ஒற்றுமையை ஏற்படுத்தாது. அண்மைக்காலத்தில் வடக்கு கிழக்கில் முப்படையினரும் வீடுகள் அமைத்து அதை வறியமக்களுக்கு கையளிக்கின்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கென அரசாங்கம் நிதியை கொடுக்கின்றது. பாடசாலைகள்,

வறியவர்கள் பொது இடங்களை துப்பரவு செய்தல் என இராணுவத்தின் இச்சேவைகள் ஓரளவு தமிழ்மக்களிடையே இராணுவத்தினர் மீது இருந்த பயம், அவநம்பிக்கை என்பவற்றை குறைத்து அவர்கள் மீது ஓர் நன்மதிப்பை ஏற்படுத்துகின்றது. இருப்பினும் இவை ஓர் சிறிய நடவடிக்கைகள் ஆகும். யானைப் பசிக்கு சோழப் பொரி போன்றவையாகும். பல சந்தர்ப்பங்களில் பொலிஸாரும் இராணுவமும் சிங்கள மக்களுக்கு சார்பாக தமது கடமைகளை செய்வதால் தமிழ் மக்கள் இராணுவத்தை இலங்கை இராணுவம் என அழைக்காமல் சிங்கள் இராணுவம் என அழைப்பதைக் காணமுடிகிறது. வெசாக் கொண்டாட்டங்களில் இராணுவம் இராணுவ உடையுடன் அலங்கரிப்பதை காண முடிகிறது. இதே இராணுவம் ஏனைய மத விழாக்களுக்கு தனது சேவையை வழங்குவதில்லை. சிங்கப்பூரில் இந்நிலைமை நேர் எதிரானது ஆகும். ஓர் பொலிஸ் அதிகாரி தமது கடமையை செய்வதில் ஒர் அரசியல்வாதி கூட தலையிட முடியாது. அரசியல் தலைவருக்கே பாராபட்சம் காட்ட முடியாது எனில் ஓர் இன மக்களுக்கு எப்படி பாராபட்சம் காட்டமுடியும். இவ்வாறான ஓர் பக்கம் சாராத காவல்துறை, பாதுகாப்புத்துறை, நீதித்துறை என்பன சிங்கப்பூரில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்க இலங்கையில் இந்நிலைமை எதிர்மறையாகச் சென்றது.

இலங்கையில் அண்மைக்காலத்தில் தலைமைத்துவ பயிற்சி என்ற அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் அதிபர்கள் போன்றவர்களுக்கு இராணுவத்தினரால் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இது ஓர் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையாக இருந்தாலும் அடிப்படையில் படைச் சேர்ப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் மேலோட்டமான இந்நடவடிக்கைகள் பலனைக் கொடுக்காது. மேலும் பொலிஸ்படையில் தமிழர்கள் சேர்க்கப்பட்டு பொலிஸ் நிலையங்களில் சிங்கள பொலிஸ் அதிகாரிகளுக்கு எடுபிடி வேலை செய்கின்ற கூலிப்படைகளாக இருக்கின்றனர். எவ்வித அதிகாரம் உள்ள பதவிகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அன்மையில் தமிழ் இளம் பெண்கள் இராணுவத்தில் சேர்க்கப் பட்டுள்ளனர். ஆண்களை சேர்க்காது பெண்கள் சேர்த்தமை தொடர்பாக பல விமர்சனங்களை பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. மேலும் இப் பெண்கள் சுய விருப்பம் இன்றி வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எது எவ்வாறு இருப்பினும் முப்படைகளிலும் தமிழர்களை இணைப்பது தேசிய இன ஒற்றுமையை ஏற்படுத்தலாம். ஆனால் இது ஓர் தூரநோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். அடிப்படையில் சிறுபாண்மை மக்களின் அரசியல் உரிமையை உறுதிப்படுத்தும் சட்டங்களை அல்லது சட்ட அமுலாக்கமே இல்லாது மேலோட்டமாக படைகளில் தமிழர்களை இணைத்தல் பலனைக் கொடுக்காது என்றதற்கு கடந்தகால அனுபவம் சான்றாகும்.

## 4. வீடமைப்புத் திட்டமும் இன ஒற்றுமையும்

சிங்கப்பூர் வீடமைப்பு அபிவிருத்தி சபை (HDB) என்பது அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற இன்னொரு பிரதான அரச தொழில் முயற்சியாக இருந்தது. வீடமைப்புத் திட்டம் உலகத்துக்கே ஓர் முன்மாதிரியான திட்டமாகும். இன்று சிங்கப்பூரில் வாழ்கின்ற 90 சதவீதமான மக்களுக்கு சொந்த வீடுகள் தொடர் மாடியில் இருக்கின்றன. சிங்கப்பூரில் வீடமைப்புத் திட்டத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் இவ் வீடு அமைப்புத் திட்டம் நன்கு திட்டமிடப்பட்டு நாட்டின் மக்களை சுறு சுறுப்பாக உழைக்கத் தூண்டிய ஓர் திட்டமாகும். இலங்கையில் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் வீடமைப்புக்கு என நிதியை ஒதுக்கீடும் பின்னர் அவ்வீடுகளை கட்டுவதற்கு தனியாருக்கு ஒப்பந்தங்கள் கொடுத்து அவர்கள் மிகவும் தரக் குறைவாகக்கட்டி முடிக்க, அரசியல் வாதிகள் தங்கள் அரசியல் ஆதரவாளர்களுக்கு முற்றாக இலவசமாக பகிர்ந்து கொடுக்கிறார்கள். இலவசமாக வீட்டை பெற்றவர்கள் தொழில் செய்வதற்கு தூண்டுதல் இன்றி வீட்டில் இருந்து உல்லாசமாக ஏனைய சமூக சேவைகளை (கல்வி, சுகாதாரம், மருத்துவம்) இலவசமாக நுகர்ந்து அரசாங்கத்தில் எல்லாவற்றுக்கும் சார்ந்து இருக்கும் ஓர் ஏழைக் கூட்டமாக உருவாகி நின்றது. மேலும் இவ்வீடுகள் சிறந்த பராமரிப்பு இன்றி காலப்போக்கில் பழுதடைந்து வருகின்றன. வீடுகள் கட்டப்பட்ட அமைப்பிலும் சுகாதாரக் குறைபாடுகள், சூழல் குறைபாடுகள் காணப்படுகின்றன. மேலும் இவ்வீடுகள் சிறிய சிறிய தூண்டுகளாக காணப்படுவதோடு பெரியளவான இடத்தை உள்வாங்கி இருக்கின்றன. ஒரு சில தவிர மூன்று நான்கு மாடிகளுக்கு மேல் அரச வீடமைப்புத் திட்டங்களை இலங்கையில் பார்க்க முடியாது. வீடமைப்பு திட்டத்தில் நிலப்பயன்பாடு திட்டமிடல் என்பது அறவே இல்லை என்றே கூற வேண்டும். சிங்கப்பூரை விட இலங்கையில் நிலப்பரப்பு அதிகமாக இருந்தாலும் உலகில் நிலப்பரப்பு கூடிய நாடுகளில் கூட செறிவு கூடிய வீடமைப்பு திட்டங்களையே காணமுடியும். உதாரணமாக சீனாவில் 50, 60 மாடிகளில் வீடமைப்பு திட்டங்கள் காணப்படுகின்றன இலங்கை ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட வீடமைப்புத்திட்டங்கள் மாடிகள் இல்லாமல் தனி வீடுகளாகவும் இருந்துள்ளன.

சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டம் நன்கு திட்டமிட்டு நிலப்பயன்பாட்டை உச்சப்படுத்திய ஓர் பாரிய திட்டமாகும். இவ்வீடுகளில் பகிர்வில் இன விகிதாசாரம் கடுமையாக அமுழ்படுத்தப்பட்டது. ஓர் இன மொழி, மத மக்களுக்கு என எந்த ஒரு வீட்டுத் தொகுதியும் அமைக்கப்பட வில்லை. மாறாக எல்லா இன மக்களும் கூடி வாழத்தக்க வகையில் நாட்டின் இன விகிதாசாரத்துக்கு என்ற வகையில் வீடுகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. பகிர்ந்து கொடுக்கப்பட்ட வீடுகள் உரிமையாளரின் வங்கிக்கடன் அல்லது வீடமைப்பு அபிவிருத்தி சபையின் கடன் முடிவடையும் வரை வீட்டின் சொத்துரிமைப் பத்திரம் உரிமையாளருக்கு வழங்கப்படவில்லை. மாறாக இவர்கள் எங்கிருந்து கடன் பெற்றார்களோ அவர்களின் பிடியில் இருந்து வீட்டை விற்பதாயின் குறித்த கடன் கொடுத்த நிறுவனந்தான் விற்க முடியும். இந்த பிணைப்பு குடியிருப்பாளர்களை (நாட்டின் பிரசைகளை) கடுமையாக உழைக்கத் தூண்டியது.

குறிப்பிட்டளவு ஓர் சிறிய தொகை பணத்தை கொண்டு வீடு வாங்கி குடியமரலாம் ஆனால் பல வருடங்களுக்கு பின்பே வீடு குறித்த நபருக்கு உரிமையாகும். இடையில் விற்பதாயின் பல இலட்சம் இழப்பு ஏற்படும். எனவே வீடமைப்புத் திட்டத்தில் வீட்டைப் பெற்றவர் வீட்டுடனும் தொழிலுடனும் பிணைக்கப்பட்டருப்பதை அவதானிக்கலாம். தொழிலை விட்டால் வீட்டை இழக்க வேண்டி இருக்கும். மேலும் நீண்ட காலம் சேமித்த பணத்தையும் இழக்க வேண்டி இருக்கும். தொழிலை விட்டு விட்டு வீட்டில் நீண்ட காலமாக தொடர்ந்து குடியிருக்க முடியாது. குறுகிய காலத்தில் வீட்டுக்குரிய மாதாந்த தவணைக் கட்டணம் செலுத்த தவறும் பட்சத்தில் வீட்டை விட்டு வெளியேற்றுவதற்கு வீடமைப்பு அபிவிருத்தி சபைக்கு பூரண சுதந்திரம் உண்டு. இதில் ஒரு வீதம் கூட அரசியல் வாதி தலையிட முடியாது. சட்டம் ஒழுங்கு மிகவும் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

இலங்கையில் வீடமைப்பு திட்டமோ அல்லது குடியேற்றத்திட்டமோ எதிர்பார்த்த பலனை தரமுடியாமல் இருந்தமைக்கு பல காரணங்களை சிங்கப்பூரை தொடர்பு படுத்திக் குறிப்பிடலாம். முதலாவது இலங்கையின் வீடமைப்புத் திட்டம் அதிகமான ஓர் அரசியல் தலையீடு நிறைந்த திட்டமாகும். இவ் வீடமைப்பு திட்டத்தில் வீடுகளைப் பெற்றவர்கள் அரசியல் வாதிகளின் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு வீடுகள் பகிந்து கொடுக்கப்பட்ட போது இன வீதாசாரம் பேனப்படவில்லை. பல வீடமைப்பு தொகுதிகள் குறித்த ஓர் இனங்களை மையப்படுத்தி இருந்தன. வீடமைப்பு திட்டங்களில் சிறுபாண்மை மக்கள் புறக்கணிக்கப்பட்டு இருந்தனர். மேலும் வீடமைப்புத் திட்டத்தில் பெரும்பாண்மை மக்களுடன் இனைந்து கொடுக்கப்பட்ட வீடுகளில் சிறுபாண்மை மக்கள் விரட்டப்பட்ட பல சம்பவங்கள் இருக்கின்றன. இனக்கலவரங்களின் போது குறித்த பிரதேசத்துக்குரிய அரசியல் வாதியும் காவல் துறையினரும் பெரும்பான்மை மக்களுடன் இணைந்து இவர்களின் வீடுகளை நாசப்படத்தியமை காணலாம். உதாரணமாக 1983 இனக்கலவரத்தின் போது கொழும்பில் சொய்சாபுரத்தில் மற்றும் குனாசிங்க புரத்தில் அரச வீட்டுத்திட்டத்தில் வசித்த மக்களின் உடமைகள் சூரையாடப் பட்டு வீடுகளை பெரும்பாண்மை அரசியல் வாதிகளின் ஆதரவாளர்களை தங்கள் உடமையாக்கியுள்ளனர். பெரும்பாண்மை மக்களுக்குள்ளேயே அரசியல் கட்சி சார்பாக இவ்வீடமைப்பு திட்ட பகிர்வில் உண்மையான பயனாளியை இனம் காணாது ஆளும் கடசி ஆதரவாளர்களுக்கு கொடுக்கப்பட்டமை அவதானிக்கலாம். இவ் விடயத்தில் சிங்கப்பூரையும் இலங்கையையும் ஒப்பிட்டு நோக்கம் போது இலங்கையில் இரு கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வந்து இரண்டு கட்சியுமே சிறுபாண்மை மக்களுக்கு எதிராக வண்முறைகளை தூண்டி விடுவதில் போட்டியாக செயற்பட்டு உள்ளன.

யார் சிறுபான்மை மக்களின் உரிமைகளை பறித்து இலங்கையை சிங்கள தேசமாக மாற்றுகிறார்களோ அவர்களுக்கு மக்களின் ஆதரவு அதிகரித்தது. எனவே இரு பிரதான அரசியல் கட்சிகளும் இக் கொள்கைகளை முன்னெடுப்தில் தங்களுக்குள்

போட்டியிட்டு சிறுபாண்மை மக்களுக்கு எதிராக கொள்கைகளை முன்னெடுத்தார்கள். மக்களை பாதுகாக்கின்ற காவல் துறை மற்றும் இராணுவம் ஒருபக்க ரீதியாக அரசியல் வாதிகளின் ஏவல் படைகளாக மாறின. நாம் முன்னர் கூறியது போன்று இப்படைகளின் மூவின மக்கள் சேர்த்துக் கொள்ளப்படாமை மற்றும் இப்படைகளில் கல்வி குறைந்தவர்கள்சேர்த்துக் கொள்ளப்பட்டமை என்பன வீடமைப்புத் திட்டத்தில் இன வெளியேற்றத்தை தூண்டிய காரணிகள் ஆகும். சிங்கப்பூரைப் போன்று சுயாதீனமான, உயர்ந்த தரமான கல்வியை கொண்ட எல்லா இன மக்களையும் உள்ளடக்கிய காவல்துறை மற்றும் இராணுவம் இருந்து இருக்குமானால் வீடமைப்புத் திட்டங்களில் சிறுபாண்மை மக்களின் வெளியேற்றத்தை நல்லாட்சி ஊடாக தடுத்து நிறுத்தி இருக்கும். இலங்கையில் சட்டம் ஒழங்கு பற்றி குறிப்பிடப்படுகின்ற அரசியல் வாதிகளே சட்டம் தமது கையில் எடுத்து கொண்டு சிறுபாண்மை மக்களுக்கு எதிராக அதனை பயன்படுத்திய பல சம்பவங்கள் இருக்கின்றன. 1981 இல் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் இருந்து 100M தூரத்திற்குள் அமைந்த பொது நூலகம் எரிக்ப்பட்டது. நூல் நிலையத்துக்குள்ளே இந்நிலமை இருக்கிறது எனில் வீடமைப்பு தொகுதிகளில் உள்ள உயிரின் நிலைமை எவ்வாறு இருந்து இருக்கும் என்பது தெளிவாகின்றது. இவ்வாறான ஓர் சூழ்நிலையில் வீடமைப்பு திட்டத்தில் இன ஒற்றுமை கேள்விக்குரியாக மாறியது. இதே நிலைமையை இலங்கையின் உவர் வலயக் குடியேற்றத்திட்டங்களிலும் அவதானிக்கலாம் சிறுபாண்மை மக்கள் தாமாகவே வெளியேறியுள்ளனர்

இலங்கையின் வீடமைப்பு திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான இரண்டாவது காரணம் இலங்கையில் வீட்டுத் திட்டம் இலவச வீட்டுத் தீட்டமாக இருந்தமை ஆகும். இலங்கை ஓர் சமூக நலனியல் அரசு ஆகும். (Social Welfare State) ஆனால் சிங்கப்பூரின் வீடமைப்புத்திட்டத்தில் வழங்கப்பட்ட வீடு தூய தனியார் பண்டமாகும். சிங்கப்பூர் அரசு ஓர் அபிவிருத்தி அரச ஆகும். (Developmental State). எனவே இரு அரசுகளின் நோக்கம் நேர் எதிராக வேறுபடுவதால் அவர்கள் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கான விலையும் வேறுபட்டது. இலங்கை அரசாங்கம் எவ்வளவுக்கு எவ்வளவு அரச வளங்களை மக்களுக்க வாரி இறைத்து மக்களின் வாக்குகளை பெற்றுக் கொண்டது. அந்நிலைமை சிங்கப்பூரில் நடைபெறவில்லை. ஒரே கட்சி ஆட்சியில் இருந்தமையால் இது எல்லா மக்களுக்கும் உயர்ந்த விலைக்கு வீடுகளை கட்டிக் கொடுத்து நிதிப்பலமான அரசாக உருவானது.

## 5. தொகுப்புரை

இன நல்லிணக்கம் என்பது ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானதாகும். இலங்கை 30 ஆண்டுகளுக்கு மேலான யுத்தத்துக்கு பின்னரும் இதை இதயசுத்தியுடன் முன்னெடுக்கின்றதா? என்பது கேள்விக் குறியாகும். நல்லாட்சி அரசாங்கத்திலும் 2016 இல் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் இனமுரண்பாட்டுக்கான சம்பவங்கள் வெளி அரசியல் சக்திகளால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அரசியல்வாதிகளால் அப்பாவி சிங்கள மற்றும் தமிழ் மாணவர்கள் பலிக்கடா

ஆக்கப்படுகிறார்கள். அடிப்படையில் இன ஒற்றுமைக்கு அரசாங்கத்தின் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். சிங்கப்பூரைப் போன்று மொழிக்கொள்கை, பொதுசேவைக்கொள்கை மற்றும் வீடமைப்புக் கொள்கையில் மாற்றம் ஏற்படும் போதுதான் இன நல்லினக்கம் ஏற்படுத்தப்படும்.

**கலாநிதி செ. சந்திரசேகரம்**
சிரேஸ்ட விரிவுரையாளர்
பொருளியல்த் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

---

[i] The English-educated, Chinese leadership, headed by Lee, feared the local Chinese business class which backed China and Chinese-language rights, and once in power was determined not to be beholden to it. Among the leaders of the Chinese business community who strongly supported China and Chinese language education, Tan Kah Kee had been the foremost pre-WWII figure. After the war, he was " the real Chinese leader with a mass following"but in 1950 was forced by the British colonial authorities to remain in China, where he became an official of the Chinese Communist Party. Following Tan 's exile to China, his successor was Tan Lark Sye. In 1956 Tan Lark Sye was instrumental in the establishment of the Chinese-language Nanyang University as a bastion of Chinese culture, with the support of a wide section of the Chinese business community and Chinatown. Huff. W.G. (1995) P.1432

[ii] Tan Lark Sye had as trenchant views, expressed in his well-known observation that English education resulted in "increasing taxes, laying traps, turning out fools and wasting public funds." He warned that " If we do not take steps to preserve our culture now.. .in 40 or 50 years perhaps we shall no longer call ourselves Chinese"........ . His views did not prevail: at the beginning of the 198Os, Nanyang University was finally subsumed under government direction into the English-language Singapore National Univer sity, Huff. W.G. (1995) P.1432

[iii] "To be effective, the SAF has to mobilize and involve the whole society in defense activities. So, school principals, teachers, parents, employers, and community leaders are brought in to a supporting network under a concept called "Total defense" This keeps morale high"Lee Kuan Yew (2011), P.27

[iv] "Notional service has a profound important on Singapore society over the last 30 years. It has become a rite to passage our young men and has helped to unity our people. They learn to live and a part of our way of life that has helped to unity our people. They learn to live and work closely with each other, regardless of race language, or religion food taboos of Muslims and Hindus are respected, as are all religions rites, from Buddhism, Hindi Muslim, Sikh to Christian and Zoroastrian. Whether your father is a minister, banker, professional, laborer, taxi driver, or hawker, your military standing depends on your performance" Lee Kuan Yew (2011)P.27

[v] பார்க்க, Eliza w. y. Lee and m. Shamsul Haque( 2006)

[vi] "The quality to the early batches was reassuring by 1995, tour former SAF Scholar, having risen to senior passions, entered politics and later become cabinet minister:- My son Brigadiers general Lee Hasien Long ....................." Lee Kuan Yew (2011), P.28

[vii] பார்க்க: Tambiah S J (1991)

# செல்வத்தை நிலைப்படுத்தி நல்வாழ்வு பெறுவோம்

நவராத்திரி விழாவானது உலகம் முழுவதும் வாழ்கின்ற மக்கள் எல்லோர்க்கும் சுபீட்சம் வழங்குகின்ற நல்விழாவாகும். ஏனெனில் இது ஆற்றலின் முழுமையைப் பெறுவதற்கு இறைவன் அருள்கின்ற புண்ணிய காலமாகும். எமது உடலில் வலது பக்கம் சிவமாகவும் இடது பக்கம் சக்தியாகவும் உள்ளது. மேலும் கூறின் வலது பக்கம் அறிவாகவும் இடது பக்கம் ஆற்றலின் அம்சமாகவும் உள்ளது. அறிவு செயற்பட வேண்டுமானால் ஆற்றல் வேண்டும். இதனை நன்குணர்ந்த முன்னோர் "சிவமின்றி சக்தியில்லை சக்தியின்றி சிவமில்லை" என்று கூறி இருவரின் ஐக்கியத்தாலேயே உலகம் இயங்குகிறது என்று குறிப்பிட்டனர். ஒரு மனிதனுக்கு ஆற்றல் பல்கிப் பெருக வேண்டும் - அப்போதே அறிவைக் கொண்டு அவர் பிரகாசிக்க முடியும். எனவே தான் ஒன்பது இரவுகளிலே ஆதிபராசக்தியை பல்வேறு நிலைகளிலே வழிபாடு செய்து பல்வேறு ஆற்றல்களைப் பெற்று வெற்றித் திருநாளாகிய விஜயதசமியிலே அவற்றை முழுமையாகச் செய்கின்றோம். இந்த வரிசையிலே செல்வம் எனும் ஆற்றலைப் பெருக்கி நிலைப்படுத்துவதற்கு மூன்று நாட்களில் விசேட வழிபாடுகளைச் செய்கின்றோம்.

வையகத்தில் தோன்றிய ஒவ்வொருவருக்கும் மிகவும் இன்றியமையாததாக விளங்குவது செல்வமாகும். இதனாலேயே செந்நாப் போதகரான திருவள்ளுவப் பெருந்தகை

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள் - 247)

என்று குறிப்பிட்டுள்ளார். பூமியிலே சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்வதற்கு செல்வம் பிரதானமாகிறது. இவ்வாறான செல்வத்தை நாம் முதலில் எவ்வாறு சேர்த்துக் கொள்வது என்பதையும் பின்னர் அதனை எவ்வாறு நிலைநிறுத்திக் கொள்வதென்பதை அறிந்துகொள்வதுடன் புண்ணிய வழியில் பயன்படுத்தி உயர் இலட்சியத்தை அடைதல் பற்றியும் ஆழமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். செல்வமானது மனிதனை மனிதனாக வாழவைப்பதற்கு உதவுவதாக இருக்க வேண்டும். மாறாக மிருகத்தனமான அறத்திற்கு புறம்பான குணங்களையுடையவராக மாற்றுவதாக அமையக்கூடாது. "செல்வம் என்ற சொல் எப்போதும் செல்வோம் செல்வோம் என்பதைக் கூறிக் கொண்டிருப்பதை நாம் உணரலாம். ஆனால் செல்வம் எங்களை விட்டுச் செல்லாது பாதுகாப்பது எமது செயற்பாடுகளினூடாகவே நிறைவேறக்கூடியதாகும்.

செல்வத்தைப் பெறுவதற்காக மகாலக்ஷ்மியை வழிபாடு செய்கின்றோம். நவராத்திரி காலத்தில் மட்டுமல்ல எப்போதும் அவரை வழிபட்டுக் கொண்டே இருக்கிறோம். இந்த தாயாரை வழிபாடு செய்யாத மக்களே கிடையாது என்று கூறலாம்.

இந்துக்களல்லாத வேறு சமயத்தவரும் திருமகளை வழிபாடு செய்யாதபோதும் நிலத்தையும் பணத்தையும் பொருட்களையும் பணிதல், மதித்தல், வழிபாடு செய்தல் காணக்கூடியதாகவே உள்ளது. எனவேதான் உலகம் முழுவதும் செல்வத்தைப் போற்றிக் கொண்டே இருக்கிறது.

புராணங்கள் தருகின்ற ஆதாரங்களின்படி முன்னொரு காலத்திலே தேவர்களும் அசுரர்களும் மகேந்திரமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பை கடைகயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். கணபதி பூசை செய்து காரியத்தைத் தொடங்காததால் வாசுகிப் பாம்பு ஆலகால விஷத்தைக் கக்கியது - அது உலகத்தினையே அழித்துவிடுவது போல வெகுண்டு எழுந்தது. அப்போது காத்தற் கடவுளான நாராயணப் பெருமான் முன்சென்று அதனைத் தடுக்கப் பார்த்தார். அவை நஞ்சு தாக்கியதால் செந்நிறமாக இருந்த அவரது திருமேனி கருநீலநிற திருமேனியாக மாறியது. திருவாய் மட்டும் பவள வாயாக காட்சியளித்தது. இதனையே பின்பு ஆழ்வார் "பச்சைமாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்" என்று பாடினார். அதன் பின்பும் ஆலகால விடம் தேவர்களையும் அசுரர்களையும் துரத்தியது. எல்லோரும் திருக்கைலாயத்தில் சிவனிடம் தஞ்சமடைந்தனர். அவர் நஞ்சை உண்டு கண்டத்தே வைத்து எல்லோரையும் காத்தார். தனதருளையும் கொடுத்து மீண்டும் பாற்கடலைக் கடையுமாறு கூறினார். கணபதிக்குப் பூசை செய்து காரியத்தைத் தொடங்கினர். அப்போது மகேந்திர மலை மேலும் கீழுமாக ஆடியது - இவ்வேளை நாராயணப் பெருமான் ஆயிரம் கரங்களையுடைய மிகப் பெரிய கூர்மம் (ஆமை) ஆக மாறி தனது முதுகிலே மத்தைத் தாங்கினார். பாற்கடலிலிருந்து சாவாமூவாப் பெருமருந்தான அமிர்தம் வெளிப்பட்டது. அதனுடன் கூடவே தோன்றியவற்றுள் மகாலக்ஷ்மியும் அடங்குவார். திருப்பாற்கடலைக் கடைகின்ற முயற்சியில் மிகப் பெரும் தியாகங்களைச் செய்த நாராயணப் பெருமானிற்கு எல்லோரும் ஒன்றுசேர்ந்து மகாலக்ஷ்மியைக் கொடுத்தார்கள். விஷ்ணு ஏற்கனவே பூமாதேவியை இடப்பக்கம் கொண்டிருந்தவர். மகாலக்ஷ்மியை தனது வலப்பக்கம் அமர்த்திக் கொண்டார். இவ்விரு சக்திகளும் எமக்கு வேண்டிய செல்வங்களை வாரி வழங்கி வருகின்றனர்.

மகாலக்ஷ்மி அஷ்ட ஐஸ்வர்யங்களையும் தருபவராக விளங்குகின்றார். தன லக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி, விஜய லக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, வீர லக்ஷ்மி, வித்தியா லக்ஷ்மி, சௌபாக்கிய லக்ஷ்மி, கஜ லக்ஷ்மி என்ற நிலைகளிலே நின்று திருவருளைப் புரிந்து எம்மை வாழ்விக்கின்றார். பணம், உணவு, பிள்ளைப்பேறு, வெற்றி, வீரம், கல்வி, விவேகம், மகிழ்ச்சி, சௌபாக்கியம், சுபீட்சம், புண்ணியம், மோட்சம் எல்லாவற்றையும் அள்ளித்தந்து வாழ்விக்கின்றார். வளமான சிறப்பான வாழ்வுக்கு அஷ்ட லக்ஷ்மிகளின் திருக்கடைக்கண் பார்வை அவசியமாகின்றது.

இவர்கள் எல்லோரும் எமது இல்லத்திலே எப்போதும் குடிகொண்டு இருப்பதற்கு நாம் சில அடிப்படையான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

முதலிலே இல்லத்தை தெய்வீகமும் நுட்பமான சோதிட அறிவும் கொண்ட விற்பன்னர்களின் வழிகாட்டலில் வாஸ்த்து சாஸ்திர விதிப்படி அமைத்தல் வேண்டும். பின்னர் தரமான சிவாச்சார்யார்களைக் கொண்டு வாஸ்த்துசாந்தி, மகாலக்ஷ்மி யாகம், கிருகப்பிரவேசம் போன்றவற்றை முறைப்படி செய்யவேண்டும். அடுத்த நிலையில் இல்லத்தை மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். மூதேவிபதம் என்ற ஒன்று வீட்டில் அமைந்திருந்தாலும் அது மிகவும் சொற்பமாகவும் வீட்டின் பின்புறமாகவும் அமைய வேண்டும். 90% மான பகுதி இலக்குமி வாசம் செய்யக்கூடிய மிகவும் தூய்மையான பகுதியாக விளங்கவேண்டும்.

எப்போதும் மஞ்சள் நீர் தெளித்து ஒவ்வொரு நாளும் ஏற்படும் அசுத்தங்களைக் கழைய வேண்டும். வெளி இடங்களிற்கு சென்றுவிட்டு வீட்டிற்குள் நுழைவதற்கு முன் கால்களைக் கழுவிச் செல்லவேண்டும். மேலும் வாசலிலே ஒரு பாத்திரத்தில் மஞ்சள் நீரும் இன்னொரு பாத்திரத்தில் விபூதியும் வைத்துக்கொள்ள வேண்டும். மஞ்சள் நீரை உடலிலே தெளித்து "சிவ சிவ" என்றுகூறி விபூதி தரித்து உட்செல்ல வேண்டும். அப்போது அசுத்தம், தோஷம், தீவினைகள் அகலுகின்றன. அவ்வாறு செல்பவர்களே இல்லத்தில் இருக்கும் மகாலக்ஷ்மிக்குப் பிடித்தவராக அமைவார்கள்.

இல்லத்தில் எப்பொருட்களையும் ஒழுங்குபடுத்தி சீராக வைத்திருத்தல் மிகவும் இன்றியமையாததாகும். குப்பைகூழங்களால் நிறைந்திருக்கும் இல்லத்தில் திருமகள் உறைவதில்லை. தினமும் சுகந்த தூபமிட்டு நறுமணங் கமழும் இடமாக இல்லத்தை வைத்திருக்க வேண்டும். மகாலக்ஷ்மி மாமலர் எனப்படும் செந்தாமரை மலரை ஆசமனாகக் கொண்டு வீற்றிருக்கின்றார். தாமரை மலர் குளிர்ச்சியான தடாகத்திலே இருக்கின்றது. எனவே இல்லத்தை எப்போதும் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஏற்றவாறு வீட்டைச் சூழ நல்ல மலர்ச்செடிகளை நாட்டி நந்தவனம் போன்று ஆக்கவேண்டும். கண்ணிற்கு குளிர்ச்சியாக மலர்கள் பூத்துச் சொரிகின்ற இடமாக வைத்துக்கொள்ள வேண்டும். குளிர்ச்சியும், மகிழ்ச்சியும் உள்ள இடத்தில் மகாலக்ஷ்மி அகலாது வாசம் செய்த வண்ணமே இருப்பார். இல்லமானது தூய்மையற்று இருக்கும்போது நாராயணப் பெருமான் தனது சக்திகளான பூமாதேவி, மகாலக்ஷ்மி ஆகியோரைத் திருப்பியழைத்துக் கொண்டு மூதேவியையும் நித்திராதேவியையும் அந்த இல்லத்திற்கு அனுப்பிவிடுவதாக சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. இதனால் அங்கே தரித்திரமும் சோம்பேறித்தனமும், மந்தப் போக்கும் உருவாகி அந்த வீடும் குடும்பமும் பாழாகிப் போய்விடும். தொடர்ந்து அந்நிலை நீடிக்குமானால் சந்ததிக்கே செல்வமும் செல்வாக்குமற்ற நிலை உருவாகும். இவ்வாறான நிலையில் "வீட்டில் செல்வம் தங்குகின்றதில்லையே" என்று தெய்வத்தை நோகக்கூடாது.

தினமும் திருவிளக்கேற்றி வழிபாடு செய்வது மிகவும் அவசியமாகும். சந்திக் காலங்களில் (காலை, மதியம், மாலை) இதனைப் பவித்திரமாகப் பின்பற்ற வேண்டும்.

அதிலும் காலை, மாலை 6.00 மணியளவிலே இல்லத்தில் தவறாது விளக்கேற்ற வேண்டும். மரக்கறி எண்ணெயில் விளக்கேற்றக் கூடாது. சுத்தமான தேங்காய் எண்ணெய், நெய், விளக்கெண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். அதிகாலை பிரம்ம முகூர்த்த காலம் எனப்படும். இந்த நேரத்திலே இல்லத்தரசிகள் சமையலறையிலே புகுந்து முதலில் அக்கினியை ஏற்றக்கூடாது. காலைக்கடன்களை நிறைவுசெய்து தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டு முதலிலே சுவாமியறையினுள் சென்று அங்குள்ள திருவிளக்கை ஏற்றவேண்டும். விநாயகர், மகாலக்ஷ்மி, மாதா, பிதா, குரு, ஏனைய தெய்வங்கள், தீபஜோதி, குலதெய்வங்கள் எல்லோரையும் மனதாலே தியானித்து வழிபட வேண்டும். அப்போது இல்லத்திலே தெய்வீகமும் தர்மமும் செல்வமும் செல்வாக்கும் எப்போதும் அகலாது இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். மேலும் வெற்றிலை ஒன்றை எடுத்து அதனை மகாலக்ஷ்மிக்கு முன்பு வைத்து மஞ்சள் குங்குமம் இட்டு

"வெற்றிலையில் திலகமிட்டோம் லக்ஷ்மியம்மா
விளக்கேற்றி மாலையிட்டோம் லக்ஷ்மியம்மா
உற்ற துயர் தீர்த்திடுவாய் லக்ஷ்மியம்மா
ஒளிமயமாய் வாழ்வருள்வாய் லக்ஷ்மியம்மா...."

(அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்)

என்று பாடிப் பிரார்த்திக்க வேண்டும். இவ்வாறு செய்து வருபவர்களது இல்லத்தில் செல்வம் நீங்காது நிலைத்திருக்கும்.

இல்லத்தில் மங்களகரமான நிலையும் செல்வமும் தங்க இன்னும் சிலவற்றில் கவனம் செலுத்த வேண்டும். அவையாவன எமது கவலைகளை மறந்து வீட்டிற்கு வருபவர்களை இன் முகத்துடன் இனிய சொற்களைப் பேசி அன்பாக வரவேற்க வேண்டும். தமது தகுதிக்கேற்ப விருந்தோம்பல் செய்யவேண்டும். இயன்றளவிற்கும் மற்றவரது முகம் கோணாது நடந்துகொள்ள வேண்டும். தரித்திரம், சனியன், மூதேவி போன்ற தீய சொற்களை மறந்தும் பேசக்கூடாது. வீட்டிற்கு வந்துசெல்பவர்கள் மீண்டும் அந்த வீட்டிற்கு வரவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் தமது வருமானத்தைப் பத்துப் பங்காகப் பிரித்து ஒரு பங்கை ஏதாவது புண்ணிய காரியங்களுக்கு செலவுசெய்ய வேண்டும். இவை இலக்குமிக்கு மிகவும் பிடித்தவையாகும். மேலும் ஒருவர் எந்தக் கடமையைச் செய்தாலும் அதனை விசுவாசமாக மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செய்யவேண்டும். விடாமுயற்சியும் சுறுசுறுப்பும் கடின உழைப்பும் வாழ்க்கையிலும் குடும்பத்திலும் பூரண நம்பிக்கையும் கொண்டு செயற்படுபவர்களை விட்டு ஒருபோதும் மகாலக்ஷ்மி அகலுவதில்லை. மாறாக சோம்பேறித்தனமும், அலட்சியம், வெறுப்பு, அதர்ம சிந்தனை, தெய்வீகமற்றிருத்தல் என்ற நிலையில் இருப்பவர்களை திருமகள் கைவிட்டுவிடுகிறார்.

எமது செல்வம் நிலைத்திருக்க இன்னும் மூன்று விடயங்களில் கவனம் செலுத்துதல் அவசியமாகும். அவையாவன வீட்டிலே மூத்தபிள்ளை நன்றாக கல்வி கற்க வேண்டும். நற்குணத்துடன் எல்லோர்க்கும் முன்மாதிரியாக இருக்கவேண்டும். அவரைப் பார்த்து ஏனையவர்கள் முன்னேற வேண்டும். இரண்டாவது, மனையாள் வரவுக்கு மிஞ்சி செலவு செய்யக்கூடாது. இல்லத்தரசிகள் குடும்பத்தின் வருமானத்திற்கு ஏற்பவே திட்டமிட்டு செயற்பட வேண்டும். மூன்றாவது, பக்கத்து வீட்டுக்காரர் அல்லது அயல் வீட்டுக்காரருடன் ஒருபோதும் பகைத்துக்கொள்ளக் கூடாது. ஆபத்திற்கு பல வகைகளிலும் உதவுபவர்கள் அயலவரேயாகும். இவை மூன்றையும் எவரொருவர் கருத்திற்கொண்டு செயற்படுகின்றார்களோ அவர்களது இல்லத்தில் செல்வம் அகலாது நிலைகொள்ளும். எவரும் வீட்டிலே "இல்லை" என்ற சொல்லைப் பேசக்கூடாது. இல்லை இல்லை என்று எப்போதும் கூறிக் கொண்டிருப்போமானால் எதுவும் இல்லாமலே போய்விடும் என்பது ஆன்றோர்களின் கருத்தாகும். வீட்டிலே பணம், உணவுப் பொருட்கள் போன்றன முற்றாக தீரும்வரை பயன்படுத்தக்கூடாது. புதியவற்றை வாங்கிக் கொண்டு பழையவற்றைப் பயன்படுத்த வேண்டும். இவ் விடயங்களிலும் கவனம் செலுத்தும்போது செல்வம் வீட்டில் எப்போதும் தங்கும்.

எமக்கு மகாலக்ஷ்மி மட்டும் செல்வத்தைத் தருபவரல்ல. ஒன்பது வழிகளிலே செல்வம் சேர்கிறது என்பதைப் பல நூல்கள் கூறுகின்றன. அவற்றை நவநிதிகள் என்று கூறுவர். அவையாவன; சங்கநிதி, பதுமநிதி, இலக்ஷ்மி நிதி, குபேர நிதி, கற்பகதரு நிதி, காமதேனு நிதி, சிந்தாமணி நிதி, அமுதசுரபி நிதி, அட்சய பாத்திர நிதி என்பவையாகும். இல்லத்திலே வலம்புரிச் சங்கை அல்லது இடம்புரிச் சங்கை பூசையறையிலே வைத்து பூசித்து வந்தால் வருவது சங்கநிதியாகும். புனித நீர்ப் பாத்திரத்திலே செந்தாமரை மலரை வைத்து அதற்கு பூசை செய்து வரும்போது கிடைப்பது பதுமநிதியாகும். மகாலக்ஷ்மியின் திருவுருவப் படத்தை வைத்து தீபமேற்றி வழிபடும்போது இலக்குமி நிதி கிடைக்கிறது. வடதிசைக்கதிபதியான குபேரனை திருவுருவமாகச் செய்து அவருடைய நிதிக் குகையுடன் சேர்த்துப் பூசை செய்துவரும் போது குபேரன் பெரும் நிதியை வாரிவழங்குகிறார். அது குபேர நிதியாகும். கற்பகதரு என்பது தேவலோக விருட்சமாகும். இது மனதிலே நினைக்கின்ற நல்லன எல்லாவற்றையும் நிறைவாகத் தரும். எனவே கற்பக விருட்சத்தை படமாகக் கீறியோ அல்லது மரத்தில் செதுக்கியோ சுவாமியறையில் வைத்து அதற்குப் பூசை செய்து வரும்போது கிடைப்பது கற்பகதரு நிதியாகும்.

காமதேனு என்பது புராணங்களில் பேசப்பட்டுள்ள தெய்வீகப் பசுவாகும். இதுவும் தேவலோகத்திற்கு உரியதாகும். மனித பெண் முகமும் பசுவின் உடலும் பொருந்தியது. தனது கன்றிற்கு பாலூட்டிய நிலையில் இருப்பது. இதன் படத்தினையோ அல்லது திருவுருவத்தையோ வீட்டில் பிரதிஷ்டை செய்து பூசித்து வரும்போது கேட்பன எல்லாவற்றையும் தரும். அவை காமதனு நிதியாகும். நாராயணப் பெருமானின்

திருமார்பில் அணியப்பட்டிருக்கும் நீலநிற மாணிக்கம் சிந்தாமணியாகும். வீட்டிலே மாணிக்கக் கல் ஒன்றை சிந்தாமணியாகப் பாவனை செய்து நாராயணப் பெருமானைத் தியானித்து பூசைசெய்து வரும்போது கிடைப்பது சிந்தாமணி நிதியாகும். அன்னபூரணியின் திருக்கரத்தில் இருப்பது அமுதசுரபியாகும். இப் பாத்திரத்திலிருந்து அள்ள அள்ளக் குறையாத அறுசுவையான உணவு வந்துகொண்டே இருக்கும் - இப் பாத்திரத்தை மண்ணிலோ அல்லது பஞ்ச உலோகத்திலோ செய்து சுவாமியறையில் வைத்துப் பூசித்து வரும்போது பஞ்சமென்பது வராது. அமுதசுரபி நிதி பெருகி விருந்தோம்பல் சிறப்படையும். அட்சய பாத்திரம் என்பது அதனுள் எதனை இட்டுவிட்டும் எடுக்க எடுக்கக் குறையாது வந்து கொண்டே இருக்கும் தன்மையுடையதாகும்.


*வரணியூர் சைவப்புலவர்*

***சி.கா. கமலநாதன்*** *J.P*

*B.A. (Hons - History), M.A. (Jaff)*

*PGDE, MED (Hons)*

*விரிவுரையாளர்,*

*சமூக விஞ்ஞானத்துறை,*

*ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி,*

*பத்தனை.*

# பொருளாதார வளர்ச்சி (ECONOMIC GROWTH)

பொருளாதார வளர்ச்சி என்பதனையும் பொருளாதார அபிவிருத்தி என்பதனையும் ஒரே கருத்தில் சிலர் பயன்படுத்தினாலும் அவற்றிற்கிடையிலான வேறுபாட்டினை அறிந்து கொள்வது அவசியமானதாகும். பொருளாதார வளர்ச்சி (Economic Growth) என்பது தேசிய வருமானத்தில் நீண்டகாலத்திற்கு அதிகரிப்பு ஏற்பட்டுக் கொண்டு செல்வதைக் கருதுகின்றது. பொருளாதார அபிவிருத்தி (Economic Development) என்பது தனியே தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பை மாத்திரம் கவனத்தில் கொள்ளாமல், சமுதாய, கலை, கலாச்சார மற்றும் பண்பாட்டு விடயங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டு செல்வதையும் கவனத்தில் கொள்கிறது. எனவே பொருளாதார அபிவிருத்தி என்ற விடயம் பலபரிமாணம் கொண்டதாக உள்ளது. எனவே நாம் பொருளாதார வளர்ச்சி என்பதை பின்வருமாறு வரையறுக்கலாம்.

1. நீண்டகாலத்திற்கு ஒரு பொருளாதாரத்தின் மெய்த்தேசிய வருமானம் அதிகரித்துக் கொண்டு செல்வதையே பொருளாதார வளர்ச்சி கருதுகின்றது. நிலையான விலைகளில் தேறிய தேசிய வருமானம் அதிகரித்துக் கொண்டு செல்வதை பொருளாதார வளர்ச்சி என்பது கருதும். இந்த வரைவிலக்கணமானது போதுமான விளக்கத்தினைத் தரவில்லை என சில பொருளியலாளர்கள் விமர்சனம் செய்தனர்.

2. மொத்த தேசிய வருமானம் அதிகரித்துக் கொண்டு சென்றாலும் சனத்தொகை அதிகரிப்பு வீதமானது தேசிய வருமான வளர்ச்சி வீதத்தினை விடக் கூடுதலாக இருக்குமாயின் மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும். இந்நிலையில் நீண்டகாலத்திற்கு தலா வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுக் கொண்டு செல்லும் நிலையினையே பொருளாதார வளர்ச்சி எனக் குறிப்பிட்டனர். ஆகவே தொடர்ந்து தலா வருமானம் அதிகரித்துக் கொண்டு செல்லும் நிலையே பொருளாதார வளர்ச்சியாகும். (Magic : 72) ஒரு நாட்டில் தொடர்ச்சியாக வருடாந்தம் 7% வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு சென்றால் பத்து வருடங்களுக்கு ஒரு முறை அந்த நாட்டின் தேசிய வருமானம் இருமடங்காக அமையும்.

   நீண்டகாலத்திற்கு தொடர்ச்சியாக (உ+ம் 10, 15, 25 வருடங்கள்) மெய் உள்நாட்டு அல்லது தேசிய உற்பத்தியின் வருடாந்த வளர்ச்சி வேகத்தினைக் கணிப்பதன் மூலம் இவ்வேகம் அளவிடப்படுகின்றது.

**பொருளாதார வளர்ச்சியின் மூலக்கூறுகள்**

எந்த ஒரு சமூகத்திலும் பொருளாதார வளர்ச்சியின் மூலக்கூறுகளில் பின்வரும் மூன்று விடயங்கள் பிரதான இடம் பெறுகின்றன.

1. மூலதனத் திரட்சி (Capital Accumulation) இதற்குள் நிலத்தில் செய்யப்படும் புதிய முதலீடுகள் பௌதிகக்கருவிகள் போன்ற பௌதீக முதலீடுகளும் சுகாதாரம்,

கல்வி, தொழிற்பயிற்சி போன்றவற்றின் மூலம் முன்னேற்றப்படும் மற்றும் செய்யப்படும் மனித மூலதனம் என்பன அடங்கும்.

2. சனத்தொகை வளர்ச்சி மற்றும் அதனூடாக உழைப்புச்சக்தியில் ஏற்படும் வளர்ச்சி

3. தொழில்நுட்ப முன்னேற்றம்.

## மூலதனத் திரட்சி (Capital Accumulation)

தற்போதைய வருமானத்தில் ஒரு பகுதியை சேமித்து எதிர்காலத்தில் வெளியீடு மற்றும் வருமானம் என்பனவற்றை அதிகரிப்பதற்கு முதலிடப்படும் போது மூலதனத்திரட்சி ஏற்படுகின்றது. புதிய தொழிற்சாலைகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் நாட்டின் பௌதீக முதலிருப்பை அதிகரிக்கும் சாதனங்கள் என்பன வெளியீட்டை அதிகரிப்பதற்கு உதவி செய்கின்றன. இவ்வாறு நேரடியான உற்பத்தி முதலீடுகளுடன் சமூகப்பொது முதலீடுகளான தெருக்கள், மின்சாரம், நீர்வசதி, தொலைத்தொடர்பு வசதி போன்றவையும் இணையும் போது பொருளாதார வளர்ச்சியும், பொருளாதார நடவடிக்கைகளும் அதிகரிக்கின்றன. புதிய உழவு இயந்திரம் ஒன்றில் முதலீடு செய்யும் விவசாயி அதன் துணையுடன் தனது மரக்கறி உற்பதியினை அதிகரிக்கலாம். அதே வேளையில் மேலதிக உற்பத்தியை சந்தைக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதி இல்லாவிடில் அவரது முதலீடு தேசிய உணவு உற்பத்திக்கு அதிகரிப்பைச் செய்யாமல் இருக்கலாம்.

நீர்ப்பாசன வசதிகளைப் பயிர் செய்யும் நிலங்களுக்குச் செய்து கொடுக்கின்றபோது, ஏக்கருக்கான விளைச்சலை அதிகரிக்க முடியும். அத்துடன் இரசாயன உரம், களைகொல்லி, போன்றனவும் விளைச்சலை அதிகரிக்க உதவி செய்யும்.

மேலும் மனிதமூலதனத்தில் ஏற்படும் முன்னேற்றமும் உற்பத்தியை அதிகரிக்க உதவி செய்யும். பாடசாலைக்கல்வி, பயிற்சி வகுப்புக்கள், முறைசாராக்கல்வி போன்றனவும், மற்றும் கல்விக்கான கட்டடங்கள், கருவிகள், சாதனங்கள் {Materials, புத்தகங்கள் (Books), Film Projectors, தனியார் கணனி (Private computer), விஞ்ஞானக்கருவிகள் (Science equepments) இயந்திரம் (Mechinery), Lathes Garinders} என்பனவும் மனித மூலதனத்தில் மேம்பாட்டை ஏற்படுத்த உதவும். உயர்தர பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தரமான பாடப்புத்தகங்கள் என்பவையும் உழைப்பாளரின் தரம், தலைமைத்துவம் ஆகியவற்றில் பாரிய வேறுபாட்டை ஏற்படுத்தும். சுகாதார வசதிகளில் ஏற்படும் முன்னேற்றம் உற்பத்தித்திறனில் அதிகரிப்பினை ஏற்படுத்தும்.


மேற்கூறியவகையில் செய்யப்படும் முதலீட்டு நடவடிக்கைகள் யாவும் முதல்திரட்சிக்கு வழிவகுக்கும். புதிய நிலங்களை பயிர்செய்கைக்கு கொண்டுவருதல் (Eg. the clearing of unused land) இருக்கின்ற வளங்களின் தரங்களை உயர்த்துதல் (irrigation) போன்றனவும் தற்போது நுகர்வுக்கும் எதிர்கால நுகர்வுக்கும் இடையே செய்யப்படும் விட்டுக்கொடுப்பும் (trade-off) மூலதனத் திரட்சிக்குள் அடக்கப்படும்

(Giving up little now so that more can be had later, such as giving up current income to stay in school)

## சனத்தொகை மற்றும் ஊழியப்படை வளர்ச்சி - POPULATION AND LABOUR FORCE GROWTH


பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்றாக சனத்தொகை வளர்ச்சியும், அதனூடாக பெறப்படும் உழைப்பு சக்தியில் ஏற்படும் அதிகரிப்பும், அமைகின்றது. அதிக உழைப்பாளர் தொகை என்பதன் கருத்து யாதெனில் உற்பத்தியைத் தரும் தொழிலாளர்கள் அதிகம் உள்ளனர் என்பதுடன் உள்நாட்டு சந்தையின் அளவும் பெரிதாக இருக்கும் என்பதாகும். எனினும் அதிகரிக்கும் சனத்தொகை என்பது மிகை உழைப்பைக் கொண்ட வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துகின்றதா? என்பது கேள்விக்குரிய ஒன்றாகும். இந்த நாடுகளில் ஏற்படும் சனத்தொகை வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியின் மீது நேரான தாக்கத்தினையா அல்லது எதிரான தாக்கத்தினையா ஏற்படுத்துகின்றது என்பது பல காரணிகளில் தங்கியிருக்கும். குறிப்பிட்ட பொருளாதாரம் அதிகரிக்கும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நிலையில் உள்ளதா? மற்றும் புதிய தொழிலாளர்கள் நிருவாக, முகாமைத்துவ ஆற்றல்களைக் கொண்டுள்ளனரா? போன்ற பலவிடயங்கள் இதனைத் தீர்மானிப்பதாக இருக்கும்.

பொருளதார வளர்சிசயினைத் தீர்மானிக்கும் மூன்றாவது காரணியான தொழில்நுட்பத்தினை நோக்குவதற்கு முன் மூலதனத் திரட்சியையும் தொழிலாளர் தொகையையும் வைத்து பொருளதார வளர்ச்சி பற்றி உற்பத்தி சாத்திய வளைகோட்டின் உதவியுடன் சில விடயங்களை ஆராய்வோம். தொழில்நுட்ப நிலமை மாறாதிருக்கையில் கொடுக்கப்பட்ட பௌதிக, மனித வளங்களைக் கொண்டு இரண்டு பொருட்களில் உச்சமாக உற்பத்தி செய்யக்கூடிய சேர்க்கைகளைக் காட்டுவதாக உற்பத்தி சாத்திய வளைகோடு அமைகின்றது. தொழில்நுட்ப நிலமை மாறாதிருக்கையில் பௌதிக மனித மூலவளங்களை இருமடங்காக அதிகரிப்பின், அரிசி, றேடியோ ஆகிய இரு பொருட்களின் உற்பத்தியையும் இருமடங்காக அதிகரிக்க முடியும் என்பதை PP இலிருந்து உற்பத்தி சாத்திய வளை கோடு $P^1P^1$ என நகர்வது காட்டி நிற்கின்றது.



வரைபடத்தில் ஆரம்பத்தில் நாடு X என்ற புள்ளியில் உள்ளபோது, பௌதிக மனித மூலவளங்கள் பயன்படுத்தப்படவில்லை. X இலிருந்து $X^1$ க்குச் செல்லும் போது இரு பொருட்களின் உற்பத்திகளில் முன்பிலும் பார்க்க அதிகரிப்புக் காணப்படினும் வேலையின்மையும், முதல், நிலம் என்பன முற்றாகப் பயன்படுத்தப்படாத நிலையும் காணப்படுவதை நோக்கலாம். இந்நிலையே தற்போது பலகுறைவிருத்தி நாடுகளில் காணப்படுகின்றது. இந்த நிலையில் குறுங்காலத்தில் கூட உற்பத்தியை அதிகரிப்பதற்கு பௌதிக, மனித மூலவளங்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. மூலவளங்களைத் திறமையாகப் பயன்படுத்துவதன் மூலம் X இலிருந்து X1 இற்கோ அல்லது PP என்ற உற்பத்தி சாத்திய வளைகோட்டில் உள்ள ஒரு புள்ளிக்கொ செல்ல முடியும். நீண்டகாலத்தில் இருக்கின்ற வளங்களின் தரத்தை முன்னேற்றுவதன் மூலமும் மூலவளங்களின் தொகையினை அதிகரிப்பதன் மூலமும் தேசிய வெளியீட்டின் வளர்ச்சியினை துரிதப்படுத்த முடியும்.

தற்போது எல்லா உற்பத்திக்காரணிகளும் சமமான விகிதத்தில் வளர்ச்சியடைந்தால் உற்பத்தி சாத்திய வளையியானது PP இலிருந்து $P^1P^1$ ஆக நகரும். ஏல்லா உற்பத்திக்காரணிகளும் சமமான வீதாசாரத்தில் வளர்ச்சியடைகின்றன என எடுத்துக் கொள்வதற்குப் பதிலாகத் தனியே முதலில் (Capital) மட்டும் விரைவான அதிகரிப்பு ஏற்படுகின்றதென எடுப்போம். மேலும் Radio – Capital இனை அதிகம் உபயோகப்படுத்துகின்றது. அரிசி - உழைப்பை அதிகம் உபயோகப்படுத்துகின்றது. இரண்டும் தனித்தனியே அதிகரிப்பின் உற்பத்தி சாத்திய வளைகோடு பின்வருமாறு அமையும்.




a). Growth in Capital stock b). Growth in land

## தொழில்நுட்ப முன்னேற்றம் - Technological Progress

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக தொழில்நுட்ப முன்னேற்றம் அமைகின்றது. வழக்கமாக செய்து வருகின்ற உற்பத்தி முறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதையும், புதிய முறைகளைக் கண்டுபிடிப்பதையும் தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது கருதுகின்றது. பயிர்செய் முறைகளில், ஆடை செய்வதில், வீடுகட்டுவதில் எல்லாம் தொழில்நுட்ப முன்னேற்றத்தினை ஏற்படுத்தலாம்.

தொழில்நுட்ப முன்னேற்றத்தினை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. நடுநிலைத் தன்மையான தொழில்நுட்ப முன்னேற்றம்
2. உழைப்பு – சேமிப்பு தொழில்நுட்ப முன்னேற்றம்
3. முதல் - சேமிப்பு தொழில்நுட்ப முன்னேற்றம்


முன்னர் பயன்படுத்தப்பட்ட அதே உள்ளீட்டுச் சேர்கைகளைப் பயன்படுத்தி உழைப்பு சார்ந்தோ முதல் சார்ந்தோ அல்லாமல் முன்பிலும் பார்க்கக் கூடியளவு வெளியீட்டைப் பெறமுடிவதை நடுநிலைத் தன்மையான தொழில்நுட்ப முன்னேற்றம் எனலாம். தொழிற்பிரிப்பு காரணமாக ஏற்படும் சிறப்புத் தேர்ச்சியால் ஏற்படக்கூடிய சிறிய கண்டு பிடிப்புக்கள் கூட உற்பத்தியை உயர்த்த வல்லவையாக இருப்பதுடன் தனிப்பட்டவர்களுக்கும் கூடியளவு நுகர்வினை வழங்கும். இதனை உற்பத்தி சாத்திய வளைகோட்டினூடாக நோக்கும் போது Neutral Technical Progress என்பது புதிய உற்பத்தி சாத்திய வளைகோடானது பழைய உற்பத்தி சாத்திய வளைகோட்டிலிருந்து சமமான அளவில் வெளிப்பக்கம் நகரச் செய்யும். (படம் முன்பு காட்டப்பட்டுள்ளது). இங்கு உற்பத்திக்காரணிகளின் அளவு மாற்றமடையவில்லை என்பது கவனிக்கத்தக்கது.


மேற்கூறியதற்கு மாறாகத் தொழில்நுட்ப முன்னேற்றம் உழைப்பு சேமிப்பு வாய்ந்ததாகவோ அல்லது முதல் சேமிப்பு வாய்ந்ததாகவோ கூட இருக்கலாம். இவ்வகையில் உழைப்பு - சேமிப்பு தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது கணனிகள், Internet, Automated looms, high – speed electric drills, tractors, machinery ploughs போன்றன மற்றும் பலவகையான நவீன இயந்திரங்கள், கருவிகள் என்பன உழைப்பு – சேமிப்பு தொழில்நுட்பத்திற்குள் அடங்குகின்றது. கடந்த நூற்றாண்டில் பலவிதமான உற்பத்திகளில் ஊழிய சேமிப்பு தொழில்நுட்பம் காணப்பட்டது. காரணம் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்ட நாடுகளில் உழைப்பாளர் பற்றாக்குறை இருந்தமையும், அதனை நீக்குவதற்காக செய்யப்பட்ட ஆராய்ச்சிகளுமாகும். Technical Progress since the late 19th century has consisted largely of rapid advances in labor saving technologies for production everything from beans to bicycles to bridges.

முதல் - சேமிப்பு தொழில்நுட்ப முன்னேற்றம் அருமையானதாகவே காணப்படுகின்றது. காரனம் உலக பெரும்பாலும் விஞ்ஞான, தொழில்நுட்ப ஆய்வுகள் பெரும்பாலும் வளர்ச்சி அடைந்த நாடுகளிலேயே நடாத்தப்படுகின்றன. அங்கு

உழைப்பு பற்றாக்குறையாக இருப்பதால் உழைப்பு சேமிப்பு தொழில்நுட்பக் கண்டு பிடிப்புக்களிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனால் குறைவிருத்தி நாடுகள் குறித்து இதுவே அவசியமானதாக அமைகின்றது.

தொழில்நுட்ப முன்னேற்றம் உழைப்பு விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Labour Augmenting Technical Progress) என்றும் முதல் விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Capital Augmenting Technical Progress) என்றும் இருக்கலாம். உழைப்பினரின் தரத்தை அல்லது திறமையை உயர்த்துமாயின் அது Labour Augmenting Technical Progress ஆகும். உதாரணமாக வகுப்பறைக் கற்பித்தலுக்குரிய Video tapes., T.V, ஏனைய இலத்திரனியல் கருவிகளைப் பாவிப்பது உழைப்பு விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Technical Progress Technical Progress) ஆகும். இருக்கின்ற முதலை அதிக உற்பத்தி தரத்தக்க வகையில் பயன்படுத்துவது முதல் விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Capital Augmenting Technical Progress) ஆகும். மரக்கலப்பையை, உருக்குக் கலப்பையாக மாற்றுவது முதல் விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Capital Augmenting Technical Progress) ஆகும். இவை உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றன. உற்பத்தி சாத்திய வளைகோட்டின் மூலம் Labour Technical Progress, Captial Technical Progress என்பன காரணமாக உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பைக் காட்டலாம்.




1960களில் IR – 8 அரிசிக் கண்டுபிடிப்பின் விவசாயிகள் தமது உற்பத்தியை பன்மடங்காக அதிகரிக்க முடிந்தது. (பசளை, கிருமிநாசினி ஆகியன பயன்படுத்தப்படுத்தலுடன்) இதனை Land Augmenting எனவும் அழைக்கலாம். இங்கு வானொலி உற்பத்தி அதிகரிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

Radio தொழில்நுட்பத்தின் Transister கண்டுபிடிக்கப்பட்டமை முன்னேற்றத்தினைக் கொண்டு வந்தது. மிகப் பின்தங்கிய கிராமங்களுக்கும்

கையடக்கத் தொலைபேசிகளைக் (Cell Phones) கொண்டு செல்ல முடிந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் நவீன பொருளாதார வளர்ச்சி தொடர்பான பொருளியலாளர்களது கருத்துக்களை நோக்குவது அவசியமாகும்.

## நவீன பொருளாதார வளர்ச்சி (Modern Economic Growth) பற்றிய பார்வை

நவீன பொருளாதார வளர்ச்சி தொடர்பாக சைமன் குஸ்நெற்ஸின் (Simon Kuznets) கருத்தினை நோக்கும் போது, வளர்ச்சியடைந்த நாடுகளில் வரலாற்று ரீதியான தேசிய வருமான வளர்ச்சி அளவீடும் ஆய்வும் என்ற விடயத்திற்காக 1971 இல் நோபல் பரிசைப்பெற்ற Simon Kuznets என்பவர் ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றார். "a long – term rise in capacity to supply increasingly diverse economic goods to its population, this growing capacity based on advancing technology and the institutional and idealogical adjustments that its demands: (Moderm Economic Growth 1966). குறிப்பிட்ட நாட்டினுடைய மக்களைக் குறித்து பன்முகப்பட்ட பொருளாதாரப் பொருட்களின் நிரம்பலைச் செய்யும் இயலளவு நீண்டகாலத்தில் அதிகரித்துச் செல்வதையும், இவ்வளர்ந்து செல்லும் இயலளவு முன்னேறிச்செல்லும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதையும், அதற்கேற்ற வகையில் நிறுவன ரீதியான கருத்தியல் ரீதியான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்பதையுமே பொருளாதார வளர்ச்சி குறிக்கின்றது.

இதில் குறிப்பிடப்படும் மூன்று விடயங்களும் மிகப் பிரதானமானவையாகும்.

1. தேசிய வருமானத்தில் ஏற்படும் தொடர்ந்தேர்ச்சியான அதிகரிப்பு பொருளதார வளர்ச்சியினைக் காட்டும் ஒரு பண்பாகும். அத்துடன் பல்வேறுவகைப்பட்ட பொருட்களையும் வாங்கக்கூடியதாக இருக்கும் தகுதியென்பது பொருளாதார முதிர்ச்சியின் குறியீடாகும்.
2. முன்னேறிச் செல்லும் தொழில்நுட்பம் என்பது, தொடர்ந்தேர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அல்லது முன்நிபந்தனையாக அமையும். இது அத்தியாவசியமான ஆனால் போதுமான நிபந்தனையல்ல – (a necessary but not sufficient conditions).
3. முன்னேறிச் செல்லும் மனித அறிவின் இருப்பினால் (Stock of Human Knowledge) ஏற்படுத்தப்படும் புத்தாக்கங்களை திறமையான முறையில் பயன்படுத்த அதாவது தொழில்நுட்ப முன்னேற்றங்களை பரந்த அளவில் விருத்திக்குப் பயன்படுத்த, நிறுவன ரீதியான கருத்தியல் ரீதியான மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். அதாவது நவீன தொழில்நுட்பக் கண்டு பிடிப்புக்களுக்கு ஏற்ப சமூகம் மாற்றமடைந்து செல்ல வேண்டும்.

நவீன பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு பொருளாதார திருப்புமுனையைக் குறித்து நிற்கின்றது. பேராசிரியர் சைமன் குஸ்நெற்ஸ் வளர்ச்சியடைந்து பொருளாதாரங்களின் தேசிய வருமானத்தினையும் அவற்றின் மூலக்கூறுகளான சனத்தொகை தொழிலாளர்படை போன்ற விடயங்களையும் ஆராய்ந்து நவீன பொருளதார வளர்ச்சி 6 குணாம்சங்களை (1. High Rates of growth of per capital output and Population, 2. High Rates of increase in total factor Productivity - especially Labour Productivity (The rise in Productivity), 3. High Rate of Structural Transformation, 4. High Rates of Social and Ideological Transformation, 5. The Limited Spread of this Economic Grwoth to only a third of the World's Population, 6. The Outward Expansion of DCs) கொண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள Kuznets என்ற பொருளியலாளர் நவீன பொருளதார வளர்ச்சியில் தொழில்நுட்ப வளர்ச்சியில் 5 வகையான அமைப்பு (Patterns) உள்ளதெனவும் கூறுகின்றார். அந்த 5 வகையான அமைப்புக்களையும் பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார்.

1) விஞ்ஞானக்கண்டுபிடிப்பு அல்லது தொழில்நுட்ப அறிவின் அதிகரிப்பு A Scientific discovery or an addition to technical knowledge.
2) An invention – புதிய கண்டுபிடிப்பு
3) an innovation – புது முறைகாணுதல்
4) an improvement – முன்னேற்றம்
5) Speed of invention usually accompanied by improvements.

ஸ்கூம்பீற்றர் (Schumpeter) என்பவர் Innovation என்பதே பொருளாதார வளர்ச்சி குறித்து முக்கியமானதாக அமைகின்ற தொழில்நுட்ப காரணி எனக் குறிப்பிடுகின்றார். நவீன பொருளதார வளர்ச்சிக்கு மேலே குஸ்நெட்ஸால் கூறப்பட்ட மேற்படி ஐந்து காரணங்களும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு உதவியுள்ளன. LDC கள் தாமே புதிய கண்டுபிடிப்புக்களை ஏற்படுத்தும் வரை பொறுத்திருக்காமல் குறுங்காலத்தில் தமது உற்பத்தி இயலளவை விரைவாக அதிகரிப்பதற்கு நவீன தொழில்நுட்பத்தினை இறக்குமதி செய்ய வேண்டுமென முரணநெவள என்ற பொருளியலாளர் கூறுகின்றார். வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அதே வேளையில் சுதேசிய தொழில்நுட்பங்களையும் LDCகள் விருத்தியடையச் செய்தல் வேண்டும்.

விருத்தியடைந்த நாடுகளின் தொழில்நுட்ப விருத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் LDC கள் நன்மை பெறமுடியும் இருப்பினும், அவற்றைப் பயன்படுத்தும்போது, சமூக, பொருளதார தொழில்நுட்ப ரீதியான உறிஞ்சல் இயலளவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாட்டினதும் காரணி வளங்களுக்கேற்ப எவ்வாறு தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டுமென்பது தொடர்பாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களுடன் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய இடம்பெறும் ஒழுங்கமைத்தல் (Organization) பற்றியும் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

**பொருளாதார வளர்ச்சிச் செயன்முறையில் ஒழுங்கமைத்தல் (Organization)**

வளர்ச்சிச் செயன்முறையில் ஒழுங்கமைப்பும் முக்கிய இடம்பெறுகின்றது. பொருளதார நடவடிக்கைகளில் உற்பத்திக் காரணிகளின் உத்தம பயன்பாட்டுடன் இது தொடர்புபட்டதாக அமைகின்றது. ஒழுங்கமைப்பு என்பது முதல் உழைப்பு என்பதற்கு நிரப்புத்தன்மை (Complement) வாய்ந்ததாக அமைவதுடன், உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவி செய்கின்றது. நவீன பொருளதார வளர்ச்சியில் முயற்சியாளர் (entrepreneur) என்பவர் ஒழுங்கமைப்பாளராக இருப்பதுடன், ஆபத்து, மற்றும் நிட்சயமற்ற தன்மை ஆகியவற்றினைத் தாங்குபவராகவும் உள்ளார். முயற்சியாளர் என்பவர் சாதாரண தகுதி கொண்ட மனிதரல்லர். சரியான சந்தர்ப்பங்களை அறிந்து, வெற்றிதரத்தக்க வகையில் புதிய பொருட்கள், புதிய தொழில்நுட்பம், நிரம்பலுக்கான புதிய மூலங்கள் (Sources) என்பவற்றை அறிமுகப்படுத்தும் தகுதியைக் கொண்டவராகவும், இயந்திரங்கள், நிருவாகம், உழைப்பு சக்தி போன்றவற்றை ஒருங்கிணைக்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். 19ம் நூற்றாண்டில் இயந்திரக் கைத்தொழில் புரட்சி ஏற்படவும், 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் அமெரிக்காவில் பொருளதார வளர்ச்சி ஏற்படவும் முக்கியமாக இருந்தவர்கள் முயற்சியாளர்களே.

LDC களில் முயற்சியாளர் நடவடிக்கை குறைவாகவே உள்ளது. சிறிய அளவுசந்தை, குறைவான முதல், தொழில்நுட்பரீதியில் பின்தங்கி இருத்தல், ஒப்பந்த உரிமை, சொத்துரிமை என்பன இல்லாதிருத்தல், பயிற்சிபெற்ற, மற்றும் திறமைவாய்ந்த தொழிலாளரின்மை, சமூக பொது முதலீடுகளில் குறைபாடு போன்றவற்றால் நிட்சயமின்மையும், ஆபத்துக்களும் LDC களில் கூடுதலாகக் காணப்படுகின்றது. Myrdal என்பவரின் கருத்துப்படி முயற்சியாண்மை entrepreneurship குறைவாகக் காணப்படுவதற்கு இந்த நாடுகளில் முதல் குறைவோ அல்லது மூலப்பொருள் குறைவோ காரணமல்ல முயற்சியாண்மைக்கான சரியான நோக்குடைய ஆட்களின்மையே அதற்குக் காரணமாகும். யப்பானியர்கள் சாதாரணமாக முயற்சியாண்மைக்குரிய தகுதியைக் கொண்டுள்ளார்கள்.

**தொகுப்புரை**

முயற்சியாண்மை அதிகரிக்கக்கூடிய சூழ்நிலையை LDC கள் உருவாக்கக்கூடிய சூழ்நிலையை LDC கள் உருவாக்க வேண்டும். தனியுரிமைப்போட்டி நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். சந்தையில் காணப்படும் குறைபாடுகள் களையப்பட வேண்டும். சந்தை சந்தர்ப்பங்கள் பற்றிய அறிவு அதிகரிக்கப்பட வேண்டும். சொத்துடைமையைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் இறுக்கமாக

கடைப்பிடிக்கப்பட வேண்டும். பொருளதார முன்னேற்றத்திற்கான காரணிகளை ஆராயும் போது பலகாரணிகள் அதில் பங்குபெறுவதை அறியலாம். எனினும் இருக்கின்ற பௌதிக, மனித மூலவளங்களை முன்னேற்றுவதற்குச் செய்யப்படுகின்ற முதலீடுகள் இவ்வுற்பத்தி வளங்களின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு, புதிய கண்டுபிடிப்பு (Invention) புத்தாக்கம் (Innovation) தொழில்நுட்ப முன்னேற்றம் (Technical progress) ஆகியவற்றால் ஏற்படும் உற்பத்தித்திறன் (Productivity) அதிகரிப்பே பொருளதார வளர்ச்சிக்குப் பெரும்பங்கினை ஆற்றுகின்றன. இவ்வகையில் உற்பத்திச் சாத்திய வளகோட்டு ஆய்வானது ஒரு பொருளதாரத்திற்குக் கிடைக்கக்கூடிய உற்பத்தித் தெரிவுகளை ஆய்வு செய்வதற்கு எங்களுக்கு உதவி செய்கின்றது. அத்துடன் வெளியீட்டுக்கான அமையச்செலவு (Opportunity Cost), வெளியீடு, மற்றும் உள்ளீடுகளில் பயன்படுத்தப்படாமலும், குறைநிலையில் பயன்படுத்தப்படுவதுமான வளங்கள் (Underutilized Resources) என்பவற்றை அறியவும் அதிகரித்த வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றங்கள் என்பவற்றால் பொருளதார வளர்ச்சியில் ஏற்படும் தாக்கங்களை அறியவும் பயன்படுகின்றது.

**உசாத்துணைகள்**


1). Michael P. Todaro, (2000), "**Economic Development**" Seventh Edition, New York University,

2). Michael P. Todaro & Stephen C. Smith (2003), "**Economic Development**" Eighth Edition, New York University,

3). Rostow.W.W. (1960), "The Stages of Economic Growth" 'The TAKE- OFF' Chapter 4, PP:36-58.

4). Ahuja, H.L. (2000), "Modern Economics" Part IX Chapter 38, 45, 46, 47 'Development Economics' Tenth Edition, University of Delhi, PP:



**திரு. சிதம்பரநாதன் உதயகுமார்**

தலைவர் மற்றும் சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் -I

பொருளியல் துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை.

# அதிகரித்த உடற்பருமனும் தடுக்கும் வழிமுறைகளும்



உலக சனத்தொகையில் ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் அதிகரித்த உடற்பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர். நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம் போன்ற பல நோய்கள் ஏற்படுவதற்கு அதிகரித்த உடற்பருமனும் காரணமாக அமைகின்றது. நிரம்பிய கொழுப்புச் சத்துடைய அதிக கலோரி கொண்ட உணவுகளை அதிகளவில் உட்கொள்ளுதல், குறைந்தளவிலான உடற்பயிற்சி ஆகிய இரண்டுமே இதற்கான பிரதான காரணங்களாக உள்ளன. அனைத்து வயதுப்பிரிவுகளைச் சார்ந்த மக்களையும் பாதிக்கும் ஒருநோய்நிலைமையாக அதிகரித்த உடற்பருமன் மாறியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமே காணப்பட்ட இப்பிரச்சினை தற்போது உலகளாவிய பிரச்சினையாக மாறியுள்ளது. அதிகரித்த உடற்பருமனால் ஏற்படக்கூடிய நோய்கள் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையை எடுத்துக்கொண்டால், மிக அண்மைக் காலமாக அதிகரித்த உடற்பருமன் கொண்டவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு சுகாதாரத்துறையினரின் கவனத்தை ஈர்த்துள்ளது. சமூகத்தில் உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் பொருளாதார வளர்ச்சி, நகரமயமாக்கம் போன்ற காரணங்களும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மக்கள் பொருளாதார முன்னேற்றம் காணும் போதும், நகர வாழ்விலிருக்கும் போதும் அதிகளவு காபோவைதரேற்று, கொழுப்புள்ள இனிப்புள்ள உணவுகளையும் உட்கொள்வது அதிகரிக்கின்றது. உடல் உழைப்புக் குறைந்த வேலைகளில் மட்டுமே ஈடுபடும் தன்மையும் அதிகரிக்கின்றது. தொழில்நுட்ப வளர்ச்சியும் உடற்பயிற்சிமிக்க பொழுதுபோக்கு நடவடிக்கைகளிலிருந்தான விலகலும் இதற்கான காரணங்களாகும். அதிகரித்த உடற்பருமனானது உடற்திணிவுச் சுட்டியைப் (BMI) பயன்படுத்திக் கணிக்கப்படுகின்றது. உடற்திணிவுச்சுட்டி $= \frac{\text{நிறை}(kg)}{(\text{உயரம்})^2 (m^2)}$ என்ற சமன்பாட்டின் மூலமாகக் கணிக்கப்படுகின்றது. $30kgm^{-2}$ இற்கு மேலான உடற்திணிவுச்சுட்டி மிகவும் அதிகரித்த உடற்பருமனாக (Obesity) கொள்ளப்படுகின்றது. எனினும் இதனைவிடக் குறைந்த உடற்திணிவுச் சுட்டி நிலைகளிலேயே நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றது. $18.5kgm^{-2}$ இற்கு குறைவான உடற்திணிவுச் சுட்டியைக் கொண்டவர்கள் குறைந்த உடற்பருமன் கொண்டவர்களாக (Underweight) கருதப்படுவர்.

சிறுவர்களாக இருக்கும் போமு போசணைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டும் பின்னர் அதிகரித்த உடற்பருமனை அடைபவர்களிலேயே நோய்த்தாக்கம் அதிகளவில் ஏற்படுவதாக சமீபகால ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. சிறுவர்களில் ஏற்படும் அதிகரித்த

உடற்பருமனும் மிகவும் முக்கியமான ஓர் பிரச்சினையாகும். அதிகரித்த உடற்கொழுப்பு உடற்திணிவை அதிகரிப்பதுடன் பாதகமான விளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்துகின்றது. குருதி அமுக்கம், குருதிக்கொலஸ்திரோல் அளவு, இன்சுலின் சுரத்தல் என்பவற்றில் இது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். சுவாசப் பிரச்சினைகள், தோல் சம்பந்தமான பிரச்சினைகள், மலட்டுத்தன்மை போன்ற மரணத்தை ஏற்படுத்தாத விளைவுகளையும் இது ஏற்படுத்தலாம். உயிராபத்தை விளைவிக்கக் கூடிய நீரிழிவு, ஓமோன்கள் சம்பந்தப்பட்ட புற்றுநோய்கள், பித்தப்பை நோய்கள் என்பவற்றையும் இது ஏற்படுத்துகின்றது. தொடர்ச்சியான உடற்பருமன் வயதானவர்களில் பிரதான பிரச்சினைகளில் ஒன்றாகக் காணப்படும் மூட்டுவாதத்தை ஏற்படுத்துவதில் பெரும்பங்களிப்புச் செய்கின்றது.

**பின்பற்றக்கூடிய நடவடிக்கைகள்**

உரியமுறையிலான உடல்நிறையைப் பேணும் நடவடிக்கையினை தொடர்ச்சியான முறையிலும் தூரநோக்கின் அடிப்படையிலும் பின்பற்றுதல் அவசியமானதாகும். உரிய உணவுப் பழக்கவழக்கங்களும் போதியளவு உடற்பயிற்சியில் ஈடுபடலும் இதற்காக ஒருவர் பின்பற்ற வேண்டிய அடிப்படையான இரண்டு விடயங்கள் ஆகும். சமூகரீதியான ஒருமாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் குறைந்த கொழுப்புள்ள, அதேவேளையில் போசாக்குள்ள உணவுகளைப் பெறக்கூடியதன்மை, அதிக நார்ச்சத்துள்ள உணவுகளைப் பெறக்கூடிய தன்மை, உடற்பயிற்சியில் அதிகளவு நேரத்தை செலவிடச் செய்யும் வாழ்க்கை முறை என்பவற்றை ஏற்படுத்தத்தக்க வகையில் சுகாதாரம் தொடர்பான கொள்கைகள் அரச மட்டத்தில் வகுக்கப்பட்டு ஒரு சிறந்த சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

மக்கள் மத்தியில் சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்துதல்

- ❖ அதிகளவு பழங்களையும் மரக்கறிகளையும் முழுத்தானியங்களையும் உணவில் சேர்த்துக் கொள்ளுதல்.
- ❖ குறைந்தளவு 30 நிமிடங்களாவது போதியளவு உடற்பயிற்சியில் ஈடுபடல்.
- ❖ கொழுப்பு, இனிப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல்.
- ❖ நிரம்பிய கொழுப்பைக் கொண்ட விலங்கு உணவுகளுக்குப் பதிலாக நிரம்பாத கொழுப்பமிலங்களைக் கொண்ட உணவுகளை உள்ளெடுத்தல்.

அதிகளவு உடற்பருமனால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கான மருத்துவ உதவிகளை வழங்குவதன் மூலமாக உடல்நிறையைக் குறைப்பதற்கு அல்லது மேலும் உடல்நிறை அதிகரிப்பதைத் தடுப்பதற்கு தேவையான உதவிகளை வழங்குதல் மருத்துவத்துறை சார்ந்தவர்களின் கடமையாகும். இச்சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதனால் இந்த உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**திருமதி அனுராதா கஜேந்திரன்**
MBBS, MO

# சங்கச் செய்யுள்களின் தனிச் சிறப்பியல்புகள்

உலகில் தோன்றி நின்று நிலைத்து வாழும் மொழிகளுள் உயர்தனிச் செம்மொழி ஆற்றலோடும் சீரிளமைத் திறத்தோடும் வியந்து பார்க்கப் பெறும் மொழியாக இருப்பது தமிழ் மொழியென்பர். அத்தமிழ் மொழியின் வளர்ச்சி வரலாறு, கிடைக்கப்பெற்ற இலக்கிய இலக்கணப் பனுவல்களுடனேதான் ஓரளவுக்கேனும் விளக்கமுற்று நிற்கின்றது. கல்வெட்டுக்கள், செப்பேடுகள், மெய்க் கீர்த்திகள் போன்றன சிலசில தகவல்களை வழங்கும்போது தமிழ்நூல்களின் தகைமை கொண்டே காலப் பரிணாமத்தைக் கல்வியாளர் கணித்துக்கொடுத்தனர். இவ்வாராய்ச்சியிலும் மாறுபாடுகளும் குறைபாடுகளும் இருப்பதைக் காணமுடிகிறது. ஆயினும் பொதுவான ஒரு பார்வையில் தமிழிற் கிடைக்கின்ற பனுவல்களிற் காலத்தால் முற்பட்டவற்றை (கி.பி. 1-3ம் நூற்றாண்டு) சங்கச் செய்யுட்கள் எனச் சான்றோர் வகுத்துள்ளனர். அந்த வகையில் தொகை நூல்கள் எட்டும் பாட்டு நூல்கள் பத்துமாக பதினெட்டு நூல்களை மேற் கணக்கு நூல்களென வகைப்படுத்தி உள்ளனர்.

இரு வகையான அகப்புற இயல்புகளை தன்னகத்தே உயிராக கொண்ட மேற் கணக்கு நூல்களை சான்றோர் இரு பிரிவாக நோக்குவர். எட்டுத் தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அகம் பற்றியன. புறநானூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல் ஆகியன புறம் சார்ந்தனவாக கொள்ளப்படுகின்றன.

பத்துப் பாட்டு நூல்களுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்று நூல்களும் அகப்பொருள் பற்றியவை. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய ஏழு நூல்கள் புறம் சார்புத் தன்மை கொண்ட இலக்கியமாக கொள்ளப்படுகின்றன.

சங்கச் செய்யுட்களின் தனிச்சிறப்பியல்புகளை வரையறை செய்த ஆய்வாளர்கள் முடிந்த முடிபாக சங்க இலக்கியங்களுக்கு தனித்துவமான இடம் உண்டு எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆய்வாளர்களில் ஒருவரான கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் நோக்கில் இதனை நோக்குவது இலகுவானது ஒன்றாகும். சங்கச் செய்யுளுக்கு ஐந்து வகையான இயல்புகளைக் குறிப்பிடுகின்றார்.

(1) பாடுபொருள்

(2) பாடும் முறைமை

(3) பாட்டின் பயன்

(4) உலக இலக்கியங்களோடு ஒப்பிடும் நிலை

(5) பாத்திர நிலை

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை விளக்கியுள்ளார்.

பாடுபொருள் என்ற பகுப்பினுள் அமையக்கூடிய சிறப்பியல்புகளை முதலில் நோக்குவோம்.

சங்க கால மக்கள் வாழ்க்கை இயற்கையோடிணைந்த செம்மைப் பண்புகள் அதிகளவு கொண்ட அமைப்பாகக் காணப்படுகின்றது. அகம், புறம் இரு மரபினும் தூய்மையான தன்மை காணப்படுகிறது. சங்ககால பொருள் மரபில் முதல், கரு, உரி என்கின்ற கருப்பொருளே மிக முக்கியமான தொன்றாக அமைந்துள்ளது. இதனை நன்குணர்ந்த புலவர்கள் நிலத்தின் தன்மைக்கும் பொழுதின் இயல்புகளுக்கேற்ப தெய்வம், உணவு, விலங்கு, புள், பறை, தொழில், யாழ் என்ற அனைத்துப் பொருளும் விரவக் கூடியவகையில் மக்களின் அகப் புற ஒழுக்கங்களை வகைப்படுத்தி இலக்கியம் படைக்கலாயினர். நிலமும் பொழுதுமாகிய முதலின் தன்மைக்கேற்ப சூழ இருக்கும் அனைத்துப் பொருட்களையும் கருவாகக் கொண்டு அகப்புற ஒழுக்கமாகிய உரியை நெறிப்படுத்தியிருக்கும் திறம் ஏனைய மொழியியலாளராலேயே வியந்து நோக்கப்படுகின்றது. அகம், புறம் ஆகிய இரு பொருள் மரபு சார்ந்த இலக்கிய வகைப்பாட்டினுள் மிக நேர்த்தியாக கையாண்டுள்ளமை முக்கியமான சிறப்பாக அமைந்துள்ளது. அகப்பொருட் சார்ந்த இலக்கியங்களில் தலைவன் தலைவியரது பெயர் சுட்டப்படக் கூடாது என்கின்ற விடயம் முதன்மையாக கொள்ளப்பட்டுள்ளது. இத்தகையொரு இலக்கிய செல்நெறி பிற்பட்ட கால இலக்கியத்தில் காணமுடியாது. நெடுநல் வாடை என்ற இலக்கியம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. நெடுநல் வாடையில் புறப்பொருளை விவரிப்பதை விட அகப்பொருள் செய்தி மிக விரிவாக உணர்வுபூர்வமாக சித்திரித்துக் காட்டப்படுகிறது. தலைவனின் பெயர் சுட்டப்பட்டுள்ளது என்ற காரணத்தினால் புற இலக்கியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இப் பாடலில் பாண்டியன் வேப்ப மாலையை அணிந்துள்ளான் என்ற புறச் செய்தி குறிப்பிடப்பட்டமையால் புற இலக்கியத்துள் சேர்க்கப்பட்டுள்ளது. பிற்பட்ட கால இலக்கிய செல்நெறியில் அகப்பொருள் எடுத்துக் கொள்ளப்பட்டாலும் சங்க இலக்கியத்தில் புலவன் கையாண்டது போல கையாளப்படவில்லை.

சங்க இலக்கியங்களில் கையாளப்பட்ட பொருள் மரபு அக்கால மக்களின் அகபுற வாழ்வியலை முழுமையாக சித்தரித்துக் காட்டுகின்றன. தலைவன் தலைவியரது அக வாழ்க்கை, அதனிடையே காணப்படுகின்ற பிறழ்வுகள் என்பவற்றை மிக உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புறப் பொருள் மரபில் மன்னனது போர், வீரம், ஆட்சிச் சிறப்பு, படை வலிமை, கொடைச்சிறப்பு, மன்னனின் மனநிலை, தோற்றப்பொலிவு, நாட்டுவளம் என்பவற்றுடன் பண்பாட்டு விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டு பாடப்பட்டுள்ளன.

பாடும் முறைமை சங்க இலக்கியங்களை தனிச் செய்யுளாக நோக்கப்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது. சங்கச் செய்யுட்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்

தன்மை கொண்டவை. சிறிய சிறிய தமிழ்ச் சொற்களை கொண்டு பாடல் பாடப்பட்டுள்ளது. சிறிய சொற்களை மட்டும் கையாண்டது மட்டுமல்ல மிக இறுக்கமான பாடலாகவும் அமைந்திருப்பது தனித்துவமானதொன்றாகும். இப் பாடலில் கையாளப்பட்ட இடைச் சொற்கள் மிகுந்த பொருள் வளம் கொண்டதாக அமைந்துள்ளது. ஓசை நயத்துக்காய் அளபெடையை இசைத்து செய்யுள் பாடப்பட்டுள்ளது. பாடல்களைப் பயில்கின்றபோது இயன்றவரை வடமொழிச் சொற்களைக் கையாளவில்லை. இது தனித்துவமானதொன்றாகும். எளிமையான சொற்களை கையாண்டு தான் எடுத்துக்கொண்ட பொருளை வெளிப்படுத்துவதில் சங்கக் கவிஞனுக்கு நிகர் வேறு யாரும் இல்லை. மன்னன் மகன் பிறந்த செய்தி கேட்டு வரும் காட்சி

“கையது வேலே காலது புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்”

என்ற பாடலில் மிக எளிமையான சொற்களின் ஊடாக மிக நயமாக உணர்ச்சிப் பெருக்குடன் மன்னனின் தோற்றப்பொலிவு சித்தரித்துக் காட்டப்படுகிறது.

பாடும் முறைமையின் அடுத்த அம்சமாக பாவகையை நோக்கின் இக்காலச் செய்யுட்கள் பெரும்பாலும் அகவற் பாவிலேயே அமைந்திருக்கின்றன. வஞ்சிப்பாவும் கலிப்பாவும் சிற்சில இடங்களிலும் வெண்பா மிக அருகியும் காணப்படுவதே சங்க காலச் செய்யுள் வடிவமாகும். உள்ளதை உள்ளபடியே அவ்வாறு எடுத்து விளக்குவதற்கு அகவல்பா மிகப் பொருத்தமுடையதாகும். தொல்காப்பியர்

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்”

(தொல். அக 50)

என்று வரையறுத்து அகப்பொருள் மரபிற்கு கலிப்பாவினையும் பரிபாட்டினையும் சிறப்பாகும் எனச் செப்பியமை இங்கு நோக்கத்தக்கதாம்.

சங்கச் சான்றோன் தான் எடுத்துக்கொண்ட பொருளை தெளிவாக எடுத்து விளக்க உவமை, உள்ளுறை உவமை, இறைச்சி என்பனவற்றைப் பயன்படுத்தியுள்ளான். ஒரு நிலத்தில் காணப்பட்ட கருப்பொருளின் ஊடாக தலைவன் தலைவியரது காதலின் உயர்வு உவமை ஊடாக எடுத்துக் காட்டப்படுகிறது.

உதாரணம் :

“யாயும் ஞாயும் யாராகிய ரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே”

என்ற பாடலில் தலைவன் தலைவியரது உள்ளத்தினை மிக நுணுக்கமாக பொருத்தமான உவமை ஊடாக எடுத்துக் காட்டப்படுகிறது. இதேபோன்று மிகப் பொருத்தமாக உள்ளுறை உவமத்தினைக் கையாள்கின்றார்.

உதாரணம் :

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார் அஃது அறிந்திசி னோரே சாரல்
சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு இவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

இப் பாடலில் "சிறு கோட்டுப் பழம் தூங்கி யாங்கு இவள் உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" என்பதில் உள்ளுறை உவமம் கையாளப்பட்டுள்ளது. அகத்திணைப் பாடல்களில் மிக நுணுக்கமாக தலைவன் தலைவியரது உள்ளத்தின் உணர்வு நிலை வெளிப்படுத்திக் காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று இறைச்சிப் பொருள் கையாளுகின்ற தன்மையினையும் காண முடிகிறது.

உதாரணம் :

மையற விளங்கிய மணிநிற விசும்பின்
கைதொழு மரபின் எழுமீன் போலப்
பெருங் கடற் பரப்பின் இரும்புறத் தோயச்
சிறுவெண் காக்கை பலவுடன் ஆடும்
துறைபுலம் புடைத்தே தோழி பண்டும்
உள்ளூர்க் குரீ இக் கருவுடைத்தன்ன
பெரும்போது அவிழ்த கருந்தாட் புன்னைக்
கானலங் கொண்கன் தந்த
காதல் நம்மொடு நீங்கா மாறே

நற்றிணை 231

இப்பாடலானது தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் தமிழரின் அகப் பண்பாட்டு அம்சங்களை நாகரீகமான முறையில் வெளிப்படுத்துவதாகவும் தலைவன் திருமணத்திற்கு காலம் தாழ்த்துவதாகவும் அதேவேளை விரைவுபடுத்துமாறு தலைவனுக்கு தோழி கூறுவதாக இளநாகனார் படைத்துள்ளார். இதன் மூலம் சிறப்பான பல அகத்திணை மரபு வெளிப்படுத்தப்படுவதோடு இப்பாடலில் இறைச்சிப் பொருளும் கையாளப்பட்டுள்ளது.

சங்கச் செய்யுட்கள் புலவன் தான் கேட்டு அனுபவித்தவற்றை அப்படியே கூறுகின்ற தன்மை முக்கியமானது. புலவன் தன்னுடைய கற்பனை ஆற்றலுக்கு ஏற்றவாறு பாடல்களைப் பாடுகின்றான். இதற்கு அமைவாகவே நெடும் பாடலாகவும் குறும் பாடலாகவும் தொகுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

| | நூல் | அடிகள் | பாடல்களின் எண்ணிக்கை | பாடிய புலவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1) | நற்றிணை | 9 - 10 | 400 | |
| 2) | குறுந்தொகை | 4 - 8 | 400 | 205 |
| 3) | ஐங்குறுநூறு | 3 - 6 | 500 | 05 |
| 4) | அகநாநூறு | 13 - 31 | 400 | 145 |
| 5) | கலித்தொகை | 150 | 150 | |
| 6) | பரிபாடல் | | 33 | |
| 7) | பதிற்றுப்பத்து | | 86 | |
| 8) | புறநானூறு | 3 - 40 | 400 | 145 |
| 9) | குறிஞ்சிப்பாட்டு | 103 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 10) | முல்லைப்பாட்டு | 261 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 11) | பட்டினப்பாலை | 217 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 12) | நெடுநல்வாடை | 188 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 13) | மலைபடுகடாம் | 583 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 14) | திருமுருகாற்றுப்படை | 317 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 15) | பெரும்பாணாற்றுப்படை | 500 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 16) | சிறுபாணாற்றுப்படை | 269 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 17) | பொருநராற்று படை | 248 | நெடும் பாட்டுக்கள் | 01 |
| 18) | மதுரைக்காஞ்சி | 782 | நெடும் பாட்டுக்கள் | 01 |

இத்தகைய இலக்கியங்களின் தனித்துவமான தன்மைகளை எடுத்து நோக்கும் போது சங்க கால செய்யுட்களின் தனிச் சிறப்புக்களை நன்கு விளங்கிக் கொள்ள முடியும். பதினெண் மேற்கணக்கு நூல்களில் மிகக் குறைந்த அடி வரையறை கொண்ட பாடலாக ஐங்குறு நூறும் (3 அடிகள்) அதிகளவான அடி கொண்டதாக மதுரைக் காஞ்சியும் விளங்குவது அவற்றின் தனித்துவத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

பத்துப்பாட்டு, இலக்கியங்களில் ஆற்றுப்படை இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு தனித்துவமான இயல்பினைக் கொண்டுள்ளது. ஆற்றுப்படை இலக்கியங்களில் காணப்படும் பண்புகளை நாம் எட்டுத்தொகை நூலாகிய புறநானூற்றிலும், பதிற்றுப் பத்திலும் கண்டுகொள்ளலாம். இதன் தொடர்ச்சியாகவே ஆற்றுப்படை இலக்கியங்களின் தோற்றமாகும்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியர்
ஆற்றினைக் காட்சி உறழத் தோற்றுப்
பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீ இச்
சென்ற பயன் எதிர்சொன்ன பக்கலும்"

(தொல்காப்பியம்)

என்று ஆற்றுப்படையின் இயல்பினைக் கூறி இதற்குப் பின்வந்த சான்றோர் புரவலன் ஒருவனிடம் சென்று பெரும் பொருள் பரிசிலாகப் பெற்ற பொருநர், பாணர்,

விறலியர், புலவர் முதலியோருள் ஒருவன் ஏனைய பரிசிலருள் ஒவ்வொரு திறத்தார்க்கும் புரவலனுடைய நாடு, ஊர், பெயர், பரிசில் முதலியவற்றைக் கண்டு எடுத்தோதி அவன் பாற் சென்று தான் 'பெற்றவாறே பெறுக எனச் சொல்லி விடுப்பதென்றும் இவ்வாறு பாடும் பாட்டு ஆயிரம் அடி பெருமையுடையது என்று கூறினார்.

ஆற்றுப்படைகளில் ஒன்றான திருமுருகாற்றுப்படை தனித்துவமான இயல்பினைக் கொண்டுள்ளது. இது அக்காலத்து மக்களின் இறை தொடர்பான நம்பிக்கையில் எழுந்த நூல் எனலாம். இதில் முருகனது ஆறு படை வீடுகளும் சிறப்பித்து அவனது பெருமை பேசப்படும். இத்தகைய தன்மை கொண்ட திருமுருகாற்றுப்படை பிற்பட்ட காலத்தில் பக்தி இலக்கியம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது.

சங்கச் செய்யுள்கள் மிக இறுக்கமான கவிதைகளாகவும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாகவும் அமைந்திருப்பது தனிச்சிறப்பானது ஒன்றாகும். இக் கவிதைகளில் உருபுகள் கையாளப்படாது தொகைகளாகவே கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. பிற்பட்ட கால செய்யுள் வழக்கில் வடமொழிச் சொற்களின் பயில்வு தவிர்க்கமுடியாதபடி ஒட்டிக்கொண்டன என ஆய்வாளர் எடுத்துக்கூறுவர். இச்செய்யுட்கள் ஒரு துறையில் ஒரு செய்யுள் என்ற நிலையிலே பாடப்பட்டன. சங்க மருவிய காலத்தில் சிலப்பதிகாரம் என்ற காப்பிய இலக்கியத்தின் உருவாக்கத்திற்கு சங்கப் பாடல்கள் அடிப்படையாக அமைந்தது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் மதுரைக் காண்டத்தில் சங்க இலக்கியத்தில் ஒன்றான மதுரைக்காஞ்சியில் கையாளப்பட்ட பாடல் வரிகள் கையாளப்பட்டுள்ளது. சிலப்பதிகார காவியத்தின் உருவாக்கத்திற்கு சங்க இலக்கியங்கள் ஆதாரமாக அமைகின்றன.

சங்க இலக்கியங்களின் தோற்றத்திற்கு பின்னர் தொல்காப்பிய இலக்கண நூல் தோற்றம் பெற்றுள்ளது. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் விளம்பல்' என்பதற்கு பொருந்தக்கூடிய வகையில் தனித்துவமான இயல்புகளைக் கொண்டிருப்பதனால் சிறப்பான பொருளிலக்கணம் கூறுவதற்கென பொருளதிகாரம் தோற்றம்பெற்றது. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகத்திணையியல் புறத்திணையியல் என இரு இயல்களை அமைக்கின்றார். சங்க இலக்கியங்களின் பொருள் மரபினை அடிப்படையாகக் கொண்டே இதனை வகைப்படுத்தியுள்ளார். இந்தவகையில் தனித்துவமான இயல்பினை சங்கச் செய்யுட்கள் கொண்டுள்ளன.

தற்காலத்தில் ஒப்பியல் ஆய்வினை மேற்கொள்பவர்கள் சங்க இலக்கியங்களை முதன்மையாக கொள்கின்றனர். பேராசிரியர் கைலாசபதி வீரயுகப் பாடல்களை கிரேக்க பாடல்களுடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார். பேராசிரியர் என்.கே. சித்தாந்த இந்திய வீரயுகப் பாடல்களை ஹோமர் எழுதிய வீரயுகக் கதைகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார். இவ்வாறு சங்க இலக்கியங்களின் புதுமையே இதற்கு காரணமாக அமைகின்றது. இந்தியாவில் தமிழ் மொழி செம்மொழியாக ஏற்றுக்கொள்வதற்கும் வரையறையான கட்டுமானமான சங்கச் செய்யுள்களின் தோற்றமே காரணமாக அமைகின்றது.

***பொன்னையா வல்லிபுரநாதன்***

*B.A. (Hons), M.A.*

*யா/ வரணி மத்திய கல்லூரி*

# வாழ்வும் வளமும்

"நாடென்ப நாடா வளத்தது" எனும் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவப் பெருந்தகையின் நிறைமொழிக்கிணங்க 'நாடா வளத்தது' நம் வரணியூர்.

இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கைத் திருநாட்டின் வடபால் வடக்கு, கிழக்கு உப்பங்கழியும் கண்டல் காடும் தெற்கு தென்னஞ்சோலைகள் சூழ்ந்த கொடிகாமத்தையும் மேற்கு செந்நெல் விளையும் மருத நிலத்தையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்தது. தெவிட்டாத இளநீர் தாங்கும் தென்னஞ்சோலைகளும் எல்லை காவல்வீரர்களாக அணிவகுக்கும் பனந்தோப்புக்களும் பரந்து விரிந்த செந்நெல் விளை கழனிகளும தன்னகத்தே கொண்ட நாடா வளம் மிக்கது.

சைவமும் தமிழும் எம்மவரின் இரு கண்கள். வேல் கொண்டு காக்கும் சேவலப்பிட்டி முருகனும் தாயென அருளாட்சி செய்யும் சுட்டிபுரம் கண்ணகை அம்மனும் நடுநாயகமாக வீற்றிருக்க பிள்ளையார், முருகன், வைரவர் தெய்வங்களும் அருள்பாலிக்கும் பாக்கியசாலிகள். சைவத்தின் தொன்மையை குறிக்கும் மடாலயங்களும் ஐயனார், அண்ணமார், குருநாதர், பேச்சி அம்மன், காளி, நரசிங்கர், வீரபத்திரர் ஆகிய காவல் தெய்வங்களின் வழிபாடும் ஊரின் சிறப்புக்குரியன நாவலர் வழியில் தொன்றுதொட்டு ஓதப்படும் புராணபடனம் சைவத்தையும் தமிழையும் மேலோங்கச் செய்கிறது. கிறிஸ்தவ ஆலயங்கள் சிலவும் இறை பணியில் மக்களை இட்டுச்செல்கின்றன.

வரணியூர், வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, நாவற்காடு, குடமியன், தாவளை, இயற்றாலை, வரணி இயற்றாலை, மந்துவில் கிராமங்களை உள்ளடக்கியது.

வரணியூரின் சமூகம், பொருளாதரம், கல்வி, ஆரோக்கியம், கலை, கலாசாரம் சார்ந்த அம்சங்கள் தனித்துவமானவை. மக்களின் மேம்பாட்டுக்கும், நிலையான வாழ்வுக்கும் வளம் சேர்ப்பவை.

**சமூக உறவுகள்**

பண்டு தொட்டு நிகழும் சமூக நிகழ்வுகளும், ஆலய நிகழ்வுகளும் கிராமத்தவரின் ஒருமைப்பாட்டின் அடிப்படையாகும்.

பிறப்பு, இறப்பு, திருமணம் முதலிய சடங்குகள் குடும்பங்களை மட்டுமல்ல, கிராமங்களையும் ஒன்றிணைக்கின்றன.

ஆலயங்களின் தேர்த் திருவிழா, வேட்டைத் திருவிழா, சப்பறத் திருவிழா என்பன மக்கள் கூட்டுறவின் அடிநாதமும் வேட்டைத் திருவிழா நகர் வலம் வரும்போது பல கிராமங்கள் ஒன்றிணைகின்றன. படையல்களும் பழவகைகளும் பகிர்ந்து உண்ணும் உயரிய விழுமியம் மீள வலியுறுத்தப்படுகிறது.

சிறியதும் பெரியதுமான பல குளங்கள் ஆழமாக்கல் (தூர்வாருதல்) பல கிராமங்களின் கூட்டு முயற்சியின் விளைவு அனுபவத்திலும் பங்களிப்பிலும் காணக்கூடியது.

## பொருளாதார மேம்பாடு

சுய தேவையைப் பூர்த்தியாகக் கொண்ட பொருளாதார முறைமையில் இன்றளவும் பண்டமாற்று முறையும் நடைமுறையிலிருக்கிறது. நெல், தேங்காய், ஒடியல், புழுக்கொடியல், பனங்கட்டி, கள், பதநீர், பனாட்டு என்பன எம் ஊர் விளை பொருட்கள்.

## ஆரோக்கிய நடைமுறைகள்

கிராமத்துக்கேயுரிய உணவும் மருத்துவமும் எம்மூரை வாழவைக்கின்றன. நெல்லும் தேங்காயும் பிரதான உணவுகள். பாலும் தயிரும் நெய்யும் சுய தேவைக்குக் கிடைக்கின்றன. ஒடியல் கூழும், ஒடியல் பிட்டும், பாணிப் பனாட்டும் ஆரோக்கியத்தைப் பேணுபவை. முக்கனிகளோடு வழித்தடங்களில் கிடைக்கும் நாவல் பழம், கரம்பைப் பழம், துவரம்பழம், ஈச்சம்பழம், நெல்லிக்காய் என்பன எமது போசாக்கின் உயிர் நாடி. பாலையடி, பழனியர், கண்வைத்தியம் என்போர் மருத்துவத்தின் வழிகாட்டிகள்.

## கல்வி, கலாசார அம்சங்கள்

சைவப் பாடசாலைகள், கிறிஸ்தவ பாடசாலைகள் எம் கல்வியை வளர்த்தவை. பண்டிதர்களும் பயிற்றப்பட்டவர்களும் எமது ஆசான்கள். அவர்களின் கல்விப் போதனைகள் சமூகத்தைச் சிறப்பாக வழிநடத்தின. அவர்களின் வழியில் புதிய தலைமுறை கல்விப் பரம்பரை உருவாக்கியவர் எமது ஆசிரியர் திரு. க. அம்பலவாணர் அவர்கள். கிராமத்தில் கற்றவர் குழாம் பாரிய அளவில் தோற்றம் பெறுவதற்கு அத்திவாரமாக அமைந்தவர் எமது ஆசான். வரணிக் கிராமத்தின் கல்வி எழுச்சிக்கு அடிகோலியவர் என்றால் மிகையில்லை.

கலை கலாசார அம்சங்களிலும் எம் ஊர் சிறப்பிடம் பெற்றிருக்கிறது. நாடகம், வில்லுப்பாட்டு, இசை என்பன கிராமத்தை புகழ் விளங்கச் செய்தன. பவளக்கொடி, தாத்தா, வரணியூரான், வசிட்டர் போன்ற பாத்திரங்கள் நாடகத்தின் நிலைபேற்றை வெளிப்படுத்துகின்றன. நாடக பாத்திரங்களின் பெயரே, அவர்களின் பெயராக

நிலைத்துவிட்டன. காசிநாதன் வில்லுப்பாட்டும் அம்பிகை இசைக் குழுவும் எம் ஊரைப் பெருமைப்படுத்துகின்றன.

கோயிற் திருவிழாக்களும் கலை விழாக்களும் கிராமத்தவர்களை மட்டுமல்ல குடா நாட்டையே ஒன்றிணைய வைத்தவை. சுட்டிபுரம் அம்மனில் சீர்காழி இசைக் கச்சேரியும் வரணிக் கலாமன்ற கலைவிழாவும் என்றும் மக்கள் மனங்களில் நிறைந்திருப்பவை.

கலாசாரத்தோடு இணைந்த விளையாட்டுக்கள் பல வயதுப் பிரிவினரையும் ஒன்றிணைத்ததோடு கிராமங்களையும் ஒன்றிணைத்தன. தாச்சி (கிளித்தட்டு), வாரோட்டம், சில்லு எறி, கிட்டிப்புள் (பொல்லி அடி), பசுவும் புலியும், நீச்சல் என்பன ஆரோக்கியத்துக்கும் உடற்பயிற்சிக்கும் ஒற்றுமைக்கும் வலுச் சேர்ப்பவை.

சித்திரை பௌர்ணமியில் ஆடும் "அன்ன ஊஞ்சல்" எம் ஊருக்கே தனித்துவமானது. பாட்டும் ஆட்டமும் விடிய விடிய பனையில் கட்டிய ஊஞ்சலில் ஆடும் அழகு தனி அழகு. மனத்துணிவும் பாட்டுத் திறனும், உடற் பலமும் ஊட்டுவது; கூட்டுவது.

உள்நாட்டுப் போரால் விளைந்த தலைமைத்துவ இடைவெளியும் இடப்பெயர்வும் கிராமத்தவரின் விழுமியங்கள் பலவற்றைச் சிதைத்துவிட்டன. புலம்பெயர்ந்தவர்கள் தேடும் செல்வம் சமூக, பிரதேச உறவுகளை விழுமியங்களை தளம்பச் செய்வது போல் தோன்றுகிறது.

புதிய தலைமுறையினர் மத்தியில் தனிமனித, குடும்ப, சமூக, பிரதேச, தேசிய மேம்பாடு பற்றிய விழிப்புணர்வும் உலக மயமாதலுக்கு முகங் கொடுக்கக் கூடிய கல்வியும் சிந்தனை மாற்றமும் ஏற்படுவதன் மூலமே எதிர்காலத்தை வெற்றிகொள்ள முடியும்.

***திரு. காசி. வல்லிபுரநாதன்***
*M.Phil.in Edu.(Jaffna)*

# ஆசிரியரும் தெறிப்பு சிந்தனையும்
## (Teacher and Reflective Thinking)

மனிதனிடத்தில் காணப்படுகின்ற பகுத்தறிவானது அவனை ஏனைய விலங்குகளின்றும் மேற்பட்ட நிலைக்கு இட்டுச் செல்வதற்கு உதவுகிறது. இந்த பகுத்தறிவானது மனிதனுக்குப் புடம் போட்டுச் சிந்திக்கும் ஆற்றலைக் கொடுத்திருக்கின்றது. இதன் அடிப்படையில் மனிதனால் ஒரு குறித்த செயல் தொடர்பாக என்ன நடத்திருக்கிறது? என்ன நடைபெறவேண்டியிருக்கிறது? என்ன விளைவு கிடைத்திருக்கின்றது? என்றவாறு சிந்தித்துச் செயற்பட முடிகின்றது?

இவ்வாறாக நடந்து முடிந்த ஒரு செயல் குறித்து மீள்பார்வை செய்வதையே மீள்நோக்கு / தெறிப்பு செயற்பாடு என்று குறிப்பிடப்படுகின்றது. இச்செயற்பாடு கற்பித்தல் செயற்பாட்டின் மிக அத்தியாவசியமானதொரு அங்கமாகும். குறிப்பாக வகுப்பறை முகாமைத்துவச் செயற்பாடுகளில் இதனது பங்கு மிகவும் வேண்டியதொன்றாக விளங்குகின்றது.

ஏனைய தொழில் சந்தர்ப்பங்களை விட ஆசிரியர்கள் அதிகளவு நேரத்தை மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காகச் செலவிட வேண்டும். ஆசிரியர்கள் மதிப்பீட்டுச் செயன்முறையில் ஈடுபடுகின்ற போதிலும், தமது சேவைக் கருமத்தொடர் சார்ந்த வகையில் அதன் வினைத்திறன் (Efficiency), விளைதிறன் (Effctiveness) மதிப்பிட்டுக் கொள்ளும் வகையிலான சுயமதிப்பீட்டு நடைமுறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது.

எனவே ஆசிரியர்கள் தங்களுடைய அன்றாட கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக அன்றைய தினம் வகுப்பறையில் நடந்தது என்ன? அது நன்றாக இடம்பெற்றிருக்கின்றதா? என்ன விடயங்கள் சவாலாக இருந்தன? என்ன மாற்றங்கள் தேவையாக இருக்கிறது? என்றவாறு தெறிப்பு சிந்தனை (Reflective Thinking) என்று கொள்ளப்படுகின்றது. இச்சிந்தனைகள் வகுப்பறையில் ஆசிரியர் ஆற்றவேண்டிய கருமங்கள், ஆசிரியர் தன்னளவில் பெற்றுக்கொள்ள வேண்டிய மாற்றங்கள் எனப் பல மாற்றங்களுக்கும், முன்னேற்றங்களுக்கும் வழிசமைக்கும் ஊடகமாகத் தொழிற்படும்.

ஆசிரியர்கள் மீது இன்று பல்வேறு அழுத்தங்கள், அவர்களைச் சிந்திக்க முடியாதளவுக்கு இருப்பதை மறுப்பதற்கில்லையாயினும், தெறிப்பு சிந்தனையானது மாற்றத்திற்கும், முன்னேற்றத்திற்குமான அடிப்படைத் தேவையாக உள்ளது என்பதையும் மறந்துவிட முடியாது.

ஆசிரியர்களது செயற்பாட்டில் சிறந்த ஆற்றுகைக்கும், அதிக விளைதிறனுக்கும் கற்பித்தல் உத்திகள் நேர்நிலை வகுப்பறை முகாமைத்துவம் சார்ந்த விடயங்களில் சமாந்தரமான முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இது ஒவ்வொரு ஆசிரியர்களினதும் உளப்பூர்வமான தெறிப்பு சிந்தனையின் எழுகையிலேயே (Drives

of the reflective thinking) தங்கியுள்ளது. எனவே ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது கற்பித்தல் கருமம் குறித்து தன்னைத் தானே சுயவியாக்கியானஞ் செய்து (Selfresctivism) கொள்வதில் உறுதியாக இருக்க வேண்டும்.

- மாணவரிடத்தில் நல்ல துலங்கலைக் கொண்டுவர எவ்வாறு தனது கற்பித்தலை சிறப்புறத் திட்டமிடுவது.
- எந்தக் கற்பித்தல் நுட்பம் அதிக பயன்விளைவு கொண்டதாக விளங்குகின்றது.
- எந்த வழிமுறை பயன் விளைவற்றதாக காணப்படுகின்றது.
- எனது வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்கள் குறித்தும் நான் சரியாக அறிந்து செயற்படுகின்றேனோ?
- கால நகர்ச்சிக்கு ஏற்ப நான் எனது அறிவை இற்றைப்படுத்திக் கொள்கின்றேனோ? (Up-to-date the knowledge)
- வகுப்பறையில் சுமுகமான உறவு / இடைவினை நிலவுகின்றதா?
- வகுப்பறையினுள் நுழையும் போது கற்பித்தலுக்கு ஏற்ப முன்னாயத்தங்களுடன் இருக்கின்றேனா?
- கற்றல் - கற்பித்தலுக்காக பயன்படுத்துகின்ற உள்ளீடுகளின் தரம் ஏற்புடையதாக உள்ளதா?

என்றவாறு தன்னளவில் சிந்தனைத் தெறிப்புக்கு உட்படும் போதுதான் ஏதாவது புதுமையாக ஆற்றுவதற்கும். அதற்கு ஏற்ற சிந்தனைத் திறப்பிற்கும் வழி பிறக்கும். ஆசிரியரிடத்தில் முயற்சி (Attempt), தெறிப்பு சிந்தனை (Reflective thinking) என்பவற்றிற்கு செயல்வடிவம் (Action form) கொடுக்கப்படும் போது தான் அவர்களது செயற்பாடுகளில் வினையாற்றலையும், மாணவர்களது துலங்கல்களில் உண்மையானதும், நிஜமானதும், நிதர்சனமானதும், பொருண்மையுடையதுமான பலன் விளைவுகளை எதிர்பார்க்க முடியும்.

ஆசிரியர்கள் தங்களது கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் வெற்றி பெற இருவகையான தெறிப்புக்கு உட்படல் வேண்டும் என்று கருதப்படுகின்றது. அவை

1. உடனடி மீள்பார்வை (Immediate Reflection)
2. பரந்த மீள்பார்வை (Comprehensive Reflection)

உடனடி மீள்பார்வை என்பது ஒவ்வொரு கற்பித்தல் செயற்பாடுகளையும் அடுத்து மாணவர்கள் சார்பாக என்ன நடந்தது? எது நன்றாக நடந்தது? அடுத்து மாணவர்கள் சார்பாக என்ன நடந்தது? நான் எவ்வாறு அடுத்த பாடவேளையில் நடந்து கொள்ள வேண்டும்? என்றவாறு ஒவ்வொரு பாட விடய கற்பித்தலின் பின்னர், ஒவ்வொரு நாளின் இறுதியில், ஒவ்வொரு வாரத்தின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் இறுதியில், ஒவ்வொரு வருட இறுதியில் என்றவாறு தனது செயற்பாடுகள் குறித்து மீள்பார்த்தலாகும்.

இறுதி மதிப்பீட்டுக்கருவியின் மாதிரி கீழ்வருமாறு அமையலாம்.

| நாளின் இறுதியில் (At the end of the day) |
|---|
| எது நன்றாக நடந்தது: ........................................................................ |
| ஆதாரம் / சான்று : ........................................................................ |
| எது நன்றாக இடம்பெறவில்லை : .......................................................... |
| ஆதாரம் / சான்று : ........................................................................ |
| செயற்பாடு : (நான், மாற்றத்திற்காக என்ன செய்ய வேண்டியுள்ளது) |
| ........................................................................ |
| ........................................................................ |

இவ்வாறு பெற்றுக் கொண்ட தெறிப்பு மாணவர் மத்தியில் சிறந்த துலங்கலைப் பிரதிபலிக்குமாயின் குறித்த கற்பித்தல் முறையும், நுட்பங்களையும், செயற்பாடுகளையும், தொடரலாம். அவ்வாறின்றி மாணவர் மத்தியில் உரிய துலங்கள் ஏற்படாதிருப்பின் ஆசிரியர் தனது தெறிப்புக் குறிப்பேட்டின் அடிப்படையில் தன்னுடைய கற்பித்தல் கருமங்களிலும், செயற்பாடுகளிலும் திட்டமிட்ட மாற்றங்களை உட்படுத்திக் கொள்வது அவசியமானது. இவ்வாறாக வாரத்தின் இறுதி, மாதத்தின் இறுதி, வருட இறுதி என்றவாறு தெறிப்புக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

பரந்த மீள்பார்வை என்பது அதிகம் கட்டமைக்கப்பட்டதொன்றாகும். இது ஆசிரியரது நாளாந்த கற்பித்தல் செயற்பாடுகளின் தெறிப்புக்கு புறம்பானதும், ஆசிரியரது கற்பித்தல் செயற்பிரமத்தின் பிரிதொரு அத்தியாயமுமாகும்.

இங்கு,

- வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்
- கற்பித்தல் கருமத்தொடர் சார்ந்த விடயங்கள்
- பௌதிக காரணிகளுடன் தொடர்புடைய விடயங்கள்
- பொதுவான விடயங்கள் என்பவை தொடர்பான மதிப்பீடுகளைத் தன்னளவு வியாக்கியானம் செய்து ஒவ்வொன்றையும் எவ்வாறு எதிர்காலத்தில் உச்ச அளவில் அடைந்து கொள்வது என்பது பற்றி மீள்பார்த்தலைக் குறிக்கும். உடனடி மீள்பார்வையானது தனித்து கற்பித்தல் கருமத்துடன் மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கும். ஆனால் பரந்த மீள்பார்வையானது கற்பித்தல் கருமத்திற்கு புறம்பாக, அதன் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற இணையான காரணிகள் சார்பில் கவனத்தைச் செலுத்துவதாக விளங்குகின்றது. இதனைச் செவ்வை பார்த்தற் பட்டியலின் (check list) துணையோடு தெறிப்புச் செய்யலாம். இவ்வாறு பெறப்படும் செவ்வை பார்த்தற் பட்டியலைத் தொழில் வழிப்படுத்துனர்கள் (Mentors), தன்னம்பிக்கைக்குரிய சகபாடிகள் (Trustworthly peers) ஆகியோருடன் அடிக்கடி ஆலோசனைக்கு எடுத்துக்

கொள்ளுதல் வேண்டும். இதனால் மாற்றத்திற்குரிய புதிய சிந்தனைகள், தீர்வுக்கான திட்டங்கள் கலந்துரையாடப்பட்டு செயற்படுத்தக் கூடிய நிலை உருவாகும்.

பரந்த மீள்பார்வைக்கான செவ்வை பார்த்தல் பட்டியலொன்றின் மாதிரி இவ்வாறு அமையலாம்.

**1.0 பொதுவான சமூக ஆரோக்கிய நிலை**

1.1 வரையறைகள் நேர்த்தியாக இருந்ததா

1.2 உபசரிப்பு திருப்தியாக இருந்ததா

1.3 அனைத்து மாணவரும் உட்படுத்தப்பட்டனரா

1.4 பாதுகாப்பை உறுதிப்படுத்தினேனா

1.5 குழுவாக இணைந்து செயலாற்றும் நிலை காணப்பட்டதா? etc.

**2.0 பௌதீக நிலை**

2.1 வகுப்பறையில் ஏதாவது இடையூறுகள் இருந்ததா?

2.2 பௌதிக சூழல் பொருத்தமானதாக இருந்ததா?

2.3 வகுப்பறை பாதுகாப்பாக இருந்ததா?

2.4 வகுப்பறை மகிழ்ச்சிகரமாக இருந்ததா? etc.

**3.0 கற்றல் நிலை**

3.1 கற்றலுக்கான எதிர்பார்ப்புக்கள் குறித்து கலந்துரையாடினேனா?

3.2 கற்றலுக்கான ஊக்கலை ஏற்படுத்தினேனா?

3.3 மாணவர்கள் பொறுப்புடன் செயற்பட்டனரா?

3.4 பொருத்தமான முறையில் கற்பித்தேனா?

3.5 மாணவர் விருப்புடன் கற்கும் நிலை இருந்ததா?

3.6 மாணவர் அனைவரையும் கண்காணிக்கின்றேனா?

3.7 உடனுக்குடன் பின்னூட்டல் வழங்கினேனா?

3.8 மதிப்பீடுகளை உரியமுறையில் வழங்கினேனா?

4.0 முகாமைத்துவம்

4.1 உரிய முறையில் வகுப்பை மேற்பார்வை செய்து வருகின்றேனா?

4.2 நடத்தைக் குழப்பங்களை இனங்கண்டு உரிய வகையில் தீர்த்துக் கொள்கிறேன்.

4.3 பிள்ளைகளதும், எனதும் கௌரவத்தை பாதுகாத்துக் கொள்கின்றேன்.

4.4 பிள்ளைகளுடன் பாரபட்வமின்றி நடந்து கொள்கின்றேன்.

4.5 மாணவர் அனைவரும் என்னை ஏற்றுக்கொள்ளும் வகையில் செயற்படுகின்றேன்.

4.6 மாணவர் விடயத்தில் பெற்றோரையும் உள்வாக்கிக் கொள்கின்றேன்.

4.7 மாணவர்களுக்கு உரிய சுதந்திரம் வழங்குகின்றேன்.

4.8 தண்டனையை (மூர்க்கத்தனமான) தவிர்க்கின்றேன்.

4.9 பிரச்சினை குறித்து உன்னிப்பாக அவதானித்து பொறுமை காப்பேன். etc.

குறிப்பு:

..........................................................................................................................

..........................................................................................................................

இவ்வாறாக தெறிப்புச் செயற்பாடுகளுக்கு உட்படும்போது பல விடயங்களுக்கு உடனடியாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும். சில விடயங்கள் பலத்த சவால்களுக்கு உட்பட்டதாயும், நீண்ட காலத்தை தீர்வுக்கு எடுப்பதாயும் இருக்கலாம். இவ்வாறான நிலைமைகளின் போது பிரச்சினைகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைத் தெரிவு செய்து செயல்நிலை ஆய்வுக்கு (Action Research) உட்படுத்துவதன் மூலம் அடுத்த கல்வியாண்டின் தொடக்கத்தில் உரிய மாற்றங்களைச் செய்து கொள்வதற்குரிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்றைய கட்டுருவாக்க வாத (Construtivism) சிந்தனையைக் கருத்திற்கொண்டும். நிலைமாற்று ஆசிரிய வகிபாகத்தினை (Transformation role of the teacher) கருத்தில் கொண்டும் ஆசிரியர்கள் தெறிப்பு சிந்தனைக்கு உட்பட்டு கற்பித்தலில் வினைதிறனையும், மாணவர்களது அடைவில் விளைதிறனையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஒவ்வொரு ஆசிரியர்களும் உறுதிகொள்வது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். இதனை முடியாத காரியம் என்றும், சுமையானது என்றும் கருதுபவர்கள் ஆசிரியர் சேவையை நாடாமலிருப்பதே சுகமானதாகும்.

**திரு. முருகேசு ஆனந்தராசா**
B.A. (Hons), PGDE (Dis), M.Ed, M.A
விரிவுரையாளர்,
யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரி.

Reference: * Positive classroom management - 2nd Edition
by : Robert Digiulio
"Reflective pravtice for better Teaching

* Improving Educational management
by : Nigal Bennett
Ron Glatter
Resalind Levacie.

## தரணி போற்ற வாழ்த்துகின்றேன்

என்னவென்று உங்களைச் சொல்ல - புகழ்
சொல்லவென்று ஒன்று இரண்டுமட்டுமல்ல...

ஒதுக்கி விட்ட இவ்வுலகில் - எமை
செதுக்கிவிட்ட சிற்பியன்றோ...

ஊக்கிவிக்க யாருமன்றியிருந்த - எமை
உருவாக்கிவிட்ட உத்தமரன்றோ...

திட்டித் திரிந்தவர் மத்தியிலே - எமை
தட்டித் தந்த தலைமகனன்றோ...

எட்டிப் பிடிக்கும் தூரம் வெற்றியென்று
கற்றுத் தந்த கலைமகனன்றோ...

பல்கலைக்கழகம் செல்ல எமக்கு
பல்கலை பயிற்றுவித்த பரமனன்றோ...

என்னவென்று உங்களைச் சொல்ல - புகழ்
சொல்லவென்று ஒன்று இரண்டுமட்டுமல்ல...

எங்கள் தாயாய்...தகப்பனாய்...
தனயனாய்...நண்பனாய்...நல் ஆசானாய்...

எங்களை வழி நடத்திய எங்கள் மதிப்புக்குரிய ஆசானுக்கு
இனிய நல்வாழ்த்துக்கள்.

எல்லாத்துக்கும் மிக்க நன்றி ஐயா !
உங்கள் சேவைக்கு

நீங்கள் தந்த கல்விக்கு
நன்றி சொல்வது மட்டும் போதாது

நான் என் ஆயுள் முழுவதும்
உங்களுக்கு கடமை பட்டுள்ளேன்

எத்தனை ஆயிரம் ஆசிரியர்கள் -ஆனால்
நோக்கம் இலட்சியம் ஒன்று தானே

என் மாணவன் முன்னேற வேண்டும்
தேர்ச்சிப்பெற வேண்டும் வெற்றி பெற வேண்டும்

ஆஹா! எத்தனை உயரிய எண்ணம்
நீங்கள் அல்லவா வணக்கத்துக்குறியவர்கள்

'தமிழ் போல் என்றும்
தரணி போற்ற வாழ்க'

**இவன் (நாகலிங்கம் கோவிந்தராசன்)**
என்றும் உங்கள் கீழ்படிவுள்ள மாணவன்.

## மனநிறைவைத் தந்த நிகழ்வுகள்...

01. 1974 - 1976 காலப்பகுதியில் என்னிடத்தில் தனிப்பட்ட முறையில் நான்கு பாடங்களையும் கற்ற மூன்று மாணவர்களும் க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றி முதற்தடவையிலேயே பல்கலைக் கழகம் சென்றமை இதனை அடுத்து தோற்றிய பல மாணவர்களும் முதற்தடவையிலேயே பல்கலைக் கழகம் சென்று சிறப்பாக வாழ்ந்தமை.

02. 1974 - 1976 காலப்பகுதியில் என்னிடம் க.பொ.த. (சா.த) பரீட்சைக்கு எட்டுப் பாடங்களையும் என்னிடத்தில் கற்று பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த. (உ.த) வகுப்பில் கற்று பல்கலைக் கழகம் சென்றமையும் பல்வேறு பதவிகளைப் பெற்று சிறப்பாக வாழ்ந்தமை.

03. நு/வெளிமட தமிழ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. (உ.த) வகுப்பில் கல்வி கற்ற பல மாணவர்களும் பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரிய நியமனம் பெற்றமை.

04. 1985 - 1988 காலப்பகுதியில் யா/வரணி மகா வித்தியாலயத்தில் என்னிடம் தமிழ், பொருளியல் கற்ற மாணவர்கள் பலரும் A, B சிறப்புத் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக் கழகம் சென்றமை.

05. 1989 - 2000 வருட காலப்பகுதியில் யா/விக்கினேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பொருளியல் பாடத்தில் A, B தர சித்திகளைப் பெற்றுப் பல்கலைக் கழகம் சென்றமை.

06. யா/விக்கினேஸ்வராக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் எல்லாப் பாடங்களிலும் A தரத்தில் சித்திகளைப் பெற்றும் பல்வேறு உயர் சித்திகளைப் பெற்றும் பல்கலைக் கழகம், கல்விக் கல்லூரிகள் ஆகியவற்றிற்குப் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் சென்றமை. 1994ஆம் ஆண்டு க.பொ.த. (உ.த) பிரிவில் விஞ்ஞானப் பிரிவில் 1 ஆம் இடம்பெற்றமையும் இதேபிரிவில் 2000ஆம் ஆண்டு 2ஆம் இடம் பெற்றமையும் (மாவட்ட மட்டத்தில்) மறக்க முடியாத நிகழ்வுகள் ஆகும்.

07. கரவெட்டிக் கோட்டக்கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய காலத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் சித்திவீத்தில் நல்லூர் யாழ்ப்பாணக் கோட்டங்களுக்கு அடுத்தபடியாகக் கோட்டம் இடம்பெற்றிருந்தமையைப் பத்திரிகைகளில் பார்த்தமை.

## நன்றியுடன் நினைவு கூரப்படுபவை

1. எனது மனைவியினதும் அம்மா, அப்பா ஆகியோரதும் இறுதி நிகழ்வில் வரணியிலும் கரவெட்டியிலும் வசிக்கின்ற உற்றார், உறவினர், அயலவர்கள், கல்விப் புலத்தைச் சார்ந்தவர்கள் எனது பழைய மாணவர்கள் மருத்துவத்துறை சார்ந்தவர்கள் பல்கலைக் கழகமாணவர்கள் உணர்வு பூர்வமாகப் பெரும் திரளாகக் கலந்து கொண்டமை.

2. எனது சுகதுக்கங்களில் குருபக்திமிக்க வரணிமாணவர்கள் என்னிடம் கல்வி கற்று நாற்பது வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் தூய குருபக்தியுடன், நன்றியுணர்ச்சியுடன் என்னைக் கௌரவித்து விழா எடுப்பதுடன் அதனை ஆவணமாகப் பதிவு செய்து வரணிப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு உத்வேகம் கொடுக்கின்றமை.

**கந்தர் அம்பலவாணர்.**
ஓய்வு நிலை
ஆசிரியர், அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி

# அறிவுநிதி க. அம்பலவாணர் அவர்களின் சேவை நலன்பாராட்டு வாழ்த்துப்பா

புண்ணியமாம் பூமித்தாய் தந்த நல்ல
இடைக்குறிச்சி எனும் இனிய நல் சிற்றூரினிலே
கந்த - வள்ளி திருமகனாய் அவதரித்து
வளர்ந்த இளம் சூரியனே வாழி வாழி

திண்ணிய நற்கல்வி நலம் யாவும் தந்து
எண்ணரிய உயர்வுகளை எமக்கு ஈந்து
உயர்த்திவிட்ட எங்கள் பெரும் ஆசான்
அம்பலவாணனே, அவனி உள்ளளவும் நீடுவாழி

உத்தமமாம் உயர்ந்த ஆசிரிய சேவையில்
உறுதியுடன் இணைந்து உயர்வு கண்டு - நல்
வித்திகராய் மாணவரை விளங்கவைத்த
தத்துவ ஞானியே நீடுவாழி வாழி

சத்தியத்தைப் பேணவல்ல மாணவரை
சிந்தனைகள் செய்து செதுக்கிவிட்ட உனை
வந்தனைகள் பல செய்து வாழ்த்துகின்றோம்
பந்தனைகள் அகன்று நீ வாழி வாழி

வரணி வளரிளம் வித்தகரை வளர்த்து - பின்
வடமராட்சிப் பதியின் கல்வி வளம் பெருக்கி
அதிபராய் மிளிர்ந்து அதிகாரியாய் உயர்ந்து
பணிகள் பல புரிந்திட்ட பண்பாளனே நீ வாழி

வளமான வாழ்க்கை நிலையாக வாழ
அவையில் அன்புடன் அகமகிழ் வோடு
விலகாத பேரின்பம் நிலையாக பெற்று
திடமாக வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

வாழிநின் சேவை நலம்
வாழ்த்துவோர்.
**கல்வி வளம்பெற்ற மாணவர்கள்**



நூலாக்க அனுசரனை

**திரு.திருமதி. க.சின்னராஜா**

தமிழ்ப்பூங்கா - 021 226 4014